கல்கி

KALKI 18-2-1973

45 காசு



'ஹார்லிக்ஸ்' பருக மறந்து விடாதீர்கள். குறிப்பாக இச்சமயத்தில் நீங்கள் இரண்டு பேருக்கான ஆகாரம் உட்கொள்ள வேண்டும்.



அயர்ச்சியைத் தாங்கும் சக்தியை அதிகரித்து, நாள்முழுதும் ஆரோக்கியத்தைப் பாதுகாக்கிறது.

கர்ப்பிணிகளுக்கு விசேடமான ஊட்டம் தேவைப் படுகிறது. அதை 'ஹார்லிக்ஸ்' அளிக்கிறது. ஏனென்றால் 'ஹார்லிக்ஸ்' அதிக சக்தி மற்றும் உடல் வலிமை தரும் புரதத்தை தாய்க்கும் அவள் கருவில் வளரும் சேய்க்கும் அளிக்கிறது. தவிர, அது எளிதில் செரிக்கக்கூடியது.

அதனால்தான் உலகெங்கும் சுமார் 100 வருடங்களாக டாக்டர்கள் கர்ப்பிணிகளுக்கும் பாலூட்டும் தாய்மார்களுக்கும் இதை சிபாரிசு செய்கின்றனர்.

முழுமையான ஊட்டம்பெற—
'ஹார்லிக்ஸ்'



'ஹார்லிக்ஸ்' ஊட்டத்திற்கு முக்கிய ஆதாரமாகும்: புரதம் மற்றும் கார்போஹைட்ரேட்டின் கலவையாகிய இது செரிக்கக்கூடியது. தாய்ப்பாலின் தரத்தை உயர்த்துவதிலும் தாயின் நலத்தை உறுதி செய்வதிலும் அது பெரும் பங்கு கொள்கிறது. அதிக சக்தி, நிம்மதியான உறக்கம், மற்றும் காலை வேளை அயர்ச்சியைப் போக்குவதற்கு நாள் தோறும் இரு முறை 'ஹார்லிக்ஸ்' அருந்த வேண்டுமென்று நான் சிபாரிசு செய்கிறேன்'



'ஹார்லிக்ஸ்'
பதிவு பெற்ற ட்ரேட்மார்க்

HL-5599A

கல்கி பொருளடக்கம்

பரிதாபி, மாசி 7 * பிப்ரவரி 18, 1973

சந்தா விவரம்	ஒரு வருடம்	ஆறு மாதம்
இந்தியா	ரூ. 23-00	ரூ. 11-50
இதர நாடுகள்	ரூ. 50-00	ரூ. 25-00
இலங்கை (இலங்கை நாணயம்)	ரூ. 27-00	ரூ. 13-50

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.



கல்கி

மலர் 32
இதழ் 29

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா
— பாரதியார்

பிரசங்கம் அதிகப் பிரசங்கமாயிற்று!


ஏக ஆசிய மாநாடு நடந்து முடிந்திருக்கிறது. பொருளாதாரத்தில் பின் தங்கியநிலை, ஜனத்தொகைப் பெருக்கம், ஐரோப்பிய ஏகாதிபத்தியத்தின்கீழ் சமீப காலம்வரை இருந்த கசப்பான நினைவுகள் ஆகிய பொதுவான கஷ்டங்கள் ஆசிய நாடுகளை ஒன்றுபடுத்தி யிருக்கலாம். பிப்ரவரி 5ந் தேதியும் அதைத் தொடர்ந்தும் டில்லியில் நடைபெற்ற இந்த மாநாட்டில் மேற்படி பிரச்னைகள் அலசப்பட்டதுடன் வேறு பல கருத்துப் பரிமாற்றங்களும் நேர்ந்துள்ளன. ஆயினும் இம் மகாநாட்டின் விளைவாக எந்த இனத்திலாவது ஆசிய நாடுகள் உருப்படியாக ஒன்றுபட்டுச் செயலுருவில் ஏதாவது சாதிக்கப் போகிறதா என்பதே கேள்வி. 'ஒரே உலகம்' என்ற பரந்த கொள்கைக்கு 'ஒரே ஆசிய' உணர்வு ஒருகால் ஊறு விளைவிக்கவும் கூடும்.


துரதிருஷ்டவசமாக நம் பிரதமரின் உரையிலேயே இந்த அபஸ்வரம் ஒலித்து விட்டது. ஏக ஆசிய மகாநாடு என்பதால் அதில் அமெரிக்காவுக்கு எதிராகப் பேச வேண்டும் என்று அவர் எண்ணி விட்டாரோ என்னவோ? வியட்நாமில் மாளாத போரும் நிறுத்தப்பட்டு ஓர் உடன்பாடு காணப்பட்டுள்ள இந்த நல்ல நேரத்திலே அந்தப் போரில் அமெரிக்கா மேற்கொண்ட போக்கைப் பற்றிப் பிரதமர் காரசாரமாகக் கண்டனம் தெரிவித்திருப்பது முற்றிலும் அநாவசியமாகும். ஒரு காலத்தில் நாம் 'ஹிந்தி — சீனி பாய் பாய்' கோஷம் போட்டவர்கள்தாம். ஐ.நா.வில் சைனுவுக்கு இடம் பெறுவதற்காக நாம் பிரம்மப் பிரயத்தனம் செய்தவர்கள் தாம். பிறகு சீனம் நம்பிக்கைத் துரோகம் செய்து நமக்குப் பகை நாடாயிற்று. ஆயினும் இன்றளவும் அதனுடன் நட்புறவுக்குச் சாத்தியக்கூறு உண்டா என்றே தேடி வருகிறோம். அப்படியிருக்க முன்பு சீனத்துக்கு விரோதமாக இருந்த அமெரிக்கா இப்போது அதனுடன் உறவு கொண்டாடுவதில் உள்ளர்த்தங்கள் இருந்தாலும்கூட அதைக் குத்திக் காட்டி விமரிசிக்க நாம் யார்? வியட்நாமில் அமெரிக்கா நடத்திய போர் காட்டுமிராண்டித்தனமானது என்றும், இவ்விதம் ஐரோப்பிய நாடு எதிலும் நடந்திருக்க முடியாது என்றும் பிரதமர் கூறியது மிகவும் உசிதக் குறைவான தாகும். ஆசிய நாடுகளையும் மேல் நாடுகளையும் அமெரிக்காவையும் அவர் இன அடிப்படையில் பிரித்துப் பேத உணர்ச்சியோடு பேசியிருப்பதாகவும், அமெரிக்கா ஒருபோதும் இவ்விதம் இனச் சார்புடன் பாரபட்சமாக நடந்து கொண்டதே இல்லை என்றும் அமெரிக்க அரசாங்கச் சார்பில் மிகுந்த மனக் கொதிப்புடன் ஆட்சேபம் தெரிவிக்கப் பட்டுள்ளது. அமெரிக்கப் பத்திரிகைகளும் பாரதப் பிரதமரின் அவசியமற்ற விமரிசனங்களை எதிர்த்து வன்மையாக எழுதியுள்ளன.

இந்தியாவுக்குப் புதிய அமெரிக்கத் தூதர் அனுப்பப்படவிருந்த அயனை சந்தர்ப்பத்தில் பிரதமர் இவ்விதம் அசம்பாவிதமாகப் பேசி யிருக்கிறார். தூதரின் வருகை இதனால் தாமதப்படலாம் என்று சிலர் நினைக்கும் அளவுக்கு எதிர் விளைவு இருந்திருக்கிறது. வங்காள தேசப் போரின்போது விரிசல் கண்ட இந்திய — அமெரிக்க உறவு மீண்டும் இசைவு பெறக் கூடும் என்று நம்பி நட்புக்கன்னி உதய ராகம் தொடங்கிய சமயத்தில் பிரதமர் பெரிய அபஸ்வரத்தைப் போட்டு விட்டார். வெண்ணெய் திரண்டு வருகையில் தாழியை உடைப்பதுபோல் செய்திருக்கிறார்.

நன்றி மறப்பது நன்றன்று. அமெரிக்கா முன்பு நமக்குச் செய்து வந்த அபரிமித உதவியை எந்நாளும் மறப்பதற்கில்லை. அதனால் அந்நாட்டுக்கே நாம் 'ஆமாம் பூசாரி' போட வேண்டும் என்பதில்லை. அமெரிக்காவுடன் நமக்கு அபிப்பிராய பேதமிருப்பின், அவசியம் ஏற்படுகையில் அதை ராஜநீதிக்குகந்த விதத்தில் எடுத்துக் கூறவேண்டியதே! ஆயினும் சற்றும் அவசியமில்லாதபோது கடும் தாக்குதல் மொழிகளால் அமெரிக்காவுக்கு எதிராகப் பேசுவது பண்புக்கும் ராஜதந்திரத்துக்கும் உகந்ததல்ல.

மேலும் ஆசிய நாடுகள் எல்லாம் எவ்விதத்திலும் ஒன்று சேர்ந்து செயல்படும் என்று எண்ணுவதற்கில்லை. இவ்வித மகாநாடுகளை ஏழை இந்தியா அனாவசியமாகக் கூட்டி வீண் செலவு செய்வதும் பிரயோசனமில்லை.


ஒரே ஆசியா நமது லட்சியம்!!
அம்மா ஆந்திராவை இரண்டு பண்ணு!


மந்திரமில்லே, தந்திரமில்லே, நல்லா கவனியுங்க.... இதோ வாக்காளர் சீட்டு....
இந்தத் தடவை உங்க கைவேலையைப் பார்த்துடறேன்!
பின்னாடி நான் கவனிச்சுக்கறேன்!
நானும் பாக்கறேன் லேன்!
திண்டுக்கல் இடைத் தேர்தல்

தமிழ் நாட்டிலே...

தீரன்

முதல்வரின் சுகாதாரக் காதல்


சென்னைக்கு அருகில் உள்ள தாம்பரத்தில் ஒரு புதிய திரைப்படக் கொட்டகையைத் திறந்து வைத்துப் பேசும்போது தமிழக முதல்வர், ''சென்னை நகரில் உள்ள சினிமா தியேட்டர்கள் பல, சுகாதார வசதியற்றவையாக உள்ளன. சுகாதார வசதியற்ற நிலையில் அவை, பொழுதுபோக்குக்காக வரும் மக்களை நோயாளிகளாக மாற்றுவதைச் சர்க்கார் அனுமதிக்காது. சர்க்காரின் இது சம்பந்தமான உத்தரவு பிறப்பிக்கப்படுவதற்கு முன்னதாகவே தியேட்டர் உரிமையாளர்கள் கவனித்து ஆவன செய்ய வேண்டும்'' என்று சுகாதாரத்தின் மேலும் மக்கள் மேலும் அக்கறை கொண்டு கூறியிருக்கிறார். பாராட்டுகிறோம்; வியக்கிறோம்.



ஆனால் தியேட்டர்களின் சுகாதாரத்தில் இவ்வளவு பிரியமுள்ள நம் முதல்வர் தியேட்டர்களைத் தவிர, சாக்கடை நடுவீதியில் கொப்புளிக்கும் நகரின் சில தெருக்கள், விளக்குகளில் பல்பு இல்லாமையினால் இருண்ட வீதிகள், 'பொது வசதிகளுக்காக' மக்களால் பயன்படுத்தி அசுத்தம் செய்யப்படும் பல பாதை ஓரங்கள் ஆகியவை பற்றியும் அக்கறை கொண்டு சம்பந்தப்பட்டவர்கள் மூலமாக நடவடிக்கை எடுத்தால் எவ்வளவோ நன்றாக இருக்கும். தியேட்டருக்கு வெளியே உள்ள சுகாதாரக் குறைபாடுகளையும் பற்றி முதல்வர் கவலைப்படுவது நல்லது. ஏனெனில், பொதுமக்கள் தியேட்டருக்கு உள்ளே கழிக்கும் நேரத்தைவிட அதிகமான நேரத்தை அதற்கு வெளியே உள்ள வீதிகளிலும், தெருக்களிலும், குடியிருப்புக்களிலும்தான் செலவழிக்கிறார்கள் என்பது முதல்வரும் அறிந்ததே. தியேட்டர்கள் படிப்படியாகத் தேசிய மயமாக்கப்படும் என்றும் முதல்வர் இவ்விழாவில் கூறியுள்ளார். தேசியமயமாக்கியபின் சுகாதார நிலை அபிவிருத்தி அடையப் போவதில்லை; இன்னும் மோசமாகி விடலாம்.

கவர்னர் உரை

தமிழ்நாடு சட்டமன்றத்தில் 'கவர்னர் உரை' என்ற சம்பிரதாய நிகழ்ச்சி பிப்ரவரி மாதத் தொடக்கத்தில் நடந்து முடிந்து விட்டது.



பேரறிஞர் ராஜாஜி அவர்களின் மறைவால் நாட்டுக்கு ஏற்பட்ட இழப்பு, தென்மேற்குப் பருவ மழைக் குறைவால் வந்த வறட்சி, புயல் சேதம், உணவுக் கொள்முதல், உரத் தேவை, மின்சார விசைத் தட்டுப்பாடு — முதலியவையெல்லாம் பற்றித் தமது உரையில் விவரித்த கவர்னர், விலைவாசிகள் கடுமையாக ஏறியிருப்பதை ஏனோ வற்புறுத்திக் கண்டித்துச் சொல்லவில்லை. தமிழ் நாட்டில் கத்தரிக்காய் விலை முதல் கடலெண்ணெய் விலை வரை ஏறி யிருப்பதை. 'தேசிய மட்டத்தில் மேற்கொள்ளப்படும் வரி விதிப்பு, நிதிக் கொள்கை பற்றிய முடிவுகளையொட்டியே விலைவாசிக் கொள்கை முடிவு செய்யப்பட வேண்டும் என்றும், விலைவாசி நிலவரம் உணவுப் பொருள்களின் விலைவாசிகளை ஒட்டியே இருக்கும் என்றும்' மழுப்பலாகக் கூறியிருக்கிறார். விவசாயிகள் போராட்டம் பற்றியும், வேறு பல முக்கிய பிரச்னைகள் பற்றியும் டிசம்பர் 2ந் தேதி சட்டசபையில் நடந்த அசம்பாவித நிகழ்ச்சிகள் பற்றியும் கவர்னர் உரையில் எதுவுமே குறிப்பிடப்படவில்லை. டிசம்பர் 2ந் தேதி நிகழ்ச்சிகள் பற்றி எதுவும் குறிப்பிடாததைக் கண்டித்து, ஸ்தாபன காங்கிரஸ், சுதந்திரா நீங்கலான மற்ற எதிர்க் கட்சிகள் வெளிநடப்புச் செய்தன. பல குறைகளைச் சொல்லாமலும், சொல்லிய குறைகளுக்கு என்ன பரிகாரம் என்பதை விளக்காமலும் கவர்னர் உரை அமைந்திருப்பதால் மேலே கூறிய கட்சிகள் அந்த உரையைப் பகிஷ்கரித்ததாக அதன் தலைவர்கள் கூறியிருக்கிறார்கள். கவர்னர் உரையில் அரசின் சாதனைகளைக் கூறும் பகுதி பெரிதாகவும் குறைகளைக் கூறும் பகுதி சிறிதாகவும் இருப்பதுதான் சம்பிரதாயமானால் யார் என்ன செய்ய முடியும் ?

பஞ்சாயத்துக்களின் அதிகாரம்

மத்திய அரசிடமிருந்து தங்களுக்கு மிகுந்த உரிமைகளையும், அதிகாரங்களையும் கோரும் மாநில அரசாங்கமே, தன்கீழ் உள்ள பஞ்சாயத்துக்களின் அதிகாரங்களை ஒவ்வொன்றாகத் தான் கைப்பற்றி எடுத்துக் கொண்டு வருகிறது என்று காங்கிரஸ் மேல் சபை உறுப்பினர் திரு என். சுந்தரேசத் தேவர் கூறியிருக்கிறார். பஞ்சாயத்துக்களுக்கு உரிய அதிகாரங்களை ஒவ்வொன்றாகப் பறித்துக் கொண்டு தனக்கு மேலும் மேலும் புதிய அதிகாரங்களும், உரிமைகளும் வேண்டும் என்று கேட்பது வேடிக்கையா யிருக்கிறது.'' எனக்கு மேலுள்ளவர்கள் எல்லா அதிகாரங்களையும், உரிமைகளையும் எனக்கு விட்டுக் கொடுக்க வேண்டும், என் கீழ் உள்ள

திருக்குடந்தையில் மாசிமகப் பெருவிழா

காவிரியன்னையின் அருள் பார்வை பெற்ற தஞ்சை மாவட்டத்தில் கும்பகோணம் கணக்கற்ற கோயில்கள் கொண்ட நகரம். இந்தக் குடந்தை மாநகரில் மங்களநாயகியுடன் வீற்றிருக்கும் ஆதி கும்பேசுவரருக்கு மாசிமகப் பெருவிழா பிப்ரவரி எட்டாந் தேதியிலிருந்து பிப்ரவரி இருபதாம் தேதி வரை திருத் தேரோட்டத்துடன் விமரிசையாக நடைபெறுகிறது. இவ்வைபவத்தில் ஆஸ்திகப் பக்தர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டும். இந்தத் திருத் தேரோட்டக் கைங்கரியத்துக்கு நிதி உதவ விரும்பும் பக்தர்கள் கீழ்க்கண்ட விலாசத்துக்கு அனுப்பி வைக்கலாம்.

நிர்வாக அதிகாரி, ஸ்ரீ ஆதிகும்பேசுவர சுவாமி திருக்கோயில், கும்பகோணம்.

வர்களுக்கு நான் எந்த அதிகாரத்தையும் தர மாட்டேன், உள்ள சில அதிகாரங்களையும் எடுத்துக் கொள்வேன்'' என்பது விநோதமாயிருக்கிறது அல்லவா ? மேலவை உறுப்பினர் சுந்தரேசத் தேவர் இக்கருத்து மூலம் மாநில சுயாட்சி கோரும் தி.மு.க., பஞ்சாயத்துக்களுக்கு வெறும் சுயாட்சிகூடத் தர விரும்பாததை நன்ருகச் சுட்டிக்காட்டியிருக்கிருர் என்றே தோன்றுகிறது.

பால்கிவாலாவின் உரை

சென்னையில் சமீபத்தில் சொற்பொழிவாற்றிய வழக்கறிஞர் பால்கிவாலா 'வறுமை ஒழிப்பு' என்ற பெயரில் நம் நாட்டில், 'செல்வ ஒழிப்பு' நடைபெற்று வருவதை நன்கு விளக்கியிருக்கிருர். ''சமூகநீதி என்பது வருமானமும் செல்வமும் நியாயமான முறையில் விநியோகம் ஆவதுதான். அதில் வேலை கிடைப்பது, வாழ்க்கைத் தரம் அபிவிருத்தி ஆவது ஆகிய மற்ற இரண்டு அம்சங்களும்கூட அடங்கியிருக்கின்றன. இந்தியாவில் 1955க்கும் 65க்கும் இடையே வளர்ச்சி விகிதம் எட்டு சதவிகிதம். 68க்கும் 70க்கும் இடையே தீவிர இடதுசாரிக் கொள்கைகள் கடைப்பிடிக்கப்பட்டதன் விளைவாக அந்த வளர்ச்சி விகிதம் ஏழு சத விகிதமாகக் குறைந்து போய் விட்டது. 70க்கும் 72க்கும் இடையே அது மூன்று சத விகிதமாகிவிட்டது! உலகிலுள்ள பின்னடைந்த நாடுகளில் எல்லாம் இது மிகக் குறைந்த விகிதமாகும். இன்று உலகில் எழுபத்தைந்து நாடுகள் பின்னடைந்த நாடுகளாக உள்ளன. அவைகளில் கீழேயிருந்து எண்ண ஆரம்பித்தால் இந்தியா ஆருவது நாடாக இருக்கிறது. அதாவது உலகில் உள்ள மிக மிகப் பின்னடைந்த ஆறு நாடுகளில் இந்தியாவும் ஒன்ருக உள்ளது. இதே விகிதாசாரத்தில் போனுல் நாம் நமது நாட்டின் வறுமையை ஒருபோதும் ஒழிக்கவே முடியாது. வறுமை ஒழிப்பு என்கிற பெயரிலே இன்று நாட்டில் நடப்பதெல்லாம் செல்வ ஒழிப்புத்தான். செல்வ விநியோகம் என்ற பெயரில் வறுமை விநியோகம்தான் நாட்டில் நடக்கிறது. தற்போதுள்ள நம் நாட்டின் பொருளாதாரத் தொல்லைகள் அகல வேண்டுமாளுல் பன்னிரண்டு சதவிகித வளர்ச்சி வேண்டும். இது ஓர் அதிசய நிகழ்ச்சியோ, நடக்க முடியாத நிகழ்ச்சியோ அல்ல. ஈரான், தாய்லாந்து, தைவான் போன்ற நாடுகள் பன்னிரண்டு சதவிகித வளர்ச்சியை ஸ்திரப்படுத்திவிட்டன. இந்தியாவிலும் இது நடக்கக் கூடியதுதான். இந்தியா தனது வளர்ச்சி விகிதத்தை விரைந்து அதிகப்படுத்தா விட்டால் பெரும்பான்மையான இந்திய மக்களுக்கு வயிருர இரண்டு வேளை உணவு மட்டுமே சரியாகக் கிடைக்க இன்னும் முப்பது ஆண்டுகள்கூட ஆகிவிடலாம். நாணயமான, திறமையான தொழிலகங்கள் அவை அரசாங்கத் தரப்பில் ஆனுலும், தனியார் தரப்பிலானுலும் நன்கு நடக்க அனுமதிக்கப்பட்டால் இந்தப் பன்னிரண்டு சத விகித வளர்ச்சி கைகூடிவிடும். லைசென்ஸுகளை அரசாங்கம் காலா காலத்தில் வழங்காமல் தாமதப்படுத்துவதனுல் தொழில் உற்பத்தி பாதிக்கப்படுகிறது. சுதந்திரமான ஜனநாயகத்தில் சோம்பேறியும், திறமையுள்ளவனும் ஒரே வருமானம் பெற வேண்டும் — அப்படிப் பெறுவதே சமதர்மம் — என எதிர்பார்க்கக் கூடாது. இப்போது இந்தியாவில் நூற்றுஎழுபது லட்சம் பேர் வேலையின்றி இருக்கிருர்கள். இது 1980 வாக்கில் முந்நூற்று எழுபது லட்சமாகப் பெருகிவிடும். வேலையில்லாதோர் பெருகும் நாட்டில் சமூகநீதி கிடைக்காது. சுதந்திர ஜனநாயகத்தில் செல்வத்தை உற்பத்தி செய்யாமலே விநியோகம் பற்றியும் சமப் பங்கீடு பற்றியும் எண்ணிப் பார்க்கவே முடியாது'' என்றெல்லாம் மணி மணியான சிந்தனைக்குரிய கருத்துக்களைக் கூறிய திரு பால்கிவாலா தமது பிரசங்கத்தின் தொடக்கத்தில், ''தமக்குச் சரி என்று பட்டதைத் துணிந்து கூற ராஜாஜி அளவுக்குக் கஷ்டப்பட்டுப் பாடுபட்ட மேதை உலகில் இன்று வேறு எவருமே இல்லை. அப்படிப்பட்ட பெரியவர் வாழ்ந்த இடம் என்ற பெருமையைத் தமிழ்நாடு இனியும் நிலைநாட்ட வேண்டும்'' என்று அமரர் ராஜாஜி அவர்களுக்குப் புகழாரம் சூட்டி அஞ்சலி செலுத்தினுர்.

மின்சாரவாரிய வேண்டுகோள்

பொதுமக்களுக்கு மின்சாரத் தட்டுப்பாடு உள்ள இந்தக் காலத்தில் 'மின்சாரத்தைக் குறைவாக உபயோகிக்க வேண்டும்'

என்று அறிவிக்கக் கருதித் தமிழ்நாடு மின்சார வாரியம் யாருக்கும் அர்த்தம் புரியாத ஒரு பத்திரிகை விளம்பரத்தைக் 'கவிதை' என்று கருதப்படும் வடிவில் வெளியிட்டிருக்கிறது. அந்த விளம்பரத்தைப் படிக்கும் எந்தப் பாமரனும் அதைப் புரிந்துகொள்ள முடியாத அரை வேக்காட்டுக் கடுமை நடையில்,


''மின்விசையை அளவாக மேதினி
யில் செலவழிப்பார் தன் நாடும்
உயர்ந்திடவே தனிப்பாடு பட்டோ
ராய் என்நாளும் எவ்வுயிரும்
ஏத்திடுமே ஏற்றமுடன் பொன் நாளும்
பூரிக்கப் பூதர்களாய் திகழ்வாரே''

—தமிழ்நாடு மின்சாரவாரியம்

என்று விளம்பரம் கொடுத்திருக்கிறார்கள். இதில் 'என்நாளும்' பிழை. மேதினி என்றால் உலகம் என்று பொருள். உலகிலேயே மின்சாரத்தைக் குறைவாகச் செலவழிக்கும்படி விளம்பரம் கொடுக்கத் தமிழ்நாடு மின்வாரியத்துக்கு என்ன அக்கறையோ தெரியவில்லை. ஓர் அரைகுறைக் கவிதை நடையில் எழுதப்பட்டிருக்கும் இந்த விளம்பரப்படி, ''மின்சாரத்தைக் குறைவாகப் பயன்படுத்துகிறவர்களின் நாடு உய்யும். அப்படிக் குறைவாகப் பயன்படுத்துகிறவர்களை எந்நாடும் எவ்வுயிரும் புகழும். அப்படிக் குறைவாக மின்சாரத்தைப் பயன்படுத்துகிறவர்கள் ஏற்றம் அடைந்து நாள்தோறும் பொன் (தங்கம்) பெருகிப் பூதர்களாக(?)த் திகழுவார்கள்'' என்று அர்த்தமாகிறது. மின்சாரம் இல்லாமல் வீடுகள் இருண்டு, தொழில்கள் பாதிக்கப்பட்டு, விவசாயம் கெட்டுச் சீரழியப்போகிறது என்று நாம் எல்லாம் பயப்படும்போது, 'பொதுமக்களுக்கு ஒரு வேண்டுகோள்' என்ற தலைப்பில் மின்சார வாரியம் உலகுக்கே (மேதினிக்கே) வெளியிட்டிருக்கும் இந்த அறிவிப்பு அல்லது விளம்பரம் (தினமணி 5–2–73, 7ம் பக்கம்) பிரமாதமான நகைச்சுவைதான். மின்சாரத்தை மேதினியில் (தமிழ்நாட்டில் மட்டுமல்ல) குறைவாக உபயோகிப்பவர்களை எந்நாடும் எவ்வுயிரும் புகழ்வதுடன், அவர்கள் வீட்டில் பொன் பெருகி அவர்கள் பூதர்களாய்த் திகழ முடியுமானால் யாராவது அந்த வாய்ப்பை நழுவ விடலாமா? மேதினிவாசிகளே! நழுவ விடாதீர்!

போலி வாக்காளர்கள்

அரசு அதிகாரிகளின் உடந்தையுடன் திண்டுக்கல் லோகசபைத் தொகுதியில் போலி வாக்காளர்களைச் சேர்ப்பதில் தி.மு.க. கட்சியினர் சுறுசுறுப்பாகச் செயல்பட்டு வருவதாக



ராஜாஜி சிந்தனை

கோபத்தால் புத்தி மழுங்கிப் போகும். கோபத்துக்கு வசப்பட்டு விட்டால் உண்மையைக் காணும் சக்தியை இழந்து விடுகிறோம். அதனின்று பிறகு நாசம் அடைந்துவிடுவோம் என்பது சாஸ்திரம். இது கதையில் சொல்லப்பட்டிருக்கிறது. இதற்கு வாலியின் கோபாவேசமும் முடிவும் உதாரணம் ஆகின்றன. சுக்ரீவன் தான் செய்த காரியங்களை வணக்கமாகவும் உண்மையாகவும் சொல்லிப் பார்த்தான். ஆனாலும் அது வாலியின் புத்தியில் ஏறவில்லை. காரணம், வாலியின் அடங்காக் கோபம்.

சுக்ரீவனும் அவசரப்பட்டுத் தன் தமையன் மாண்டான் என்று தீர்மானித்து விட்டான். அசுரர்கள் வந்து தன்னையும் கொன்று விடுவார்கள் என்று பயந்து குகை வாயிலை அடைத்துப் போட்டு ஊர் திரும்பிவிட்டான். ராஜ்யாதிகாரம் பெற வேண்டும் என்று முதலில் ஆசைப்படவில்லை. ஆயினும் பிரஜைகள் நிர்ப்பந்தித்ததால் பிறகு உடன்பட்டுவிட்டான். ஆசை வலையில் சிக்கினான். தீர ஆலோசியாமல் நடந்து கொண்டான். அதனால் கஷ்டத்தில் அகப்பட்டுக் கொண்டான். தீர ஆலோசிக்காமல் செய்யும் காரியங்கள் அனர்த்தத்தில் முடியும் என்பது சுக்ரீவனுடைய கதையினின்று அடைய வேண்டிய உபதேசம்.


பிறர் சொத்துக்கு ஆசைப்படலாகாது. ஆசையை அடக்கியாள்வது மிகக் கடினம். இதில் முழு வெற்றி அடைவதற்கு வெகு ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். பரதனையும் பட்டம் கட்டிக் கொள் என்று மந்திரிகளும் பிரஜைகளும் அயோத்தியில் வற்புறுத்தினார்கள். ஆயினும் அவன் ஒப்புக்கொள்ளவில்லை. இது பரதனுடைய சிறப்பு. சுக்ரீவனோ ஒப்புக் கொண்டுவிட்டான். அதனால் துன்பம் அடைந்தான். பரதன், வேண்டாம் என்று மறுத்துப் பெருங் கீர்த்தி அடைந்தான்.

இராமாயணத்தில் ஒவ்வொரு கட்டத்திலும் நாம் சாதாரண வாழ்க்கையில் பின்பற்ற வேண்டிய தருமம் விளக்கப்பட்டிருக்கிறது. விளக்கம் சில இடங்களில் நேர்முகமான விளக்கமாக இருக்கும். சில இடங்களில் நேராக எடுத்துக் காட்டாமல் குறிப்பாகக் கிடக்கும். பக்தியோடு சிந்தனை செய்தால் விளங்கும்.

வும், அப்படிப்பட்ட தவறுகளை உடனே தடுத்து நிறுத்த வேண்டும், அல்லது தவறுகள் ஒழுங்கு செய்யப்படும் வரை தேர்தலை ஒத்திப் போட வேண்டும் என்றும் திரு காமராஜ் அவர்களும் திரு எம். கல்யாணசுந்தரம் அவர்களும் வருத்தப்பட்டுக் கண்டித்திருக்கிறார்கள். உடனே தலையிட்டு நிலைமையை ஒழுங்கு செய்யும்படி தேர்தல் கமிஷனரையும் அவர்கள் வேண்டிக் கொண்டிருக்கிறார்கள். இரு தலைவர்களும் செய்துள்ள எச்சரிக்கையைத் தேர்தல் கமிஷனர் கவனித்து உடன் தலையிட்டு ஆவன செய்ய வேண்டும். ஒரு தேர்தலில் எப்படியாவது ஜெயிக்க வேண்டும் என்பதற்குத் தி.மு.க. போன்ற ஒரு கட்சி என்னென்ன தவறுகள் செய்ய முடியும் என்பது ஊரறிந்த உண்மையாகும். கடந்த காலங்களின் அனுபவங்களே இதற்குச் சான்று. அதிகார யந்திரத்தைத் துஷ்பிரயோகம் செய்து இப்படிக் காரியங்கள் நடத்துவது, 'சைதாப்பேட்டை வேலை' என்று கடந்த பொதுத் தேர்தலின் போது வர்ணிக்கப்பட்டது ஞாபகம் இருக்கலாம்.

நெசவாளிகள் சிரமம்

சேலம் கைத்தறி நெசவாளிகள் போராட்டம் சூடு பிடித்திருக்கிறது. நூல் விலை உயர்வால் நெசவாளர்களின் சிரமங்கள் அதிகமாகி இருக்கின்றன. ''பல நெசவாளர்கள் பட்டினியால் மடிந்து போவதைவிடத் தி.மு.க.வை எதிர்த்துப் போராடியாவது மடிய வேண்டும்'' என்று நெசவாளர் போராட்டக் குழுவின் அமைப்பாளரான குப்புறு கூறியிருக்கிறார். நூல் விலையைக் கட்டுப்படுத்தக் கோரி கைத்தறி நெசவாளர்கள் பல மாதங்களாகப் போராடியும் பயனில்லை. நெசவாளர்களுக்கு அளித்த வாக்குறுதிகளை அரசு காப்பாற்றத் தவறிவிட்டது. 'நெசவாளர்களுக்கு அளிக்கப்படும் கார்டு மூலம் கட்டுப்படுத்தப்பட்ட விலைக்கே நூல் தரப்படும்' என்று அமைச்சர் மாதவன் கூறிய வாக்குறுதி செயற்படுத்தப்படவில்லை என்று நெசவாளர்கள் மிகவும் கோபமாக இருப்பதாகத் தெரிகிறது. நிலைமை இப்படி இருக்க, தி.மு.க. சார்புள்ள நெசவாளர் சங்கங்களுக்கு மட்டும் நூல் ஒதுக்கீடு முறையாகச் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர்கள் அதை மார்க்கெட்டில் அதிக விலைக்கு விற்று லாபம் சம்பாதிப்பதாகவும் புகார்கள் கூறப்படுகின்றன. இதைக் கண்டித்துச் சேலம் கைத்தறி நெசவாளர் வேலை நிறுத்தம் மேற்கொண்டுள்ளனர். ''போராட்டத்தின் போது யாரோ நிகழ்த்திய வன்முறைகளுக்காகப் போலீஸார் நெசவாளர்களைத் துன்புறுத்தியும், இருநூறு நெசவாளர்கள் மேல் வழக்குப் போட்டும் இருக்கிறார்கள். இது மிகவும் கொடுமையான காரியமாகும். நெசவாளர்கள் இதனால் தளராமல் மேலும் போராடுவார்கள்'' என்று மேற்படி குழு அமைப்பாளர் அறிவித்திருக்கிறார். தி.மு.க சார்பான நெசவாளர் சங்கங்கள் நூலை அதிக விலைக்கு விற்பது உண்மையானால் அரசு அவர்கள் மேல் பாரபட்சமின்றி நடவடிக்கை எடுக்க வேண்டும்.



மாயை

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கராசாரிய சுவாமிகள்

"உலகத்தை மாயை என்று சொல்கிறீர்களே? இந்த உலகத்தில் இத்தனை காரியங்கள் கண்கூடாக நடந்து கொண்டிருக்கும்போது இதை எப்படி மாயை என்று சொல்லலாம்?" என்று கேட்கிறார்கள்.

மாயை என்றால் அடியோடு இல்லாத வஸ்து என்று நினைத்துக் கொண்டு இப்படிக் கேட்கிறார்கள். ஆனால் மாயை என்பது அடியோடு இல்லாத வஸ்து (அத்யந்த அஸத்) அல்ல. முயல் கொம்பு அல்லது மலடி மகன் என்று சொன்னால் உடனே அது அடியோடு இல்லாத வஸ்து என்று தள்ளி விடுகிறோம். மாயை அப்படி இல்லை. அது இருப்பதாக நினைக்கிறமட்டில் இருப்பதாகவே தோன்றும். அது முயல் கொம்பு மாதிரி இல்லை. கானல் நீர் மாதிரியானது. கானல் நீர் கண்ணுக்குத் தெரிகிறது. ஆனால் உண்மையில் அதில் ஜலம் இல்லை. அதைக் குடித்து நாம் தாக சாந்தி செய்து கொள்ள முடியாது. கானல் நீர் உண்மையான ஜலம் இல்லை என்று அறிந்தவர்களுக்கும் கூடக் கானல் நீர் தெரியத்தான் செய்கிறது. அவ்விதமே உலகை மாயம் என உணர்ந்த ஞானிகளுக்குக் கூட லோகம் தெரியத்தான் செய்கிறது என்று சொல்வதுண்டு. ஆனால் அது நிரந்தர சத்தியமல்ல என்று அவர்கள் அறிவார்கள்.


ஒரு பழுதையைப் பாம்பென்று தவறாக எண்ணுகிறோம். பழுதையில் பாம்பு இல்லை என்பது உண்மை. இருந்தாலும் கூட அதைப் பாம்பாக எண்ணிய மட்டும், அந்தப் பழுதையில் இல்லாத பாம்பே நிஜமான பாம்பு உண்டாக்குகிற அத்தனை பயத்தையும், பதற்றத்தையும் நம்மிடம் உண்டாக்கி விடுகிறது. பாம்பு மெய்யாக இல்லாத போதிலும் நமக்கு வியர்த்து விறுவிறுத்ததும், நாம் பயப்பிராந்தி அடைந்ததும் உண்மையே. உலகம் உண்மையில் நிரந்தர சத்தியமாக இல்லாதபோதிலும் அதையே நாம் சத்தியமாக எண்ணுகிறமட்டில் இவ்விதமே சகல காரியங்களும் நடக்கின்றன. பழுதையைப் பழுதை என்று தெரிந்து கொண்டவுடன் பயம் ஓடிப்போவது போல் உலகமும் பிரம்மத்தைச் சார்ந்த ஒரு தோற்றமே, அதற்கு ஆதாரமான பிரம்மம் ஒன்றே நிரந்தர உண்மை என்று அறிகிறபோது காரியங்கள் எல்லாம் நின்று போகின்றன.

அடியோடு இல்லாத வஸ்துவல்ல உலகம். ஞானம் வருகிறவரையில் உள்ள தோற்றம் அது. கனவு காண்கிற வரையில் கனவு மெய்யாக இருந்து, நாம் விழித்துக் கொண்ட பின் நசித்துப் போவது போல், நாம் அஞ்ஞானத்தில் தூங்கிக்கொண்டிருக்கிறவரையில் உலகம் மெய்யாக இருந்து நாம் ஞான நிலையில் விழித்துக் கொண்டவுடன் மறைந்து போகிறது. இவ்வாறு அப்பட்டப் பொய்யாக இல்லாமல், தோன்றி மறைகிற தாற்காலிக உண்மையாக உள்ள உலகத்தை 'அத்யந்த அஸத்' என்று சொல்லாமல் 'பிராதிபாஸிக சத்தியம்' என்பார்கள். கிளிஞ்சலில் வெள்ளி மினுமினுப்பது போல் பிரம்மத்தில் தாற்காலிகமாக உலகம் மினுமினுக்கிறது.

மாயை என்பது ஞானிக்குப் பூஜ்யம் (zero) தான். ஆனால் ஞானம் வராத நிலையில் உள்ள ஜீவன் தன்னை ஒரு தனி எண்ணாக வைத்துக் கொண்டு பக்கத்தில் இந்தப் பூஜ்யத்தைச் சேர்த்துக் கொள்கிறான். ஓர் இலக்கத்துக்குப் பக்கத்தில் வருகிற பூஜ்யம் அதைப் பத்து, இருபது, நூறு, ஆயிரம் என்று ஆக்குவது போல் இந்த அஞ்ஞானிக்கு மாயையே பலவாக விரிந்த சத்திய வஸ்துக்களாக — உலகமாக — தோன்றுகிறது.

ஞானியே உள்ளது உள்ளபடி பார்க்கிறான். ஒரே சர்க்கரையினால் பல பொம்மைகள் செய்திருக்கிறது போல் ஒரே பிரம்மம் இத்தனையும் ஆகியிருக்கிறது. சர்க்கரையினால் பாகற்காய் பொம்மை செய்து வைத்திருந்தால் விஷயம் தெரியாத குழந்தை அது கசக்கும் என்று ஓடிப் போகும். கசப்பு வஸ்துவாகத் தோன்றுகிற அதுவும் உண்மையில் மதுரமான சர்க்கரை தான். உலகம் எல்லாம் ஆனந்த மயமான பிரம்மம் ஒன்றே என்று ஞானி அறிவான். நமக்குக் கசப்பு அவனுக்கு இனிப்பு. நமக்குக் கறுப்பு அவனுக்கு வெளுப்பு. 'நமக்குப் பகல் அவனுக்கு இருட்டு' என்று கிருஷ்ண பகவான் சொல்கிறார். பிரம்மம் என்கிற வெளிச்சமே நமக்கு இருட்டாக இருக்கிறது. இருட்டான மாயைதான் நமக்கு வெளிச்சமாகத் தெரிகிறது. இதெப்படி முடியும் என்று கேட்கலாம். மாயையும் பிரம்மத்தைச் சார்ந்து அதனிடமிருந்து சிறிது பிரதிபலிப்பான ஒளி பெறுகிறது. இந்தக் குறைந்த ஒளிதான் நம் குறைந்த அறிவுக்கு எட்டுகிறது. சுமாரான வெளிச்சத்தில்தான் புத்தகத்தின் கறுப்பு எழுத்துக்கள் தெரியும். ஜொலிக்கிற சூரிய வெளிச்சத்தில் நேரே புத்தகத்தைப் பிடித்தால் எழுத்தே தெரியாது. நமக்கு மாயையின் அற்பப் பிரகாசத்தில் உலக காரியங்கள் தெரிகின்றன. ஞானியின் ஆத்ம பிரகாசத்தில் அவை மறைந்து போகின்றன. ஞானியின் பகல் நமக்கு இரவு என்பதன் அர்த்தம் இதுவே.


NEW!
SUPER
Surf
FOR SUPER WHITENESS
ஒரே ஒரு சலவையில்
ஸூப்பர் ஸர்ஃப், வேறெந்த
சலவைப் பவுடரையும் விட
அதிக வெண்மை தருகிறது!
அமோகமான சலவைத் திறன் படைத்தது
ஸூப்பர் ஸர்ஃப். கண்மறைவான அழுக்குகளையும்
அகற்றிவிடும். காண்போர் பொறாமைப்படும்
கற்பனைகடந்த வெண்மை. கேட்பானேன்,
இந்தியாவின் தலைசிறந்த ரகம்:
ஸூப்பர் ஸர்ஃப்!
ஒப்பற்ற வெள்ளைவெளேர் சலவைக்கே ஸூப்பர் ஸர்ஃப்,
(வெண்மையூட்டும் சாதனம் எதுவும் சேர்க்கத் தேவையில்லை)
இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு
லின்டாஸ்-SU. 117-140 TM



11. பட்டாபியின் பதவி மோகம்

சூரியாவைப் பார்த்து ஒரு நிமிஷம் திகைத்துப் போய் பேசாமல் நின்ற லலிதா மறு நிமிஷம் ஒருவாறு சமாளித்துக் கொண்டு முகத்தில் மலர்ச்சியையும் வருவித்துக் கொண்டாள்.

"சூரியாவா! இது என்ன? சொல்லாமல் திடீரென்று வந்துவிட்டாய்?" என்று கேட்டுவிட்டுப் பட்டாபிராமனைத் திரும்பிப் பார்த்து, "பார்த்தீர்களா? இந்த மாதிரியெல்லாம் விளையாட வேண்டாம் என்று சொல்லியிருக்கிறேன் அல்லவா? சூரியாவாக இருந்ததினால் போயிற்று! வேறு யாராவது பார்த்திருந்தால் நிஜம் என்றல்லவா நினைத்துக் கொள்வார்கள்?" என்றாள்.

பட்டாபிராமன் ஓர் அசட்டுச் சிரிப்பு சிரித்துவிட்டு, "வா, அப்பா! நல்ல சமயம் பார்த்துத்தான் வந்தாய்! தாம்பத்திய கலக நாடகம் நடந்து கொண்டிருக்கும்போது!" என்றான்.

சூரியாவுக்குத் தான் கண்ட காட்சியை உண்மை என்று நம்புவதா, நாடகம் என்று நினைப்பதா என ஒரு கண நேரம் திகைப்பு உண்டாயிற்று. எப்படியாவது இருக்கட்டும் என்று நினைத்துக் கொண்டு, "நாடகத்தைப் பார்க்க நான் தனியாக வரவில்லை! அம்மாவையும் அழைத்துக் கொண்டு வந்திருக்கிறேன்!" என்றான்.

இதைக் கேட்டவுடன் பட்டாபிராமன், லலிதா இருவருடைய முகங்களும் சுருங்கின. பட்டாபிராமன் மாடிக்குப் போகலாமா என்று அண்ணாந்து பார்த்தான். அங்கே சீதா எதையோ பறிகொடுத்தது போன்ற முக பாவத்துடன் நிற்பதைக் கண்டதும் மேலும் கோபமடைந்து தன்னுடைய ஆபீஸ் அறைக்குள் சென்று படாரென்று கதவைச் சாத்தினான்.

லலிதா சூரியாவை நெருங்கி வந்து, "அண்ணா! இவருக்கு என்மேல் நிஜமாகக் கோபம். நீ கொஞ்சம் அவருடன் நல்ல வார்த்தையாகப் பேசிச் சமாதானப்படுத்து!" என்றாள்.

அந்தச் சமயம் சரஸ்வதி அம்மாள் மூட்டை முடிச்சுக்களுடனும் ஊறுகாய் ஜாடியுடனும் உள்ளே வரவே, "வா! அம்மா!" என்று சொல்லிக் கொண்டு அவளை வரவேற்கப் போனாள்.

சூரியா அண்ணாந்து பார்த்தான். அங்கே ஒரு நிமிஷத்துக்கு முன்னால் நின்று கொண்டிருந்த சீதா அறைக்குள் போய்விட்டதை அறிந்து கொண்டான். பட்டாபிராமனைப் பார்ப்பதற்கு அவனுடைய ஆபீஸ் அறைக்குச் சென்றான்.

"சூரியா! உன்னிடம் வேஷம் போட எனக்கு விருப்பம் இல்லை. உன் தங்கை அம்மாதிரி பொய் நடிப்பு நடிக்க வேண்டும் என்கிறாள். அது என்னால் முடியாத காரியம். உண்மையைச் சொல்லி விடுகிறேன். நீ உள்ளே நுழைந்து வந்தபோது நான் லலிதாவைக் கழுத்தைப் பிடித்து நிஜமாகவே தள்ளிக் கொண்டிருந்தேன். அதற்குக் காரணம் உன் அத்தங்கா சீதாதான். அந்தப் புண்ணியவதியை நீ தயவு பண்ணி இங்கிருந்து அழைத்துக் கொண்டு போய்விடு. அவள் இந்த வீட்டுக்கு வந்ததிலிருந்து உன் தங்கையின் குணமே மாறிப் போய்விட்டது. அவளுடைய நச்சையும் ஆத்திரத்தையும் ஆங்காரத்தையும் என்னால் பொறுக்கவே முடியவில்லை. தயவுபண்ணி உன் அத்தங்காளை அழைத்துக் கொண்டு

போய்த்தொலை!'' என்று படபடவெனப் பொழிந்தான் பட்டாபிராமன்.

''ஆகட்டும் ஸார்! உங்கள் இஷ்டப்படியே செய்கிறேன். நீங்களும் லலிதாவும் இந்த நிலைமைக்கு வருவீர்கள் என்று நான் சொப்பனத்தில் கூட நினைக்கவில்லை. இதற்கெல்லாம் காரணம் நான் என்பதை நினைத்தால் வருத்தமாயிருக்கிறது'' என்றான் சூரியா.

''நீ என்ன செய்வாய் சூரியா! உன் பேரில் என்ன தப்பு? ஸ்திரீகளுடைய சுபாவம் இவ்வளவு மோசமா யிருக்கும் என்று உனக்கு எப்படித் தெரியும்? இத்தனை நாட்களாகக் கிரகஸ்தாசிரமம் நடத்தும் எனக்கே தெரியவில்லையே? இந்த முட்டாள்தனத்தைக் கேள்! உன் அத்தங்கா சீதாவை இங்கே அழைத்து வர வேண்டாம் என்று நான் எவ்வளவோ முட்டிக் கொண்டேன். இவள் கேட்கவில்லை; பிடிவாதமாக அழைத்துக் கொண்டு வந்தாள். 'அத்தங்கா' 'அத்தங்கா' என்று பரிந்து பிராணனை விட்டு விடுகிறவளைப் போலப் பேசினாள். இப்போது சீதாவைக் கண்டாலே இவளுக்குப் பிடிக்கவில்லை. சீதா நாகரிகமாக நாலு பேர்களுடன் பேசுவதையும் பழகுவதையும் கண்டால் இவளுக்கு அசூயையா யிருக்கிறது. அப்படியெல்லாம் இவளை இருக்க வேண்டாமென்று யார் தடுத்தார்கள்? நானோ இந்த 'ரெச்சட்' எலெக்ஷனில் அகப்பட்டுக் கொண்டு தவிக்கிறேன். வேலை விழி பிதுங்குகிறது. இன்னும் இரண்டு வாரங்கள்தான் பாக்கி யிருக்கிறது, வோட்டுப்போடும் தேதி. பலமாக வேலை செய்யா விட்டால் இத்தனை நாட்கள் பட்ட கஷ்டமும் செலவழித்த பணமும் வீணாகப் போய்விடும். இந்த நெருக்கடியில் நான் எலெக்ஷன் வேலையைக் கவனிப்பதா, இந்தப் பெண் பிள்ளைகளின் சண்டையைத் தீர்த்துக் கொண்டிருப்பதா? நல்ல வேளையாக, மகராஜன், நீ வந்து விட்டாய்! சீதாவை அழைத்துக் கொண்டு போய்விடு! நான் நிம்மதியாக என் வேலையைப் பார்க்கிறேன்!'' என்று பட்டாபிராமன் பேசி நிறுத்தியபோது, பெரும் மழை பெய்து ஓய்ந்த மாதிரி இருந்தது.


''பட்டாபி ஸார்! இந்த எலெக்ஷன் தொல்லையில் நீங்கள் அகப்பட்டுக்கொள்ளாமலிருந்திருக்கலாம்'' என்று சூரியா பேசத் தொடங்குவதற்குள்ளே பட்டாபிராமன் மறுபடியும்குறுக்கிட்டான்:

''நீ இப்படித்தான் சொல்லுவாயென்று எனக்குத் தெரியும். நீ சர்வ சங்க பரித்யாகி; நித்தியப் பிரம்மச்சாரி. உன்னைப் போலவே எல்லாரும் உலகத்தை வெறுத்துவிட்டு இருக்க முடியுமா! எனக்கு இந்த உலகத்திலே இன்னும் சில காரியங்கள் இருக்கின்றன. எனக்குச் சில வாழ்க்கை லட்சியங்கள் இருக்கின்றன. இந்தப் பட்டணத்தில் கொஞ்சம் பொது ஊழியம் செய்ய வேண்டும், நல்ல பெயர் வாங்க வேண்டும் என்று ஆசையா யிருக்கிறது. எனக்குப் பணம் காசில் பற்றுக் கிடையாது. ஆனால் புகழ் என்பது ஒன்று இருந்து தொலைகிறதல்லவா? புகழை விரும்பாமல் யார் இருக்க முடியும்? தன்னோடொத்தவர்கள், தன்னுடைய ஊர் மனிதர்கள், தன்னுடைய தேசத்தவர்— இவர்களிடம் புகழ் அடைய ஒருவன் விரும்பவில்லை என்று சொன்னால் அதை நான் நம்ப முடியாது. அப்படிச் சொல்கிறவனை நான் சுத்த 'ஹம்பக்' என்றுதான் சொல்வேன். இந்தத் தேவப்பட்ட



ணத்தில் என் தகப்பனார் எவ்வளவோ செல்வாக்குடன் இருந்தார். அவர் காலம் ஆகி விட்டது. 'யானைக்குப் பிறந்தது பூனையாயிற்று' என்று பெயர் வாங்க எனக்கு இஷ்டம் இல்லை. நாலு பேருக்கு மத்தியில் நானும் ஒரு மனுஷன் என்று பெயர் வாங்கா விட்டால் இந்த வாழ்க்கையினால்தான் என்ன பிரயோஜனம்? மேலும் இந்த ஊர் 'பார்ட்டி பாலிடிக்ஸ்' விஷயமும் உனக்குத் தெரியாது. பழைய முனிசிபல் சேர்மன் கள்ள மார்க்கெட்டில் ஏராளமாய்ப் பணம் சேர்த்து இல்லாததெல்லாம் செய்து கொண்டிருக்கிறான். தேவப்பட்டணமே தன்னுடைய சொந்தக் கோட்டை என்று எண்ணிக் கொண்டிருக்கிறான். அவனை இந்தத் தடவை தோற்கடித்தாலொழிய இந்த ஊரில் 'காங்கிரஸ்' என்ற பெயரையே யாரும் எடுக்க முடியாது. அந்தக் கிராதகனை எதிர்த்து நின்று தோற்கடிப்பதற்கு என்னைத் தவிர வேறு யாரும் கிடையாது. இங்கே எல்லோருடைய ஏகோபித்த அபிப்பிராயமும் அதுதான். இதில் தலையிடுவதற்கு உனக்கு உரிமை இல்லை; தகுதியும் இல்லை! எலெக்ஷன் இன்னும் இரண்டு வாரங்கள் இருக்கும் சமயத்தில் நான் பின்வாங்கினால் அதைக் காட்டிலும் அவமானம் வேறு வேண்டியதில்லை. அப்புறம் நான் வெளியில் தலைகாட்டவே முடியாது.''

பட்டாபிராமன் மூச்சு விடுவதற்காகப் பேச்சை நிறுத்திய சமயம் பார்த்துச் சூரியா சொன்னான்: ''பட்டாபிலார்! நான் ஒரு வார்த்தை சொல்வதற்குள் நீங்கள் நூறு வார்த்தைகள் சொல்லி விட்டீர்கள். இந்தச் சமயத்தில் உங்களைப் பின்வாங்கும்படி நான் சொல்லவில்லை. அதற்கு உரிமையோ, தகுதியோ ஒன்றும் எனக்குக் கிடையாது என்பதையும் அறிந்திருக்கிறேன். 'எலெக்ஷனில் இறங்காமல் இருந்திருக்கலாம்' என்று மட்டும்தான் சொன்னேன். அதுவும் என்னுடைய அபிப்பிராயமே தவிர உங்களைக் கட்டாயப்படுத்த உத்தேசமே எனக்குக் கிடையாது. இப்போது நீங்கள் தேர்தலுக்கு நின்று இவ்வளவு தூரம் வேலை நடத்திய பிறகு உங்களைப் பின்வாங்கும்படி சொல்ல எனக்கு என்ன பைத்தியமா பிடித்திருக்கிறது? நான் சொல்ல வந்தது வேறு விஷயம். எலெக்



ஷன் வேலையில் சீதா ரொம்ப ஒத்தாசையா யிருக்கிறாள் என்று நான் கேள்விப்பட்டேன். ஆகையால் அவளை இந்தச் சமயம் ஊருக்கு அனுப்புவது உசிதமா யிராது. இத்தனை நாட்கள் இருந்தவள் இன்னும் இரண்டு வாரங்கள் இருக்கட்டும். அதற்குப் பிறகு வேண்டுமானால் பார்க்கலாம்...''

''உனக்கென்னடா, அப்பா, சூரியா! வாய் புளித்ததோ, மாங்காய் புளித்ததோ என்று சொல்லி விடுகிறாய். கஷ்டப்படுகிறவன் நான் அல்லவா? இந்த இரண்டு பொம்மனாட்டிகளுக்கு மத்தியில் அகப்பட்டுக் கொண்டு என்னால் இனிமேல் சங்கடப்பட முடியாது. வேலை அநியாயமாய்க் கெட்டுப் போகிறது. அப்படிச் சீதா இங்கு இருக்கிறதாயிருந்தால் லலிதாவையாவது நீ அழைத்துக் கொண்டு போக வேண்டும். போதும் போதாதற்கு உன் அம்மா வேறு வந்திருக்கிறாள். சிவ சிவா; வீட்டில் இனிமேல் இருபத்தி நாலு மணி நேரமும் ரகளைதான். சூரியா! உனக்குப் புண்ணியமாய்ப் போகட்டும். நீ சீதாவையும் உன் தாயாரையும் இன்றைக்காவது, நாளைக்காவது அழைத்துக்கொண்டு போய்விடு. தெரிகிறதா? நானும் லலிதாவும் எப்படியோ எங்கள் பாட்டைப் பார்த்துக் கொள்கிறோம். இந்த உலகத்தில் ஒருவரைப் பார்த்து ஒருவர் பிறந்திருக்கவில்லை யல்லவா? சீதாவை நம்பிக் கொண்டுதானா இந்த எலெக்ஷனில் நின்றேன்?...''

''பட்டாபி ஸார்! கொஞ்சம் என் வார்த்தையைக் கேளுங்கள். என்னுடைய அபிப்பிராயத்தில் உங்களுக்கு எப்போதும் கௌரவம் இருந்து வந்தது. நான் அப்படி ரொம்பத் தவறுதலாக எந்தக் காரியத்தையும் சொல்ல மாட்டேன் என்ற நம்பிக்கை உங்களுக்கு இருந்து வந்தது. அதைக் கொஞ்சம் ஞாபகப்படுத்திக் கொண்டு ஒரே ஒரு நாள் எனக்குச் சாவகாசம் கொடுங்கள். அதற்குள் சீதாவிடமும் லலிதாவிடமும் பேசிப் பார்த்து விட்டு முடிவாக என் அபிப்பிராயத்தைச் சொல்கிறேன். ஒன்றிலும் சரிக்கட்டி வராது என்று தோன்றினால் உங்கள் இஷ்டப்படியே சீதாவை அழைத்துக் கொண்டு போய் விடுகிறேன்!'' என்றான் சூரியா.

''சரி! உன்னுடைய சாமர்த்தியத்தைப் பார்த்து விடலாம்!'' என்றான் பட்டாபிராமன்.

சீதாவைப் பார்த்துச் சூரியா, ''அத்தங்கா! நான் உள்ளே வந்தபோது நடந்த நாடகத்தை நீயும் மாடியிலிருந்து பார்த்தாய் போலிருக்கிறதே!'' என்றான்.

''ஆமாம், சூரியா! அது என் தலைவிதி! காசிக்குப் போனாலும் தன் பாவம் தன்னோடு என்பார்கள் அல்லவா? அது போல நான் எந்த இடத்துக்குப் போனாலும் என்னோடு துரதிருஷ்டத்தையும் கொண்டு போவதாகக் காண்கிறது. நான் நல்லது செய்யப் பார்த்தாலும் அது எப்படியோ கெடுதலாக முடிந்து விடுகிறது. இன்றைக்கே நான் இந்த வீட்டிலிருந்து கிளம்பி விடுவதாகத் தீர்மானித்து விட்டேன்!''

''இன்றைக்கே கிளம்பி எங்கே போவதாக உத்தேசம்?'' என்று சூரியா கேட்டான்.

''எங்கே போகிறது? போகிறதற்கு இடமில்லையா என்ன? கிணறு, குளம், ஏரி, சமுத்திரம் எல்லாம்தான் இருக்கின்றன! இல்லாவிட்டால் ரயில் தண்டவாளம் இருக்கிறது! மதராஸுக்குப் போய் ஒரு தடவை வஸந்தியைப் பார்த்துவிட வேணும். அப்புறம், ஏதாவது ஒரு வழி தேடிக் கொள்கிறேன். உனக்கு அதைப் பற்றிய கவலை வேண்டாம்!'' என்று சொல்லி விட்டுச் சீதா கலகலவென்று கண்ணீர் வடித்தாள்.

''அத்தங்கா! எல்லாக் கஷ்டங்களுக்கும் ஒரு முடிவு உண்டு. வாழ்க்கையில் நீ ரொம்பக் கஷ்டப்பட்டிருக்கிறாய் என்பது உண்மைதான். ஆனால் உன்னைவிடக் கஷ்டம் அனுபவித்தவர்களும் உலகத்தில் உண்டு; அவர்களுக்கெல்லாம் விடிவு காலம் வந்திருக்கிறது.''

''என்னுடைய கஷ்ட காலம் என்னோடு மட்டும் போனால் தேவலையே, சூரியா! நான் எங்கே போகிறேனோ, அங்கெல்லாம் தொடர்ந்து வந்துவிடுகிறதே! ராஜம்பேட்டைக்கு வந்தேன்; அருமை மாமாவை யமலோகத்துக்கு அனுப்பினேன்; இவ்விடம் வந்தேன்; என் அருமைத் தோழிக்கும் அவளுடைய புருஷனுக்கும் சண்டையை மூட்டினேன். டில்லியிலே அவருக்கு என்னாலே உத்தியோகமே போய்விட்டது. சூரியா! வஸந்தியை மதராஸிலிருந்து நான் ஏன் அழைத்துக் கொண்டு வரவில்லை தெரியுமா? 'பள்ளிக்கூடம் வீணாய்ப் போய்விடுமே' என்று குழந்தை சொன்னது வாஸ்தவம்தான். அது அவளாய்ச் சொல்லவில்லை. பாட்டி சொல்லிக் கொடுத்ததையே சொன்னாள். 'பள்ளிக்கூடம் போனால் போகிறது; என்னுடன் வா!' என்று நான் சொல்லியிருந்தால் கட்டாயம் வந்திருப்பாள். ஆனால் நான் வற்புறுத்திக் கூப்பிடவில்லை. எனக்கென்னமோ மனசில் சதா காலமும் ஒரு பயம் தோன்றிக்

கொண்டிருக்கிறது, என்னுடன் இருப்பவர்களுக்கெல்லாம் ஏதாவது ஆபத்து வரும் என்று. அதனால்தான் குழந்தையை அழைத்து வரவில்லை. பாட்டியிடமே பத்திரமாய் இருக்கட்டும் என்று விட்டு வந்தேன்.''

''அத்தங்கா! ஒருவரால் ஒருவருக்குக் கஷ்டம் வரும் என்பதெல்லாம் முட்டாள்தனம். உலகத்தில் உனக்கு மட்டும்தானா கஷ்டம் வந்திருக்கிறது? தேசம் தேசமாகக் கஷ்டம் வந்திருக்கிறது. லட்சக்கணக்கான ஜனங்களுக்கு, கோடிக் கணக்கான ஜனங்களுக்கு ஒரேயடியாகக் கஷ்டம் வந்திருக்கிறது. வங்காளத்தில் அறுபது லட்சம் ஜனங்கள் பஞ்சத்தினால் செத்துப் போனார்கள்! ஹிரோஷிமா என்னும் பட்டணத்தில் வசித்த இரண்டரை லட்சம் ஜனங்களும் ஒரே நிமிஷத்தில் அமெரிக்கர் போட்ட அணுகுண்டினால் செத்துப் போனார்கள்! நேற்று உலகத்தையே ஜயித்து விட்டதாகக் கனவு கண்ட ஜெர்மானியர் எட்டுக் கோடிப் பேர் இன்று நாலு தேசங்களின் காலடியில் கிடந்து மிதிபடுகிறார்கள். கஷ்டம் ஏன் வருகிறது? எப்படி வருகிறது என்பதெல்லாம் நம்முடைய பகுத்தறிவினால் கண்டறிய முடியாத தெய்வ இரகசியம். ஒருவருக்கு இன்னொருவர் கஷ்டத்தை உண்டுபண்ண முடியாது. ஒருவருடைய துரதிருஷ்டம் இன்னொருவரைத் தொடர முடியாது!''

''சரி சூரியா! உன்னோடு வாதம் செய்ய என்னால் முடியுமா? பின்னே என்னதான் செய்ய வேண்டும் என்கிறாய் சொல்!''

''கடவுள் எந்தெந்த நிலைமையில் நம்மை வைத்திருக்கிறாரோ, அந்தந்த நிலைமையில் நம்முடைய கடமையைச் செய்ய வேண்டியது'' என்றான் சூரியா.

''இப்போது என்னுடைய கடமை என்ன?'' என்று சீதா கேட்டாள்.

''அத்தங்கா! இப்போது உன்னுடைய கடமை இந்த எலெக்ஷனில் பட்டாபி ஜெயிக்கும்படி செய்வதுதான். மாப்பிள்ளை பட்டாபியின் மனசை என்னைப் போல் அறிந்தவர்கள் இல்லை. பட்டம் பதவியின் பேரில் அவருக்கு மோகமே கிடையாது. ஆறு மாதங்களுக்கு முன்னால் அவரிடம் 'தேர்தலில் நில்லுங்கள்' என்று யாராவது சொல்லியிருந்தால் குலுங்கச் சிரித்திருப்பார். அப்படிப்பட்டவருடைய மனசில் தேர்தல் வெறியை நீ மூட்டி விட்டாய்! இதுவரையில் தேர்தல் வேலையில் ஒத்தாசையும் செய்து வந்திருக்கிறாய். இந்தச் சமயத்தில் நீ கைவிட்டு விட்டுப் போனால் அடியோடு எல்லாம் மாறிப்



போனாலும் போகும். ஆகையால் தேர்தல் தேதி வரையில் இருந்து ஆரம்பித்த காரியத்தை முடித்துக் கொடுக்க வேண்டியது உன்னுடைய கடமை'' என்றான் சூரியா.

''நீ சொல்வதெல்லாம் சரி என்று நான் ஒப்புக்கொள்ளவில்லை; அப்படியே ஒப்புக்கொண்டாலும் இந்த வீட்டில் இனிமேல் நான் எப்படி இருக்க முடியும்? நீ வருவதற்குச் சற்று முன்னால் இங்கே என்ன பேச்சு நடந்தது என்று உனக்குத் தெரியாது. என்னை இந்த வீட்டை விட்டு விரட்டிவிட்டு மறு காரியம் பார்க்கும்படி லலிதா பட்டாபிராமனிடம் சொன்னாள். 'சீதா! இந்த வீட்டை விட்டுப் போக மாட்டாள். போகிறதாயிருந்தால் நீதான் போக வேண்டும்!' என்று பட்டாபிராமன் சொன்னார். இந்த வார்த்தைகளை என் காதாலேயே கேட்டேன். நிலைமை இவ்வளவு விகாரமாகப் போனபிறகு நான் இந்த வீட்டில் இருக்கலாமா?''

''அத்தங்கா! அவர்கள் இரண்டு பேரும் புத்தி நிதானமாக இருக்கும்போது அவ்விதம் சொல்லியிருக்க மாட்டார்கள். லலிதா ஏதோ கோபத்தில் உளறியிருக்கிறாள். பட்டாபியும் ஆத்திரத்தினால் யோசியாமல் ஏதோ சொல்லியிருக்கிறார். நீ தேர்தல் முடியும்வரையில் இங்கே இருக்க வேண்டும் என்று லலிதாவைக் கொண்டே நான் கேட்டுக்கொள்ளச் செய்கிறேன்.''

''அவள் கேட்டுக் கொண்டு என்ன பிரயோசனம்? மாமி வேறு வந்திருக்கிறாள். மாமிக்கு ஏற்கெனவே என் பேரில் அசாத்தியமான கோபம். இதெல்லாம் மாமிக்குத் தெரிந்தால் என்னை இந்த வீட்டில் ஒரு நிமிஷமாவது இருக்க விடுவாளா?''

''மாப்பிள்ளைக்குச் சேர்மன் வேலை ஆக வேண்டும் என்ற ஆசை அம்மாவின் மனசில் குடிகொண்டு விட்டது. அதற்காக உன் காலில் விழுந்து வேண்

டிக்கொள்ள வேண்டுமானாலும் வேண் டிக்கொள்வாள். உண்மையில் உன்னை இங்கே இருக்கும்படி செய்வதற்காகவே அம்மா இப்போது வந்திருக்கிறாள் தெரியுமா?''

இதைக் கேட்டதும் சீதாவுக்கு ஒரே ஆச்சரியமாய்ப் போய் விட்டது. இத் தனை நேரம் வாடிக் சுருங்கி யிருந்த அவ ளுடைய முகத்தில் சிறிது மலர்ச்சி உண்டாயிற்று. ''சூரியா! நீ சொல்வது உண்மைதானா? அல்லது பரிகாசம் செய் கிறாயா?'' என்று கேட்டாள்.

''பரிகாசம் இல்லை; உண்மைதான்! இன்னும் சிறிது நேரத்துக்கெல்லாம் அம்மாவே உன்னிடம் வந்து சொல்லு வாள். ராஜம்பேட்டை சீமாச்சுவய்யர் பட்டாபிக்கு எதிராக இந்தத் தேர்தலில் வேலை செய்கிறாராமே?''

''ஆமாம்; அதைப் பற்றி என்ன?''

''சீமாச்சுவய்யர் இங்கிருந்து கிரா மத்துக்கு வந்து அம்மாவிடம் உன்னைப் பற்றிப் புகார் சொன்னார். நீதான் பட் டாபியின் புத்தியைக் கெடுத்து விட் டாய் என்றும், எலெக்ஷனுக்கு நிற்ப தில் பணம் எல்லாம் போய் விடும் என் றும், லலிதாவுக்கு இதெல்லாம் பிடிக்க வில்லை என்றும் சொன்னார். ஆனால் பலன் சீமாச்சுவய்யர் எதிர்பார்த்த தற்கு நேர்மாறாக ஆயிற்று. மாப்பிள்ளை பெரிய உத்தியோகத்துக்குப் போக வில்லை என்று அம்மாவுக்கு ரொம்பக் குறை. இப்போது சேர்மன் வேலை யாவது ஆகட்டும் என்று நாறு தெய் வங்களை வேண்டிக் கொண்டிருக்கிறாள். பெண்ணுக்குப் புத்தி சொல்வதற்காக வும், உன்னை உற்சாகப் படுத்துவதற் காகவுமே வந்திருக்கிறாள். மாப்பிள்ளை எலெக்ஷனுக்கு நின்றது தப்பு என்று நான் சொன்னதற்காக என் பேரில் அம் மாவுக்கு அசாத்தியமான கோபம்.''

இந்த அதிசயத்தைக் குறித்து சீதா சிறிது நேரம் யோசனை செய்து கொண் டிருந்தாள். பிறகு சூரியாவைப் பார்த்து, ''நான் எப்படியும் மதரா சுக்கு ஒரு நடை போக வேண்டும், சூரியா! குழந்தை வஸந்தியிட மிருந்து நேற்றுக் கடிதம் வந்திருக்கிறது'' என்றாள்.

''வஸந்தி கடிதத்தில் என்ன எழுதி யிருக்கிறாள்?'' என்று சூரியா கேட்டான்.

''இன்னும் நாலு நாட்களில் பள்ளிக் கூடம் சாத்தி விடுவார்களாம். என்னைப் பார்க்க ஆசையாக இருக்கிறதாம். உடனே மதராசுக்கு வந்து அழைத்துப் போகும்படி எழுதியிருக்கிறாள்.''

''அத்தங்கா! நீ எலெக்ஷன் வேலை யைப் பார்! நான் போய் வஸந்தியை அழைத்துக் கொண்டு வருகிறேன்!'' என்றான் சூரியா.

* * *

சரஸ்வதி அம்மாள் தன் குமாரி லலி தாவைப் பார்த்து, ''உன்னைப் போல் அசட்டுப் பெண்ணை நான் பார்த்ததே இல்லை. உன் அகத்துக்காரர் எலெக்ஷ னில் ஜெயிப்பதற்கு அந்தப் பெண் சீதா எவ்வளவோ பாடுபட்டு வேலை செய்கிறாளாம். நீ ஏதாவது குற்றம் குறை சொல்லிக் கொண்டிருக்கிறா யாமே?'' என்றாள்.

''அம்மா! உனக்குக் கூட எலெக்ஷன் பைத்தியம் பிடித்து விட்டது! எலெக் ஷன் என்றால் ஏதோ சாதாரண விஷயம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறாய். அதனால் எவ்வளவோ விரோதங்கள் வந்து சேரும். என் மாமனார் எலெக்ஷ னில் தலையிட்டதினால் எவ்வளவு சங் கடப்பட்டார், தெரியுமா?''

''எல்லாம் தெரியுமடி தெரியும். எனக் குத் தெரியாததற்கு நீ சொல்ல வந்து விட்டாய்? எனக்கு முன்னாலேயே நீ பிறந்து விட்டாயோ? அந்தப் பிராம ணர் வேறே யாருக்காகவோ எலெக் ஷன் வேலை செய்து சங்கடத்தை விலைக்கு வாங்கிக் கொண்டார். இது அப்படி யில்லை! மாப்பிள்ளையே தானே நிற்கிறார்!''

''மாப்பிள்ளையே நின்றால் விரோதம் வராமல் போய் விடுமா?''

''எந்தக் காரியத்திலேதான் விரோ தம் ஏற்படாமல் இருக்கிறது? வெற் றிலை பாக்குக் கடை வைத்து நாலு காசு சம்பாதித்தால் அதற்குக் கூட நாலு பேர் விரோதம். யாராவது ஒரு பொம்மனாட்டி நல்ல புடவை கட்டிக் கொண்டால் அதைப் பார்த்து நாலு பேருக்கு அசூயை. மாட்டு வண்டியிலே போனால் நாலு பேருக்கு விரோதம். மோட்டாரிலே போனால் அதில் நாலு பேருக்கு விரோதம். அப்படி யெல் லாம் விரோதம் வரும் என்று பயந்து கொண்டிருந்தால் இந்த உலகத்தில் வாழ முடியுமோ? ஆண்டிப் பரதேசி யாய்ப் போக வேண்டியதுதான். மாப் பிள்ளை இந்த எலெக்ஷனிலே ஜெயித் தால் நாளைக்கு சேர்மன் வேலைக்கு வர லாம் என்று சொல்கிறார்களே? அது நிஜம்தானே?''

''வந்தால் என்ன பிரயோசனம் அம்மா? சேர்மன் என்று நெற்றியிலே எழுதிக் கட்டிக் கொள்கிறதா?''

''ஏ அசடே! ஏதாவது ஏடாகூட மாய்ச் சொல்லாதே! சேர்மன் வேலை என்றால் சாதாரணம் என்று நினைக்கி றாயோ? என்னுடைய அம்மாவைப்

சக்தி, அத்துடனே வளர்ச்சி

இரண்டையும் அளிப்பது ஃபெர்ராடால் மட்டும் தான்

- ஃபெர்ராடாலில் உள்ள இரும்புச் சத்தும், இன்சுவையுள்ள மால்ட்டும் வற்றாத சக்தியை வரம்பின்றி வழங்குகின்றன.
- அதிலுள்ள வைட்டமின்களின் சரிவிகிதக் கலவை—ஆரோக்கியமான திட வளர்ச்சிக்கு வழிவகுத்திடுகிறது.

ஃபெர்ராடால்®

இரும்புச் சத்து, வைட்டமின் டானிக்.
சுவைத்திட இனியது.

பார்க்-டேவிஸ் தயாரிப்பு

*ரிஜிஸ்டர்டு டிரேடு மார்க், ரிஜி. யூஸர்ஸ்—
பார்க்-டேவிஸ் (இந்தியா) லிட்., பம்பாய்-72 AS.





மனைவி: என்னிடம் உங்களுக்கு அன்பு குறைந்து விட்டது. நான் அழுவதைக் கண்டால் முன்பு மாதிரி 'ஏன் அழுகிறாய்?' என்று கேட்பதில்லை!

கணவன்: ஸாரி... டியர்.... அந்தக் கேள்வி மிகவும் விலையுயர்ந்த கேள்வி என்று தெரிந்து கொண்டு விட்டேன்!

- நெல்லை நீலசுந்தரம்

பெற்ற தாத்தா இதே தேவப்பட்டணத்தில் சேர்மனா யிருந்தார். அவருடைய வீட்டுக்குச் சேர்மன் வீடு என்று பெயர். அந்தக் காலத்திலே மோட்டார் வண்டி இல்லை. இரட்டைக் குதிரைச் சாரட்டில் ஆபீசுக்குக் கிளம்புவார். அதைப் பார்க்க வீதியில் உள்ளவர்கள் எல்லோரும் வீட்டு வாசலில் வந்து நின்று வேடிக்கை பார்ப்பார்கள். தாத்தாவுடன் இரட்டைக் குதிரைச் சாரட்டில் நான்கூட ஒரு தடவை ஏறிப் போயிருக்கிறேன். நன்றாக ஞாபகம் இருக்கிறது.''

லலிதாவுக்குச் சிரிப்பு வந்தது. மனசிலும் மகிழ்ச்சி உண்டாயிற்று. சீதாவைப் பற்றிக் கேள்விப்பட்டு அதைப் பற்றித் தன்னிடம் சண்டை பிடிக்கவும் அவளை உடனே வீட்டை விட்டு அனுப்பச் சொல்லவுமே அம்மா புறப்பட்டு வந்திருப்பதாக நினைத்தாள். விஷயம் அதற்கு மாறாக இருக்கவே லலிதாவின் மனத்திலிருந்து ஒரு பாரம் நீங்கியது போலிருந்தது.

''அம்மா! முன்னெல்லாம் சேர்மன் வேலைக்கு இருந்த கௌரவம் இப்போது கிடையாது. அப்படியே இருந்தாலும் அதற்காகச் செலவழிக்கிற பணம் எல்லாம் என்ன ஆகிறது? நம்மிடத்தில் பணம் கொட்டியா கிடக்கிறது? சேர்மன் உத்தியோகத்துக்குச் சம்பளம் கிடையாது என்று உனக்குத் தெரியுமோ இல்லையோ?'' என்றாள்.

''சம்பளம் இல்லாமல் போனால் என்ன? பட்டிக்காட்டில் இருந்தால் எனக்கு ஒன்றுமே தெரியாது என்று நினைத்துக் கொண்டு பேசுகிறாயோ? முன்னெல்லாம் சேர்மன் வேலை என்றால் வெறும் கௌரவம்தான். இப்போது கௌரவத்துடன் வருமானமும் உண்டு. இத்தனை நாட்களும் இந்த ஊரிலே சேர்மன் வேலை பார்த்தவர் இரண்டு லட்சம் ரூபாய் சம்பாதித்திருக்கிறாராம். வியாபாரிகளுக்குச் சர்க்கரை பெர்மிட் வாங்கிக் கொடுத்து ஐம்பதினாயிரம் ரூபாய் சம்பாதித்திருக்கிறாராம். அவர் குழந்தைக்குப் போன வருஷம் ஆண்டு நிறைவுக் கல்யாணம் நடந்ததாம். அரை லட்சத்துக்குப் 'பிரெஸெண்டு' மட்டும் வந்ததாம். உன் குழந்தைக்கும்தான் ஆண்டு நிறைவு நடந்தது. என்ன கிடைத்தது? வந்திருந்தவர்களுக்குப் போலீஸ்காரர்களின் குண்டாந்தடி அடிதான் கிடைத்தது!''

லலிதா கலுக்கென்று சிரித்தாள்.

''என்னடி சிரிக்கிறாய் பெண்ணே? நான் சொல்கிறது சிரிப்பா யிருக்கிறதா?'' என்று சரஸ்வதி அம்மாள் கேட்டாள்.

''அதற்காகச் சிரிக்கவில்லை அம்மா! நீ சொல்கிறது ஒரு விதத்தில் உண்மைதான். சில பேர் சேர்மன் வேலையிலே கூடப் பணம் சம்பாதித்திருக்கிறார்கள். ஆனால் உன் மாப்பிள்ளை அப்படிப்பட்டவர் இல்லையே என்பதை நினைத்துக் கொண்டு சிரித்தேன். அவர், கை நீட்டிப் பணம் வாங்கவும் மாட்டார்; பிரெஸெண்டு வாங்கவும் மாட்டார். ஒருவரை ஒன்று கேட்கவும் மாட்டார்.''

''இவர் என்னத்துக்காக வாங்க வேணும்? இவர் கை நீட்டி ஒன்றும் வாங்க வேண்டியதில்லை. ஒருவரை ஒன்று கேட்க வேண்டியது மில்லை. சேர்மன் வேலை ஆகிவிட்டால் எல்லாம் தானே தேடிக் கொண்டு வராதா?''

இதைக் கேட்டுக் கொண்டே சீதா சமையலறைக்குள் வந்தாள். லலிதா அவளைப் பார்த்துப் புன்னகை புரிந்தாள். தனக்கும் தன் புருஷனுக்கும் நடந்த பேச்சைச் சீதா மேல் மாடியிலிருந்து கேட்டுக் கொண்டிருந்தது லலிதாவுக்குத் தெரியாது. ஆகையால் கொஞ்சம் குதூகலமாகவே சீதாவைப் பார்த்து, ''அத்தங்கா! கேட்டாயா அதிசயத்தை! அம்மா ஒரேயடியாக உன் கட்சி பேசுகிறாள். இந்த எலெக்ஷன் விஷயத்தில் நம் வீட்டில் உன் கட்சிக்குத்தான் மெஜாரிட்டி இருக்கிறது. நான் மைனாரிட்டியாகி விட்டேன். அம்மாவுக்கு இருக்கிற உற்சாகத்தைப் பார்த்தால் மாப்பிள்ளை எலெக்ஷனுக்கு இவளே வீடு வீடாகப் போய் வோட்டுக் கேட்பாள் போலிருக்கிறது!'' என்றாள் லலிதா.

(தொடரும்)

பிரார்த்தனை

தமிழ்த் திரைப் படங்களில் புதுமையும் திறமையும் அதிகரிக்க வேண்டும் என்பதற்காக ரசிகர்கள் இஷ்ட தெய்வங்களுக்குப் பிரார்த்தனை செலுத்தலாம் என நினைவூட்டத் தலைப்பைப் பொறுக்கினார்கள் போலும்! மற்றப்படி தலைப்பை வைத்து படத்துக்கும் இதற்கும் என்ன சம்பந்தம் என்று தவிக்காதீர்கள்.

சௌகார் ஜானகிக்கு இந்தப் படத்தில் நல்ல 'சான்ஸ்'. குடும்பத்தில் நடந்த ஒரு சில நிகழ்ச்சிகள் அவரைக் குழப்பிவிடுகின்றன. அதன் காரணமாக, அவர் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்னாலேயே இருந்துவிடுகிறார். 1960 போய் 1972 வந்துவிட்டது என்பதை அவரால் புரிந்து கொள்ள முடியவில்லை. முதல் இரண்டொரு காட்சிகள் ஓடியதும், நாம் பின்னோக்கிப் போய் 'Flash Back' ஆகப் படத்தைப் பார்க்கிறோம். சிறுகதைகளில் 'மனக் கண் முன் பழைய சம்பவம்' என்று ஒரு டெக்னிக் உண்டல்லவா? அது மாதிரிதான் இதுவும்.

பன்னிரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு திடீரென்று தன் கணவனின் பிறந்த நாளைக் கொண்டாடத் தன் பழைய வீட்டைத் தேடி வரும் பெண்மணி இதுவரையில் எங்கிருந்தாள்? இதற்கு முன்பு வந்த பிறந்த தினங்களை யெல்லாம் எங்கே, எப்படிக் கொண்டாடினாளோ! அவை தேவையில்லை என்று கதாசிரியர் கருதுகிறாரோ! சுமார் இரண்டரை மணி நேரம் ஓடும் ஒரு படத்தில், இரண்டு மணி நேரம் பழைய சம்பவமே விழுங்கி விடுகிறது.

ஏவி. எம். ராஜன் முற்றிலும் புதிய பாத்திரத்தை ஏற்றிருக்கிறார். கதையே கல்யாணம் ஆன பிறகு நடப்பதால், ராஜனுக்குக் காதலிக்க வாய்ப்பில்லை. ஆனால், நல்லதொரு குணசித்திரப் பாத்திரமாக நடிக்கிறார்.

நல்ல நடிகர்களின் வரிசையில், வி. நிர்மலா இடம் பெறுகிறார். பருவமடைந்தும் விவரம் தெரியாத பெண்ணாக நடிக்கும் ஓர் அரிய வாய்ப்பு அவருக்குக் கிடைத்திருக்கிறது.

கொஞ்சம் புது மாதிரியான கதைதான் என்றாலும், பொறுப்புள்ள ஒரு குடும்பத் தலைவனை, சுமார் ஒன்பது வயதுப் பையனின் தந்தையை அவன் மனைவியே சந்தேகிப்பது — அதுவும் ஒரு சின்னப் பெண்ணுடன் தொடர்பு படுத்திச் சந்தேகிப்பது — என்னவோ மாதிரி இருக்கிறதே!

பாட்டே இல்லாமல் வேகமாக ஓட்டியிருக்க வேண்டிய படம் ''பிரார்த்தனை''. ஏனோ மூன்று பாடல்களைப் போட்டு நம்மை அறுத்திருக்கிறார்கள்! படத்தின் கதாசிரியர் கௌசிகனே டைரக்ஷன் பொறுப்பை ஏற்றுச் சிறப்பாய்ச் செய்திருக்கிறார்.

அலுவலகத்தில் காதலிப்பதும் அரட்டை அடிப்பதும் அளவுக்கு மீறிப் போய் மனசுக்கு வேதனையா யிருக்கிறது.

இந்தப் படத்தில் மட்டும் 'டெம்போ' இருந்திருந்தால்..... உம் — நான் பெருமூச்சு விடும் சத்தம் கேட்கிறதா?

— காந்தன்



''சே! போயும் போயும் ஒரே ஒரு புடவைதானா வாங்கி வந்தே?'' என்று கோபித்துக் கொள்கிறாரோ ஏவி. எம். ராஜன்?

டாக்டர் பலராமன் அன்று தமது 'டிஸ்பென்ஸரி'க்குள் நுழைந்த வேளை அவ்வளவு நல்ல வேளையாக இல்லை என்றே கூறவேண்டும். இஞ்செக்ஷன் போடும் ஊசியையும், 'ஸிரிஞ்ச்'சையும் வழக்கம்போலவே வெந்நீரில் கொதிக்கப்போட்டு விட்டுக் காத்திருந்தார் அவர். நேரம்தான் ஓடியதே தவிர, 'பேஷண்ட்' யாரும் அவரைத் தேடி வரவில்லை. அரை மணி நேரத்துக்கும் அதிகமாகப் பொறுத்திருந்து பார்த்துவிட்டு, கையோடு கொண்டு வந்திருந்த தினப் பத்திரிகையைப் பிரித்து வைத்துக் கொண்டு படிக்க ஆரம்பித்தார். இரண்டு நிமிடங்கள்கூட ஆகியிருக்காது; 'சார்!' என்று அழைப்புக் குரல் கேட்டது.

செய்தித்தாளை மடித்து மேஜையின் மீது போட்டுவிட்டு, எழுந்து சென்று, வந்திருப்பவரை வரவேற்கக் கதவைத் திறந்தார் டாக்டர். பிறகே, 'ஏன் இப்படி அவசரப்பட்டோம்?' என்று தம்மைத் தாமே நொந்து கொண்டார் அவர். காரணம், வந்திருந்தவர் நோயாளி அல்ல. ஆறு மாதங்களுக்கு முன்பு டாக்டருக்கு 'செகண்ட் - ஹாண்ட்' கார் ஒன்று வாங்கிக் கொடுத்திருந்த புரோக்கர் தான் அவர்.

''என்ன டாக்டர், ரெடியா!'' என்று கேட்டார் புரோக்கர் புருஷோத்தமன். அவர் கேட்டது தமக்குச் சேர வேண்டிய கமிஷன் தொகையை.

''இல்லே மிஸ்டர் புருஷோத்தமன்...வந்து வந்து....'' என்று ஏதோ சமாதானம் கூற முற்பட்டார் டாக்டர்.

''என்ன சார் இது, உங்களுக்கே நல்லா இருக்கா இது? இப்படியா ஒருத்தனை இழுத்தடிக்கிறது?....''

''நான் என்ன செய்யட்டும்? கொஞ்சம் பொறுத்துக்குங்க.. அடுத்த வாரத்தில்...''

''இதோட அம்பது தடவை 'அடுத்த வாரம்'னு சொல்லிட்டீங்க. நானும் முட்டாள்தனமா ஒவ்வொரு தடவையும் நம்பிக்கிட்டு வர்றேன்... நீங்க செய்யறது கொஞ்சம் கூட நல்லா இல்லீங்க... அவ்வளவுதான் நான் சொல்வேன்...''

''நிச்சயமா அடுத்த வாரம்...''

''வந்தால் நான் ஏமாந்து போவேன்!... போங்க சார்! இப்படி சால்ஜாப்பு சொல்றதே உங்க வாழ்க்கையாய்ப் போச்சு...நடந்து நடந்து எனக்கும் கால் தேஞ்சு போச்சு!...''

''அது சரி புரு, உங்க உடம்பு ஏன் இப்படி 'வீக்'கா இருக்கு? உங்க உடம்புக்கு என்ன?'' என்ற டாக்டர் அடுத்தபடியாக ஒரு வாக்கியம் சொல்லவும், புருஷோத்தமன் தமது கமிஷன் பாக்கியையும் மறந்து, விழுந்தடித்துக்கொண்டு வெளியே போனார்.

அது என்ன வாக்கியம்?

புரோக்கர் போன சிறிது நேரத்துக்கெல்லாம் நன்றாக உடையணிந்த இளைஞர் ஒருவர் வந்து சேர்ந்தார்.

''ஹலோ! தனபால்!'' என்று உற்சாகமாக வரவேற்றார் டாக்டர். ''என்ன, உங்க 'ஹயர் பர்ச்சேஸ்' பிஸினெஸ் எல்லாம் எப்படி இருக்கு?'' என்று விசாரித்தார்.

''நல்லாவே நடக்குது டாக்டர்...! போன மாசம்கூட முப்பதாயிரம் ரூபாய்க்குப் பிஸினஸ் செய்திருக்கோம்...''

''வெரி குட்!''

''ஆனால் 'கலெக்ஷன்'தான் அவ்வளவு உற்சாகம் தரக் கூடியதாக இல்லை...''

''ஏன் அப்படி?''


''பின்னே என்னங்க?... யாரைப் போய்க் கேட்டாலும் 'இப்போ வா, அப்புறம்வா'ன்'னு சாக்குப் போக்குச் சொல்றாங்களே தவிர, 'டாண்'ணு பணத்தை எடுத்து நீட்ட மாட்டேங்கறாங்களே!''

''ஓ, ஐ ஸீ!''

''பாருங்களேன்; உங்களுக்கு நாங்க ஃப்ரிஜ் சப்ளை பண்ணி ஒன்பது மாசங்கள் ஆகுது... நீங்க எத்தனை 'இன்ஸால்மெண்ட்' பணம் கட்டியிருக்கீங்க?''

''நாலு!''

''பார்த்தீங்களா?... இதே மாதிரிதான் எல்லோரும்... நீங்களே அஞ்சு மாசம் பாக்கி வைச்சுட்டீங்களே!... மத்தவங்க என்னதான்



செய்ய மாட்டாங்க?... பணம் 'கலெக்ட்' பண்ண அலையறது பேஜாரா இருக்குது டாக்டர்!....''

''இப்போ என்கிட்டே தவணைப் பணம் வசூல் பண்ணத்தான் வந்தீங்களா?''

''ஆமாம் டாக்டர்...! பணம் தர்றீங்களா? செக்காக வேணுமானாலும் கொடுங்க, பரவாயில்லை....''

''செக்காவது, புண்ணாக்காவது! நான் தான் இங்கே செக்குமாடு மாதிரி சுத்திச் சுத்தி வர்றேன்... பணம் வரக் காணோமே!''

''ரொம்ப நான் ஆகுதுங்களே!...''

''நான் என்ன செய்யட்டும் சொல்லுங்க?... வேணுமானால் உங்க ஃபிரிஜ்ஜை நீங்களே எடுத்துக்கிட்டுப் போங்க... எனக்கு வேணாம்!''

''அது எப்படிங்க முடியும்? இப்போ அது பழசாப் போயிருக்குமே? அதை எவன் தலையிலே கட்டறது?''

''அப்போ பணத்துக்குக் கொஞ்சம் 'வெயிட்' பண்ணுங்க.''

''நீங்க ஏதோ பார்த்து அட்ஜஸ்ட் கிட்ஜஸ்ட் பண்ணிப் பணம் கொடுத்தீங்கன்னு நல்லது... முதலாளி ரொம்ப வருத்தப்பட்டார். உங்க பேரைச் சொல்லிச் சொல்லி...''

''அது சரி, தனபால், இப்படிப் பேயா அலையறீங்களே, உங்க உடம்பு என்னத்துக்கு ஆகும்? ஹூம்?...'' என்று டாக்டர் அடுத்தபடி ஒரு வாக்கியம் சொன்னார்.

அதைக் கேட்டவுடன் தனபால் நாற்காலியில் சுழற்றி வைத்த தம்முடைய தொப்பியைக்கூட அப்படியே விட்டு விட்டு வேகமாக எழுந்து வெளியே போனார்.

ஆமாம், டாக்டர் என்ன சொன்னார் அவரிடம்?

மணி ஒன்பதரை. டாக்டர் முந்நூற்றறுபது தரம் 'ஸ்ரீராமஜெயம்' எழுதியாகிவிட்டது. சோம்பல் முறித்தபடியே நாற்காலியிலிருந்து எழுந்து ஜன்னல் பக்கமாக வந்து நின்றார். வெளியே பார்வையைச் செலுத்தினார் அவர். வாசற் கதவைத் 'தடால்' என்று பலத்த ஓசையுடன் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தார் ஒருவர். அவரைக் கண்டதும் டாக்டரின் முகம் சுருங்கியது. 'இவர் எதற்கு வருகிறார் இப்போது?' என்று மனத்துக்குள் எண்ணிக் கொண்டார்.

''என்ன டாக்டர், சௌக்கியமா?'' என்றார் வந்தவர்.

''வாங்க ஹவுஸ்-ஓனர் சார்!... நான் சௌக்கியமாகத்தான் இருக்கிறேன்... உங்களுக்கென்ன, பிளட் பிரஷர் பார்க்கணுமா?''

''அதெல்லாம் ஒண்ணும் வேண்டாம் டாக்டர். என் பிரஷர் அதிகமாகாதபடிக்கு நீங்க பார்த்துண்டாப் போதும்...''

''புரியல்லியே நீங்க சொல்றது?''

''அது சும்மா பேச்சு.. நான் என்ன சொல்றேன்னு உங்களுக்குப் புரியறது... ஆனால் புரியாத மாதிரி 'பாவ்லா' பண்றேள்... நல்ல நடிகர் டாக்டர் நீங்க!''

''நீங்க ஒண்ணு!... நடிக்கத் தெரிஞ்சிருந்தா நான் இந்நேரம் இப்படியா இருப்பேன்? இந்த மெட்ராசிலே பத்து வீடுகள் வாங்கிப் போட்டிருக்க மாட்டேனா?''

''நீங்க வீடு வாங்கிப் போடணும்; அதிலே சிலபேரைக் கொண்டு வந்து குடி வைக்கணும்; அவங்க ஒழுங்கா வாடகை கொடுக்காம உங்களுக்குத் தண்ணி காட்டணும்; உங்க பிளட் பிரஷர் 'ஜிவ்'வுனு ஏறணும்... அதுதான் என் ஆசை டாக்டர்!''


''இதென்ன இப்படி ஒரு ஆசை உங்களுக்கு?''

''பின்னே என்ன? நெஞ்சிலே கை வைச்சுச் சொல்லுங்கோ. இது மாதிரி அருமையான 'லொகாலிடி'யிலே இவ்வளவு அற்புதமான வீட்டை இத்தனை குறைந்த வாடகைக்கு எவனாவது விடுவானா?... வாடகைக்கு விட்ட அப்புறமும், எட்டு மாசம் வாடகைப் பாக்கி வைச்சிருந்தா, காலி பண்ணச் சொல்லாமல் வேடிக்கை பார்த்துண்டு இருப்பானா? சொல்லுங்கோ டாக்டர்!''

''மன்னிச்சுக்குங்க சார்...! கொஞ்சம் பொறுத்துக்குங்க...''

''நானும் எவ்வளவு நாட்கள்தான் பொறுத்துக்கறது, சொல்லுங்கோ... கடைசியாகச் சொல்றேன்: இன்னும் ஒரு மாசம் டைம் தரேன்... அதுக்குள்ளே மொத்தப் பாக்கியையும் நீங்க கீழே வைச்சுடணும்!... ஆமாம், எனக்குக் கோபம் கோபமா வரது!...''

'' அதுக்கென்ன, செய்துடலாம்... ஆமாம், இந்த வய



குமாரி ஜெயஸ்ரீயின் நடனம்

ரூர்கேலா இருப்பு உருக்கு ஆலையின் பிரதம இன்ஸ்பெக்டர் திரு கே. ஆர். கோபாலன் அவர்களின் புதல்வி குமாரி ஜெயஸ்ரீயின் நடன அரங்கேற்றம் சமீபத்தில் மயிலாப்பூர் பைன் ஆர்ட்ஸ் ஹாலில் நடந்தது. இந்த வைபவத்துக்குத் தலைமை வகித்துச் சிறப்பித்தவர் நீதிபதி கோகுலகிருஷ்ணன். வழுவூர் ராமையா பிள்ளை ஜெயஸ்ரீயின் நடனத்தை வெகுவாகப் பாராட்டிப் பேசினார்.



சிலே இப்படி உங்களுக்குப் பிரஷர் இருக்கலாமா ?.....'' என்ற டாக்டர் அடுத்தபடி ஏதோ சொன்னார்.

அதைக்கேட்டதுமே வீட்டுக்காரர் தமது பிளட் பிரஷரையும் மறந்து விழுந்தடித்துக் கொண்டு ஓடினார்.

அப்படி என்னதான் சொல்லி யிருப்பார் அந்த டாக்டர்?

''ஆமாம், உங்களுக்கு 'பிராக்டீஸ்' நல்லாவே இருக்கு... அப்படி யிருக்கும்போது எல்லோருக்கும் சேர வேண்டிய பணத்தை ஒழுங்காக் கொடுத்திட்டா என்ன? எதுக்கு அவுங்களை இழுக்கடிச்சு, அவங்க வயத்தெரிச்சலைக் கொட்டிக்கிறீங்க?'' என்றவாறே டாக்டரின் அறைக்குள் நுழைந்தாள் அவரது மனைவி சரோஜா.

''உனக்கு விஷயம் தெரியாது சரோ...! இவங்களுக்கெல்லாம் அப்பப்போ பணத்தைக் கொடுத்திட்டா, நம்மைப் பத்தி யார் கிட்டேயும் இவங்க பேசவே மாட்டாங்க... பாக்கி வைச்சா, எல்லார்கிட்டேயும் நம்ம பேரைச் சொல்லிக்கிட்டிருப்பாங்க... அது எனக்குப் பெரிய விளம்பரமாச்சே! டாக்டர்கள் விளம்பரம் பண்ணிக்கக் கூடாதுங்கறது மெடிகல் கவுன்ஸில் சட்டம்.... எனவே, நான் இந்த முறையைத்தான் கையாள வேண்டி யிருக்கிறது.... அதோடு, இன்னொரு விஷயமும் இருக்கு இதிலே... இவங்களுக்கு நான் கொடுக்க வேண்டியதை மாசா மாசம் சீட்டுப் பணமாக் கட்டி வரேன். அதிலே வேறே நல்ல லாபம் வருதே எனக்கு!''

''அப்படீன்னு எனக்குச் சிவப்புக் கல் வைச்ச வளையல் செய்து போடறேன்னு சொன்னீங்களே, அதுக்குப் பணம் சேர்த்தாச்சுன்னு சொல்லுங்க!''

''சிவப்புக் கல்லுன்னதும்தான் ஞாபகம் வருது... எங்கே, கண்ணைக் காட்டு!... இதென்ன, உடம்பிலே ரத்தமே இல்லாமல் இப்படி வெளுத்துக் கிடக்கிறதே!'' என்ற டாக்டர் அடுத்தபடி ஒரு வாக்கியத்தைச் சொன்னார்.


அவர் சொன்னதைக் கேட்டதும் டாக்டரின் மனைவி, ''எனக்குச் சிவப்புக் கல்லும் வேண்டாம், செங்கல்லும் வேண்டாம்...ஆளை விடுங்கள், நான் போகிறேன்!'' என்று துள்ளி எழுந்து உள்ளே போய் விட்டாள்.

ஆமாம், தம்மைக் காண வந்திருந்த அந்த நான்கு பேரிடமும் டாக்டர் பலராமன் அவர்கள் பயப்படும்படியாக என்னதான் சொன்னார்?

வேறொன்றுமில்லை. டாக்டர் சொன்னது இதுதான்:

''பி–12 இஞ்செக்ஷன் போடட்டுமா? உடம்புக்கு ரொம்ப நல்லது!''

அன்றைய காலைப் பத்திரிகையில்தான் பி-12 இன்செக்ஷன் போட்டதால் வெளியூரில் நான்கு பேர்கள் இறந்து போனதாகச் செய்தி ஒன்று பத்திரிகையில் வெளியாகி யிருந்தது!' அந்த நான்கு பேரும் அந்தச் செய்தியைப் படித்திருந்தார்கள். எனவே, ஓடாமல் அவர்கள் வேறென்ன செய்வார்கள்?




*"பழைமையான கரகரப்-
பான பற்பொடிகள்
உங்கள் ஈறுகளுக்கும்,
பற்களுக்கும் தீங்கு
இழைக்கக்கூடும்.!"*

கால்கேட் பற்பொடி உபயோகித்து உங்கள் பற்களை-யும், ஈறுகளையும் பாதுகாத்துக் கொள்ளுங்கள்! வாய் நாற்றத்தையும் அகற்றுங்கள்!

பழைமையான கரகரப்பான பற்பொடிகள் உங்கள் ஈறுகளைச் சேதப்படுத்தி, பல் எனாமலைச் சிதைக்கக்கூடும். கால்கேட் பற்பொடி மிகவும் மென்மையானது. அது உங்கள் ஈறுகளுக்கு இதமளிக்கும் போதே, அதில் கலந்துள்ள மெருகேற்றும் பொருள் பற்களின் மீது படிந்துள்ள கறைகளைப் போக்கி, பற்களைச் சுத்தமாக வெண்மை பளிச்சிடச் செய்கிறது. கால்கேட்டின் வளமான நுரை பல் இடுக்குகளில் ஊடுருவி வாய்நாற்றம் மற்றும் பற்சிதைவுக்குக் காரணமான கிருமிகளை அகற்றுகிறது. அதனால்தான் கால்கேட் பற்பொடி வாய் நாற்றத்தை உடனே நிறுத்தி, பற்சிதைவையும் எதிர்க்கிறது. அதன் குளுமையான இன்மணத்தையும் நீங்கள் பெரிதும் விரும்புவீர்கள்!

நவீன
பல் பராமரிப்பு முறைகளே ***சிக்கனமாக***
இருக்கும்போது பழைமையான
பற்பொடிகளை ஏன் உபயோகிக்க வேண்டும்!

உங்கள் குடும்பத்திற்கு
எகானமி சைஸ் கால்கேட்
பற்பொடியை இன்றே வாங்குங்கள்!
ஒரு டப்பா மாதக்கணக்கில் வரும்!





TP. G. 19 TM

ராஜாஜியின் ஜெயில் டைரி

இந்த விஷயங்களைக் கூறிவிட்டு அவர் என்னிடம் ஒரு கேள்வி கேட்டார்:

"ஏன் சாமி, இந்த அய்யமார் (பிராமணப் போலீஸ் சப் இன்ஸ்பெக்டர்கள்) இவ்வளவு கொடியவர்களாகவும், பழி பாவத்துக்கு அஞ்சாதவர்களாகவும் ஆய்விட்டார்கள்? இந்தப் போலீஸ்காரர்கள் இல்லாமல் ஆகும் காலம் எப்பொழுது வரும்?"

அதற்குள் நான், "உம்மீது வழக்கைப் பொய்யாகத் தொடுத்துவிட்டார்கள் என்று சொல்கிறீர். ஆனால் உண்மையாகவே திருடுகிறவர்கள் உண்டல்லவா? அப்படிப் பட்டவர்களிடமிருந்து ஜனங்களைப் பாதுகாக்கப் போலீஸ்காரர்கள் அவசியம் வேண்டும் அல்லவா?" என்று கூறினேன்.

அம்பட்டர்: ஆமாம், திருடர்கள் உண்டு. அது உண்மைதான். உங்கள் புண்ணியத்தில் எனக்கும் கொஞ்சம் நில புலங்களும் ஆடு மாடுகளும் இருக்கின்றன. என்னுடைய பயிரையும் ஒரு சமயம் சில திருடர்கள் திருடிக் கொண்டு போய் விட்டார்கள். ஆமாம்! போலீஸ்காரர்கள் இருக்க வேண்டியது தான். ஆனால் அவர்கள் நியாயமாக நடக்க வேண்டியது அவசியமல்லவா?

நான்: ஆமாம், ஆனால் ஏன் சப்-இன்ஸ்பெக்டர் பொய்யாக வழக்குத் தொடர்ந்தார்?

அம்பட்டர்: என்னிடமிருந்த கறவைப் பசுவைக் கேட்டார். 'உங்களுக்கு அடிமையாக நான் வேண்டுமானாலும் வருகிறேன். என் மகனை வேண்டுமானாலும் அனுப்புகிறேன். ஆனால் இது எங்கள் வீட்டிலேயே பிறந்து வளர்ந்த பசு. இது உயிர்போல் வளர்த்ததாயிற்றே. இதை எப்படிக் கொடுக்க முடியும்?' என்று சொன்னேன். அந்தக் கோபம்தான் அவருக்கு. எங்கேயோ களவு போயிற்றாம். என்னைப் பிடித்துச் சிறையில் வைத்து விட்டார்.

நான்: இன்னும் எவ்வளவு நாட்கள் இங்கே இருக்க வேண்டும்?

அம்பட்டர்: எட்டு மாதங்கள் இங்கே இருக்க வேண்டும். அதன் பின் போலீஸ் கண்காணிப்பில் மூன்று வருஷங்கள்.



நான்: அப்படியானால் மறுபடியும் மூன்று வருஷ காலம் சிறைக்கு வராமலிருப்பதற்காக நீர் போலீஸ்காரருக்கு லஞ்சம் கொடுக்க வேண்டும் போலிருக்கிறதே.

அம்பட்டர்: அவர்களுக்கு ஏன் லஞ்சம் கொடுக்க வேண்டும்? அதை நான் கொடுக்க மாட்டேன். அந்தப் பிச்சைக்காரப் பயல்கள் வேண்டுமானால் என்னைப் பார்த்துக் கொண்டு போகட்டுமே? நான் என்ன, ஆடோ மாடோ திருடப் போகிறேனா, இல்லையே? கடவுள் புண்ணியத்தில் எனக்கு நிலமும் வீடும் இருக்கின்றன. போலீஸ்காரர் என்னைக் காணவில்லை என்று பொய் சொல்லாமலிருப்பதற்காக அவர்களிடம் கையெழுத்து வாங்கி வைத்துக் கொள்வதற்கு எனக்கு ஒரு நோட்டுப் புத்தகம் கொடுக்க வேண்டும் என்று நான் கலெக்டரிடம் கேட்கப் போகிறேன்.

அந்தக் கிழவர் திறமையான அம்பட்டர். தம்முடைய திறமையைப் பற்றிப் பெருமை பாராட்டுபவர். அவர் என்னிடத்தில் கீழ்க்கண்டவாறு கேட்டார்:

"சாமி! உங்களைப் போன்ற மகாத்மாக்கள் ஏன் திருட்டுப் பசங்கள் உள்ள இந்த இடத்தில் வந்து தவம் செய்ய வேண்டும்? என்ன சாமி, நமக்குக் கடவுள் உதவி செய்யமாட்டாரா? நான் இங்கே பத்து வருஷகாலத்தைக் கழித்து விட்டேன். இன்னும் எட்டு மாதங்கள் தான் இருக்கிறது."

சமையல் அறையில் சிலருக்கு க்ஷவரம் செய்ய வேண்டியிருக்கிறது என்று கூறி, எனக்கு அவசரம் அவசரமாகச் செய்தார். அவர்களுக்குச் செய்தால் தான் அதிக உணவு கிடைக்கும்.

இன்று காலையில் என்னை நிறை போட்டார்கள். 98 ராத்தல் இருந்தேன். இந்தச் சிறைக்கு வந்த போது 104 ராத்தல். ஒரு மாத காலத்தில் 6 ராத்தல் குறைந்து விட்டது. அலட்சியம் செய்யக்கூடிய அளவல்ல. அதனால் சின்ன டாக்டருக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. என்னுடைய டிக்கட்டில் அரை மனத்துடனேயே அந்த நிறையை எழுதிக் கொண்டார்.

காவற்காரர் தலைவர் பெயர் ஷேக் மதார் சாகேப். அவருடைய நடத்தையைப் பாராட்

டவே வேண்டும். காவற்காரருக்கும் கைதிகளுக்கும் அவரிடம் வெறுப்பு உண்டாயிருந்த போதிலும் அவர் என்னால் அச்சம்தான். இந்தச் சிறையில் அந்த மனிதர் ஒருவர்தான் திறமை வாய்ந்தவர் என்று கூறலாம்.

இரண்டொரு தினங்களுக்கு முன் நான் என்னுடைய அறையைப் பெருக்கிக்கொண்டிருந்தேன். அதைப் பார்த்ததும் அவர், ''நீங்கள் ஏன் பெருக்குகிறீர்கள்? இந்தப் பகுதிக்கென்று ஏற்படுத்தியிருக்கும் நாராயணசாமி எங்கே? அவன் செய்வான். நீங்கள் செய்ய வேண்டாம்''. என்று கூறினார்.

நான் அவருக்குத் தொழிலின் மகிமையைப் பற்றியும், நாமே தமக்கு வேண்டியதைச் செய்து கொள்வதனால் உண்டாகும் சௌகரியத்தைப் பற்றியும் விரிவாக எடுத்துக் கூறினேன்.

அதற்கு அவர், ''ஆமாம், நீங்கள் சொல்வது உண்மைதான். ஏன், நானும் சமையல் செய்தல் போன்ற வீட்டு வேலைகளை யெல்லாம் சில சமயங்களில் செய்வதுண்டு'' என்று கூறினார்.

எத்தகைய பெரிய மனிதர்களும் இந்த வேலைகளை யெல்லாம் செய்ய வேண்டியதுதான் என்பதை இதிலிருந்து உணர்ந்து கொண்டேன். அவருக்கு மாதச் சம்பளம் ரூபாய் நாற்பத்தைந்து. அதிகக் கல்வி பெற்றவரில்லை என்று தோன்றுகிறது. ஆயினும் இவர் இந்திய சமஸ்தானத்தில் பெரிய உத்தியோகஸ்தர்கள் எப்படி நடந்து கொள்வார்களோ, அப்படித்தான் நடந்து கொண்டு வருகிறார்.

ஒரு சோகக் கதை

கனடா நாட்டின் தேசிய விலங்கான அமெரிக்கக் காட்டெருமை(American Bison)பார்த்த மாத்திரத்திலேயே அச்சம் தரக்கூடிய பயங்கர உருவம் கொண்டது. இக்காட்டெருமையின் உடலின் மேல்புறம் அழுக்குப் படிந்தாற் போன்ற நிறமுடைய கம்பளி முடிகளால் போர்த்தப்பட்டு அது முழங்கால் வரையில் தொங்கிக் கொண்டிருக்கும். ஐந்தரை அடி உயரமும் பத்தடி நீளமும் கொண்ட இம்மிருகம் சுமார் 1600 முதல் 2000 பவுண்டு வரை எடையுள்ளது. பெண் ஆணைவிடச் சற்றுச் சிறிதாக இருக்கும்.

காட்டெருமையின் உடலின் அடிப் பகுதியும், பக்கவாட்டுப் பகுதியும் குட்டையான, சுருண்ட மயிர்களால் போர்த்தப் பட்டிருக்கும். இக்குட்டையான முடிகள் கோடைக் காலத்தில் முழுதும் உதிர்ந்துவிடும் தன்மை கொண்டது. இதன் காரணமாகக் குளிர் காலம் வரும்வரைக்கும் முடிகளல்லாத தோல் பகுதியைக் காட்டில் உள்ள சிறிய வண்டுகள், பூச்சிகள் முதலானவை கடித்துக் காட்டெருமையைத் தொந்தரவுபடுத்தும். இதிலிருந்து விடுபடக் காட்டெருமை சேற்றுப் பகுதியில் போய் விழுந்து புரளும்.




இதன் மாமிசம் வீடுகளில் வளர்க்கக்கூடிய மாட்டின் மாமிசத்தைப் போன்று ருசி உள்ளது என்பதாக அறியப்பட்டுள்ளது. இதன் காரணமாக முற்காலத்தில் அமெரிக்கச் சிவப்பிந்தியர்கள் பெருமளவில் இவைகளை வேட்டையாடி இக்காட்டெருமை இனம் அழிவதற்குக் காரணமாக இருந்தனர். மேலும் காட்டெருமையின் தோலுக்கு அக்காலத்தில் நல்ல மதிப்பு இருந்தது. இதன் தோலினால் குளிர்கால ஆடைகளும், கூடாரங்களும், குதிரைச் சேணங்களும், மற்றும் பல பொருள்களும் தயாராயின.


முன் காலத்தில் காட்டெருமைகள் மந்தைகளாக இரை தேடி இடம் பெயர்ந்து சென்றன. ஒரு மந்தையில் லட்சம் எருமைகளுக்கு அதிகமாகக்கூட இருக்கும். நூற்றுக் கணக்கணக்கான மைல்களைக் கடந்து செல்லும் வலிமை உடையவை. இடைப்படும் நதிகளையும் லட்சியம் செய்யாமல் நடக்கும். இயற்கையின் வரப்பிரசாதம் என்று மதிக்கப்படுகிற இக்காட்டெருமைகளின் எண்ணிக்கை 1820ல் பதினாறு கோடியாக இருந்தது. 1889ல் வெறும் 554 ஆகக் குறைந்தது! அந்த அளவுக்கு வேட்டைக்காரர்களால் இவ்வினம் அழிக்கப்பட்டது. ஆண்டுகள் செல்லச் செல்ல எண்ணிக்கை மேலும் குறைந்து இன்று அமெரிக்கக் குடியரசில் இருபத்தொன்பது காட்டெருமைகளும், கானடா நாட்டில் சுமார் இருபது காட்டெருமைகளுமே உள்ளன. அழியும் தறுவாயிலிருக்கும் இக்காட்டெருமை இனத்தைப் பாதுகாப்பதில் கனடா, அமெரிக்கா ஆகிய இரு அரசாங்கங்களும் மிகுந்த சிரத்தை காட்டி வருகின்றன.

— அந்தோணி பேசில்


ஜாங்கோ ஜக்கு
கதை: குட்டி கிருஷ்ணன்
சித்திரம்: "ராஜு"
20
ஏழை மாணவனுக்கு ஆபத்து என்றதும் அனந்தாச்சாரியை விட்டு விட்டு ஜிம்மி தாற்காலிகப் பாலத்தைக் கடந்து அப்பால் போய் நின்று கொண்டது. வாலாட்டிக் குரைத்துத் தைரியம் சொல்லிற்று ஜக்குவுக்கு.
அந்தரத்தில் தொங்கிய ஜக்கு ஜிம்மி அளித்த தைரியத்தில் அங்குலம் அங்குலமாக முன்னேறினான்....
பலகைப் பாலத்தின் அருகே அனந்தாச்சாரி வந்தால் ஜிம்மி பாலம் மீதாக இப்பால் பாய்ந்து ஓடி வந்து மிரட்டியது, விரட்டியது!
கர்ர்ர்... ளொள் ளொள்.
பாலத்தை விட்டு விட்டு மதில் சுவரைப் பிடித்துக் கொண்டான் ஜக்கு... ஒரு ஜம்பு ஜம்பி....
....அடுத்த வீட்டு மொட்டை மாடியில் தரையில் விழுந்தான். ஜிம்மிக்கு ஒரே குதூகலம்.
ஜிம்மி, ஜிம்மி! என்னையும் பொன்மொழியையும் காப்பாற்றிக் கொண்டிருப்பதற்குத் தாங்க்யூ! யோசனை சொல்லி, உற்சாகப் படுத்தி விரோதியைத் துரத்தி அமர்க்களம் பண்ணுகிறாய்!
எனக்குத் தெரிஞ்ச டாக்டர் ஒருத்தர், மனுஷன் நன்றி கெட்டவன்; அதனாலே என் சொத்தெல்லாம் விலங்கின மருத்துவக் கல்லூரிக்கேன்னு எழுதி வைச்சுட்டார்! அது எவ்வளவு சரி என்பது இப்பத்தான் புரியுது! சற்று முன்னால் உன்னைக் குறைவாக மதிப்பிட்ட தற்கு மன்னிச்சுக்கோ!


அவர்கள் ஆனந்தத்துக்கு அணை போட்டார் அனந்தாச்சாரி!
வள் வள்! ளொள் ளொள்!
ஸி.ஐ.டி. ஸார்! அப்படியா சேதி? இப்பப் பாரு!
என்ன சொல்றே இப்போ? சட்டி சுட்டதடான்னு ஓடறது பழி அரிசித் திட்டம் மாதிரி விழுந்துடுவேன் அம்போன்னு!
வேண்டாம் ஜக்கு! கடமையை நான் செய்தேன்; கோபப் படலாமா? ப்ளீஸ்! புள்ளைக் குட்டிக்காரன் நான்!
ஆல் ரைட்! தவழ்ந்து பின்னாலேயே போயிடு. ஓர் அங்குலம் முன்னேறினாலும் பலகையை நான் ஒரு இழுப்பு.... உனக்குப் புளிசார்ப்பு!
வேலை கெட்ட வேலையில் விஞ்ஞானம் வேறேயா? தலையெழுத்து!
அனந்தாச்சாரி வந்த வழியாகவே பின் நோக்கித் தவழ்ந்து சென்று இறங்கியதும் ஜக்கு பலகையைத் தன் பக்கம் இழுத்துப் போட்டான்.
போயிட்டு வரேன்; டாட்டா!
கண்களின் அரைப்பார்வை திரும்பப் பெற்ற பி.கு.பி.ம. இச்சமயம் கூச்சல் கேட்டு மாடி ஏறி வந்தான்.
யாருய்யா நீர்? ஜக்குப் பயல் உன் கண்ணிலும் மண்ணைத் தூவிட்டு டாட்டா சொல்றானா? கவலைப்படாதே! பிச்சுமணியிடம் தப்பிச்சாலும் அவன் பிச்சுவாக் கத்திக்கு யாரும் தப்ப முடியாது!
குறி பார்த்து பி.கு.பி.ம. வீசிய கத்தி ஜக்குவைத் தாக்கியது.
அடப்பாவி!
ஆ!

தொடரும்



ராஜாஜியின் விமோசனம்

ராஜாஜி அவர்களின் ஒப்பற்ற சாதனைகள் பல. அவற்றுள் ஒன்று, ''விமோசனம்'' என்னும் ஓர் அரிய தமிழ் மாதப் பத்திரிகை.

சுக்ல (1929) வருஷம் ஆவணி மாதத்தில் இப்பத்திரிகை ''சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரி''யை ஆசிரியராகக் கொண்டு சேலம் ஜில்லா, திருச்செங்கோடு புதுப்பாளையம் காந்தி ஆசிரமத்திலிருந்து வெளிவந்தது.

டெம்மி ⅛ அளவில் நாற்பது பக்கம். கனத்த அட்டை 4 பக்கம் பதிவு எண் எம். 2519.

'' 'இந்தப் பத்திரிகை வேண்டுவோர் ரூ. 1. வருஷ சந்தாத் தொகையுடன், ''விமோசனம்'' காரியதரிசி, காந்தி ஆசிரமம், திருச்செங்கோடு' என்ற விலாசத்துக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம். அயல்நாட்டுக்கு அதிக தபாற் கூலி 0—2—0 சேர்த்து அனுப்ப வேண்டும். தனிப் பிரதி எல்லாக் காதி வஸ்திராலயங்களிலும் மற்ற இடங்களிலும் பெறலாம். விலை அணா ஒன்று. தபாலில் எழுதிப் பெற்றால் தபாற் கூலி சேர்த்து 0—1—6.''

இப் பத்திரிகை ''சென்னை ஹிந்தி பிரசார அச்சுக்கூடத்தில் அச்சிடப்பெற்று, சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியாரால் வெளியிடப்பட்டது.''

தனிச் சிறப்பு

இப் பத்திரிகையின் தனிச் சிறப்புகள் பல. பாமர மக்களிடையே பெரும் எழுச்சியை உண்டு பண்ணுவதற்காகத் தொடங்கப்பட்ட முதல் பத்திரிகை இது.

1. குறிப்பிட்ட ஒரு கொள்கைக்காகவே — முற்றிலும் மதுவிலக்குப் பிரசாரத்துக்காகவே வெளிவந்தது.
2. மக்கள் அனைவரும் புரிந்துகொள்ளும் எளிய நடை.
3. வியாபார விளம்பரம் கிடையாது.
4. சித்திரங்களுடன் வெளிவந்த முதல் பத்திரிகை.
5. அச்சுப் பிழையே இல்லாதது.
6. பத்திரிகை தர்மம் வழுவாத பத்திரிகை.
7. தரமான கட்டுரைகளும் கதைகளும் கொண்டது.

முதல் தரமான பத்திரிகாசிரியர்கள் வரிசையில் ராஜாஜிக்கு முதல் இடம் உண்டு.

1916ம் ஆண்டில் தமிழ் சொல்லாக்கத்துக்காக ஆங்கிலத்தில் ஒரு மாதப் பத்திரிகை ஆரம்பித்தார்.

பின்னர் ''விமோசனம்'' பத்திரிகையைச் சீரும் சிறப்புடனும் நடத்தினர்.

காந்தியடிகள் சிறையிலிருந்தபோது Young India ஆங்கில வாரப் பத்திரிகையின் ஆசிரியராக இருந்து மிகத் திறமையுடன் நடத்தினர்.

கடைசி நாட்களில் ''ஸ்வராஜ்யா'' பத்திரிகையில் 'டியர் ரீடர்' என்ற தலைப்பில் எழுதி உலகப் புகழ் பெற்றார்.

''விமோசனம்'' பத்திரிகைகள் எத்தனை பிரதிகள் வெளியாயின என்று தெரியவில்லை. 2000 பிரதிகள்



வெளியாகி யிருக்கக் கூடும் என்று ஊகிக்கலாம்.

பத்தாவது இதழ் வெளியாவதற்கு முன் ராஜாஜி வேதாரண்யம் உப்பு சத்தியாக்கிரகத்தில் சிறை புகுந்தார்.

''விமோசனம்'' பத்தாவது இதழில், 398வது பக்கத்தில் பின்வரும் குறிப்பு காணப்படுகிறது.:

''நமது ஆசிரியர் சிறை புகுந்தபோது, ''விமோசனம்'' பத்திரிகையைத் தொடர்ந்து நடத்த வேண்டும் என்பதாகக் கட்டளையிட்டுச் சென்றிருக்கிறார்.

''எந்த வேலை நின்றாலும் மதுவிலக்கு வேலை நிற்கக் கூடாது என்பது ஆச்சாரியாரின் விருப்பம். ஆதலின் வேறு தடைகள் எதுவும் குறுக்கிடாதவரையில் பத்திரிகை நடத்தப்பட்டு வரும்.

''அன்பர்கள் அனைவரும் இம்முயற்சியில் நம்முடன் ஒத்துழைத்து வருவார்கள் என்று நம்புகிறோம்.''

பத்தாவது இதழுக்குப் பின்னர் எத்தனை இதழ்கள் வெளியாயின என்று தெரியவில்லை. மூன்று அல்லது நான்கு இதழ்கள் வெளிவந்திருக்கக் கூடும்.

உதவி ஆசிரியர்

இப் பத்திரிகையில் ஆரம்ப முதல் ஸ்ரீ ரா. கிருஷ்ணமூர்த்தி (கல்கி) உதவி ஆசிரியராக இருந்தார். பத்தாவது இதழில் ''ரா. கிருஷ்ணமூர்த்தி, உதவி ஆசிரியர்'' என்று அச்சிடப்பெற்றிருக்கிறது.

உதவி ஆசிரியர் மட்டுமல்ல, ''விமோசனம்'' பத்திரிகையின் எல்லா வேலைகளையும் 'கல்கி' அவர்களே செய்து வந்ததாகத் தெரிகிறது.

'ஆனந்த விகட'னில் ''மழையைக் கட்டும் மாயை'' என்ற கட்டுரையில் 'கல்கி' பின்வருமாறு எழுதியுள்ளார்:

''மேற்படி (புதுப்பாளையம்) காந்தி ஆசிரமத்தில் சுமார் மூன்று வருஷ காலம் வசித்துத் தொண்டு செய்யும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது.

''ஒற்றை வரி கள்ளிக்கோட்டை ஓடு போட்ட கூரைக்கு அடியில் வெப்பத்தில் வெந்து கொண்டு ''விமோசனம்'' பத்திரிகைச் சந்தாதாரர்களின் விலாசம் எழுதிய நாட்களை நினைத்துச் சில சமயம் நான் பெருமூச்சு விடுவதுண்டு.

''அதே கூரையின் அடியில் தமிழ்நாட்டுத் தலைவரும் வெந்து கொண்டிருந்தார் என்ற எண்ணம்தான் அந்த நாட்களின் மீது நான் அவ்வளவு பிரியம் கொள்வதற்குக் காரணம்.

சித்திரங்கள் எழுதியவர்

ஐந்தாவது இதழ் 178—ம் பக்கத்தில் ''விமோசனம் நேயர்களுக்கு'' என்ற தலைப்பில் பின்வருமாறு வெளியாகி யிருக்கிறது:

''விமோசனம்'' பத்திரிகைக்குச் சித்திரப் படங்கள் எழுதிக் கொடுத்து வந்த ஸ்ரீமான் தாமோதரம் செட்டியார் அவர்கள் சென்ற மாதக் கடைசியில் தேக அசௌக்கியமுற்றுச் சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரியில் சிகிச்சை செய்தும் பயனின்றிக் காலஞ்சென்ற செய்தியை மிக்க துக்கத்தோடு தெரிவித்துக் கொள்கிறோம்.

''ஸ்ரீமான் செட்டியார் சுமார் 24 வயதேயான இளைஞர். நமது பத்திரிகையில் வெளியான சித்திரப் படங்களில் அவருடைய அரிய சித்திரத் திறமையைக் கண்டு மகிழ்ந்து வந்த நமது நேயர்களெல்லாம் நம்மைப் போலவே அவருடைய அகால மரணத்துக்காக வருந்துவார்களென்று நம்புகிறோம்.''

சந்தாதார்

''விமோசனம்'' பத்திரிகைக்குச் சந்தாதார்களுடன் நெருங்கிய தொடர்பு இருந்தது என்பதற்குச் சில உதாரணங்கள்:

ஏழாவது இதழ் 277ம் பக்கத்தில்:

''தமிழ் நாட்டின் பல இடங்களிலும் பல அன்பர்கள் மதுவிலக்குக்காகப் பாடுபட்டு வருகிறார்கள். 'விமோசன'த்துக்குச் சந்தாதார் சேர்த்துக் கொடுத்தும், தனிப் பிரதிகள் விற்பனை செய்தும், தாங்களே ஒன்றுக்கு மேற்பட்ட பிரதிகள் வாங்கி விநியோகித்தும் உதவி செய்யும் அன்பர்கள் எல்லோருக்கும் நமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.''

எட்டாவது இதழ் 319ம் பக்கத்தில்:

''நான் நெடுநாட்களாகப் பழகி வந்திருந்த கொடிய வழக்கத்தினின்றும் தங்கள் பத்திரிகை மூலமாக விடுதலையடைந்துவிட்டதை சந்தோஷத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். என்னை ஒரு சந்தாதாரராகப் பதிவு செய்து கொள்ளுங்கள்'' என்று கரூரிலிருந்து ஒருவர் எழுதிச் சந்தா ரூபாய் ஒன்றும் அனுப்பியிருக்கிறார்.

பூனமல்லியிலிருந்து ஓர் அன்பர் ''தங்கள் பத்திரிகையை வாசித்த பிறகு ஒரு குடிகாரனைக் குடியிலிருந்து நிவர்த்தி செய்தேன்'' என்று எழுதுகிறார்.

ஒன்பதாவது இதழ் 357ம் பக்கத்தில்:

பர்மா நாட்டில் வசிக்கும் நமது சந்தா நேயர்களில் ஒருவரான ஸ்ரீமான் சாமிநாதன் என்னும் அன்பர், நான்கு ரூபாய் பணம் அனுப்பி, இன்னும் நான்கு வருஷங்களுக்குத் தம்மைச் சந்தாதாரராய்ச் சேர்த்துக்கொள்ளுமாறு கேட்டிருந்தார்.

தேசத்தில் பெரிய விடுதலைப் போர் தொடங்கி யிருக்கும் இச் சமயத்தில் ''விமோசன''த்தைத் தொடர்ந்து நடத்துவது பற்றி நிச்சயம் சொல்வதற்கில்லை என்றும், ஆகையால் ஒரு வருஷத்துக்கு மேல் பதிவு செய்து கொள்ள முடியாதென்றும் அவருக்குத் தெரிவித்திருந்தோம்.

இதற்குப் பதிலாக மேற்படி ரூபாய் நான்கையும் ''விமோசன''த்துக்கு நன்கொடையாக வைத்துக் கொள்ளும்படி அவர் எழுதியிருக்கிறார். இவ்வன்பருக்கு நமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ராஜாஜி எழுதிய கதைகள் — நாடகங்கள்

1. சுக்குட்டிக்குப் புத்தி வந்தது
2. கெண்டி வீரன் வெற்றி

3. ஜெயராமன் பள்ளிக்கூடம் போன கதை.
4. ஜாலக்காரன்
5. கவால் வருமானம்
6. பிரமனை வெல்லல்
7. மதியினை வருமானம்

ராஜாஜி எழுதிய கட்டுரைகளும், குறிப்புக்களும், துணுக்குகளும் ஏராளம்.

ராஜாஜி 'ஸ்வராஜ்யா'வில் 'டியர் ரீடர்' எழுதி வந்த பாணியில் கடற்கரைக் கிளிஞ்சல் என்ற தலைப்பில் ஒவ்வொரு மாதமும் சுவையாக எழுதி வந்திருக்கிறார்.

'கல்கி' எழுதிய கதைகள்

1.. பாங்கர் விநாயக ராவ்
2. தெய்வ யானை
3. சின்னத்தம்பியும் திருடர்களும்
4. அரசூர் பஞ்சாயத்து
5. கோவிந்தனும் வீரப்பனும்
6. கவர்னர் வண்டி
7. விருதுகள் சின்னு முதலி

ஸ்ரீ க. சந்தானம் எழுதிய கதைகள்

1. மிராசுதார் சுந்தரப்பையர்
2. புது இன்ஸ்பெக்டர்
3. சட்டசபை பழனி வாத்தியார்

ஸ்ரீமதி ராமகிரி அம்மாள் எழுதிய கதைகள்

1. கமலம் பழிவாங்கினாள்
2. ரகுபதியின் பந்தயம்

ஸ்ரீ சதாசிவம் ''பிரசவமும் பிராந்தியும்'' என்ற கதையையும் ஸ்ரீ தி. ஜ. ர. ''குப்பனின் பணி'' என்ற கதையையும் எழுதியுள்ளார்கள்.

மற்றும் சிலர் கதை, கட்டுரைகள் எழுதியுள்ளனர். பிரசங்க பூஷணம் பு. பா. இரத்தின சபாபதி நாயகரும், மலேயாவில் வசித்த யாழ்ப்பாணர் ஸ்ரீ நெ. வை. செல்லையாவும் கவிதைகள் எழுதியுள்ளனர்.

சுமார் ஓர் ஆண்டு காலம் உலவிய ''விமோசனம்'' தமிழ்ப் பத்திரிகை உலகில் தனி இடம் பெற்று விட்டது.

'விமோசனம்'

(1 முதல் 10 இதழ்களிலிருந்து)

நாற்கோணக் காதல்!



என் வாழ்க்கைத் துணை என்னும் பொருள் தரும் படம் 'மேரே ஜீவன் ஸாதி'. ஒரு பெண் டாக்டரின், கண் டாக்டரின் கதை. ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணும் ஓவியர், பாடகரின் கதை. இருவரும் ஒருவரையொருவர் காதலிக்கின்றனர். இது முக்கோணக் காதல் மட்டும் இல்லை; நாற்கோணக் காதலும் கூட. ஒரு பெண்ணை இரு ஆண்களும், ஓர் ஆணை இரு பெண்களும் நேசித்தும் பல கோணங்களைக் காட்டுகின்றனர். சீனுக்கு சீன் மாற்றங்கள் புதுமைகள் வேறு பல துறைகளில் ஏற்பட்டாலும் இந்த பிலிம் சீனில் மட்டும் இந்த முக்கோண - நாற்கோணக் காதலைத் தவிர்த்து வேறு எதுவும் புதிதாகக் காண முடிவதில்லை. செக்கு மாடாக ஒரே ஃபார்முலா!

இப்படத்தில் முக்கிய பாத்திரமேற்று நடிப்பவர்கள் ராஜேஷ் கன்னா, தனுஜா, ஹெலன், சுஜித் குமார். இந்த வரிசை முறையிலேயே இவர்களுடைய நடிப்பும் அமைந்துள்ளது. சுஜித் குமாரின் பாத்திரப் படைப்பில் காமமும் குரோதமும் மோதுவது சிறப்பாகச் சித்திரிக்கப்பட்டுள்ளது. இப்பாத்திரங்களை உலாவ விட்டு, முடிக்கும் முறையிலும் சிறிது புதுமை கையாளப்பட்டுள்ளது. ஹெலனைக் கடைசி வரையில் கொண்டு வந்து கழுத்தை அறுக்காமல் விட்டதற்குப் பாராட்டியே தீர வேண்டும்.

கண் டாக்டர் கதாநாயகியானதால் கண் ஆப்பரேஷனைக் கண்டு மெய்சிலிர்க்க வைத்துவிட்டார்கள். இந்தப் படத்தின் இயக்குநரே, காமிராக் கலைஞராகவும் இருப்பதால், காமிராவுக்கு நல்ல வேலை கொடுத்தும் படத்துக்குப் புது மெருகு கூட்டியிருக்கிறார்! கையில் காமிரா இருக்கிறது என்பதற்காகப் படத்தில் ஒருமுறைக்கு இருமுறையாக விபத்துக்கள் நேர விட்டிருப்பதும், உள்ள உள்ளக்களிப்பிலேயே கனகச்சிதமாகப் பாத்திரப் படைப்பைப் பரிமளிக்கச் செய்ய வேண்டியது போகச் சண்டையையும் மோதலையும் சித்திரித்தும் பழைய பாணியிலேயே கதையை முடித்திருப்பதும் காமிராவுக்குப் பெருமை சேர்ப்பதாகக் கூற முடியாது. இரண்டொரு இனிய பாடல்கள் செவிக்கு விருந்தளிக்கின்றன. வண்ணக் காட்சிகள் விழிக்கு இதம் அளிக்கின்றன.





துரோகிதான்

உமாசந்திரன்

அவன் துரோகிதான்! மனமறிந்து செய்த துரோகம். அருமைத் தமையனுக்கு அப்படிப் பட்ட துரோகத்தைச் செய்ய எந்தத் தம்பி யாவது துணிவானா? ஆனால் அவ்வளவு பெரிய துரோகத்தைச் செய்தும் அதைப் பற்றிய குற்ற உணர்ச்சி எதுவும் அவன் மனத் தில் சுமையாய் அழுத்தவில்லை. அவன் மனம் இலேசாயிருந்தது. தவிர்க்க முடியாத கடமையைச் செய்துவிட்டோம் என்ற நினைவு இருந்தது. உரிய சமயத்தில் அதற்கு வேண் டிய துணிச்சலைப் பெற்று விட்டதைப் பற்றிய குதூகலம் குடிகொண்டிருந்தது.

அம்மா அவனிடம் எப்படிச் சீறினாள்! "துரோகி! இதற்காகத்தான் டெல்லியி லிருந்து அவ்வளவு அவசரம் அவசரமாகப் பறந்து வந்தாயா?"

ஆமாம்; அவன் பறந்துதான் வந்தான். அருமை அண்ணாவின் திருமணத்துக்கு அவன் போகாமல் இருந்தால் எப்படி? ஒரு நாள் முன்னதாக அங்கு போய்ச் சேர வேண்டும் என்ற பரபரப்பு இருக்காதா? லீவு கிடைப் பதில் ஏற்பட்ட தாமதம், அதற்காக அவன் பட்ட பாடு, அனுபவித்த தவிப்பு — கடைசி யில் லீவு கிடைத்ததும் விமானத்தில் இடம் பிடிக்க ஆயிரம் பாடுபட்டு பறந்து வரும்படி தான் ஆயிற்று. அப்படி வந்திருக்கா விட்டால் — இந்தத் துரோகிப் பட்டம் அவனுக்கு எப்படிக் கிடைத்திருக்க முடியும்?

அண்ணா அம்மாவுடன் போட்டி போட்டுக் கொண்டு தன் ஊனமான காலைக் கெந்திக் கெந்தி முன்னே பாய்ந்து எப்படிச் சத்தம் போட்டான்!

"நீ எனக்குச் சத்துருவாய்த் தலையெடுப்பா யென்று நான் சொப்பனத்திலும் நினைக்க வில்லையே! நீ முன்னுக்கு வர வேண்டும் என் பதையே என் லட்சியமாகக் கொண்டு உன் னுடைய ஒவ்வொரு உயர்வையும் என்னு டைய உயர்வாக நினைத்துச் சந்தோஷப்பட் டுக் கொண்டிருந்தேனே. என் நெஞ்சில் நெருப்பை அள்ளிக் கொட்ட வேண்டு மென்று உனக்கு எப்படித் தோன்றியது?" — உணர்ச்சி மிகுதியில் அண்ணா அழுதே விட்டான்.

கேதாரி வாயே திறக்கவில்லை. துஷ்டன், தூர்த்தன், நயவஞ்சகன் — அப்பப்பா! என் னென்ன வசைமாரிகள்! காதால் கேட்கவே முடியாத பழிச் சொற்கள்! முகத்தில் புன் னகை மாறாமல் அவ்வளவையும் அமைதி யுடன் கேட்டுக் கொண்டிருந்தான் கேதாரி.

புயல் ஒருவிதமாக அடங்கி ஓய்ந்ததும் அவன் இயல்பான குரலில் கூறினான்: "நானே அவளுடன் டெல்லிக்குப் புறப்படுகிறேன். அதற்கு முன்னால் அவள் இங்கு வந்து உங்க



ளுடைய ஆசியைப் பெற்றுப் போக ஆசைப்படுகிறான். நீங்கள் அனுமதித்தால்...''

அடங்கிய புயல் மீண்டும் சூறாவளியாக எழுந்தது.

''அவள் இந்த வீட்டில் காலடி வைக்கக் கூடாது! அப்படிப்பட்ட ஓடுகாலி என்னிடமிருந்து ஆசீர்வாதமா எதிர்பார்க்கிறான்? அவளை....அவளை....'' சீற்றத்தில் வெடிக்க இருந்த வசைச் சொற்களை அம்மா வெளியே கொட்டாமல் அடக்கிக் கொண்டாளே, அதுவே பெரிய ஆசீர்வாதம்தான்!

பாவம், அண்ணாவை நினைத்துத்தான் கேதாரியின் மனம் அல்லல்பட்டது. அண்ணாவுடைய நொண்டி வாழ்க்கையில் என்றாவது நிறைவு ஏற்படுமா என்று அவன் எவ்வளவு ஏங்கியிருக்கிறான்! ஆனால், நிறைவு நெருங்கிய சமயத்தில் அதைத் தகர்த்தெறிய அவனே காரணமாகும்படி நேர்ந்துவிட்டதே!

இளம்பிள்ளை வாதம் அண்ணா வாசுவின் வலது காலைக் குச்சி போல் ஆக்கி வைத்திருந்தது. ஆனால் அதற்காக வாசு வாழ்வில் நம்பிக்கை இழந்து ஒடுங்கிவிடவில்லை. உள்ளூர் உயர்நிலைப் பள்ளியில் கிடைத்த உபாத்தியாயர் வேலையை உற்சாகமாகச் செய்து வந்தான். அம்மாவின் அன்பும் பரிவும் அவனுக்குப் பக்க பலமாக அமைந்திருந்தன. ஆனால் என்றுமே அவன் தன்னை நம்பியிருக்க முடியாது என்று அம்மா உணராமல் இல்லை. அவனுக்குத் தகுந்த பெண்ணாகப் பார்த்து மணம் செய்து வைத்துவிடத் துடித்தாள். என்ன துடித்து என்ன பிரயோஜனம்? வாசுவின் ஊனம் எதுவுமே கூடி வரவொட்டாமல் குறுக்கே நின்றதே!

''அம்மா! எனக்காக நீ ஏன் இப்படி மனசை அலட்டிக் கொள்கிறாய்? என்னுடைய வாழ்க்கை நொண்டியாகவே இருந்து விட்டுப் போகட்டும். என்னைப் பற்றிய கவலையில் நீ கேதாரியை அலட்சியம் செய்துவிடாதே. அவன் நன்றாக இருக்க வேண்டும். அவனுக்கு எல்லா நிறைவும் கிடைத்தால் அதுவே எனக்கு மனநிறைவைக் கொடுக்க முடியும்!'' — அண்ணா வெறும் வாய் வார்த்தைக்காக இப்படிச் சொல்லவில்லை. ஒவ்வொரு விதத்திலும் கேதாரியின் உயர்வுக்காகப் பாடுபட்டு வந்தான். தன்னுடைய தேவைகளை யெல்லாம் குறைத்துக் கொண்டு ஓய்வு நேரத்தையெல்லாம் உழைப்பு நேரமாக்கி, கேதாரியின் மேல் படிப்புக்குப் பணம் தேடிக் கொடுத்துக் கொண்டிருந்தான். கேதாரி உயர்ந்த பரீட்சையில் தேறி டெல்லியில் பெரிய உத்தியோகத்தில் அமரும்வரையில் வாசுவின் மனத்தில் சுயநலத்தைப் பற்றிய சிந்தனையே எழுந்ததில்லை.

அண்ணாவின் அவ்வளவு அன்புக்கும் தியாகத்துக்கும் தான் பாத்திரம்தானா என்று தன்னைத் தானே கேட்டுக் கொண்டான் கேதாரி. அண்ணா கொடுத்த சலுகைகளை யெல்லாம் சரியான விதத்திலா பயன்படுத்திக்கொண்டு வந்தான் அவன்? தன்னுடைய வீண் செலவுகளுக்கெல்லாம் பணம் தேடிக் கொடுப்பதற்கு அண்ணா கடமைப்பட்டவன் என்ற மமதையில் எப்படியெல்லாம் ஆட்டம் போட்டிருக்கிறான்! கண்மூடித்தனமான தான்தோன்றி வாழ்க்கையில் எப்படியெல்லாம் திசை தெரியாமல் திரிந்திருக்கிறான்! எப்படியோ அவன் படித்துப் பட்டம் வாங்கிக் கரையேறியதே பெரிய அதிசயமல்லவா?

ஆனால் அண்ணா எப்போதாவது அவனிடம் மனம் கசந்து பேசியதுண்டா? அம்மா கேதாரியைக் கண்டிக்க முற்பட்டால்கூட வாசு கேதாரியின் பக்கம்தான் பரிந்து பேசுவான்.

''இந்த வயதில் இப்படி யெல்லாம்தான் இருக்கத் தோன்றும். இப்போது இதற்கு அணை போட்டால் அதனால் ஏற்படும் ஏமாற்ற உணர்ச்சி அவனுடைய முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டையாகி விடும்!''



''கொஞ்சம் கூடப் பொறுப்பில்லாமல் பணத்தை விரயம் செய்து கொண்டிருக்கிறானே! அப்படி என்ன குபேரப் பட்டணம் கொள்ளை போகிறதா இங்கே? ஒவ்வொரு பைசாவும் நீ உன் ரத்தத்தைச் சிந்தித்தானே சம்பாதிக்க வேண்டியிருக்கிறது! அந்த உணர்ச்சி அவனுக்குக் கொஞ்சமாவது இருக்க வேண்டாமா!''

''அவனும் ஒரு வேலையில் வேரூன்றிச் சுயமாகச் சம்பாதிக்க ஆரம்பித்து விட்டால் பொறுப்பு தானாகவே வரும்'' என்று கூறித் தாயாரைச் சமாதானப்படுத்தி வந்தான்.

வாசுவின் வார்த்தை பொய்யாகவில்லை. டெல்லியில் நல்ல உத்தியோகம் கிடைத்துக் கைநிறையச் சம்பளம் வாங்க ஆரம்பித்ததும் கேதாரி பொறுப்புணர்ச்சியுடன்தான் நடந்து கொண்டான். கணிசமான தொகையை மாதா மாதம் அண்ணாவுக்கு அனுப்பித் தன் நன்றிக் கடனைத் தீர்த்துக் கொண்டுதான் இருந்தான். ஆனால் அதே பொறுப்புணர்ச்சி மற்ற எல்லா விதங்களிலும் தோன்றி இருந்ததா? வாலிப மமதையில் படிந்து விட்டிருந்த பொறுப்பற்ற உல்லாச மனப்பான்மையை உதறி எறிய அவனால் முடிந்ததா? அந்த உல்லாச வெறிதானே அவ்வளவு பெரிய சூறாவளிக்குக் காரணமாய் முடிந்தது!

கேதாரியின் எண்ணங்களுக்குச் சுருதியாக அமைந்திருந்த ரயிலின் கடகடவென்ற ஒலி சட்டென்று ஓய்ந்ததும், அவனுடைய எண்ணங்களும் தடைப்பட்டு நின்றன. ராதா அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தாள். கேதாரிக்குத் தூக்கம் பிடிக்கவில்லை. இருந்தாலும் விளக்கை அணைத்துவிட்டு ராதாவின் கால் பக்கமாக ஜன்னலை ஒட்டினாற்போல் உட்கார்ந்து சூனியத்தைப் பார்த்தவாறு தன் எண்ணங்களில் மூழ்கியிருந்தான்.

அம்மா அவளை மன்னித்து ஆசிர்வதிக்கத் தயாராக இல்லை என்று கேதாரி அவளை எச்சரித்தும் ராதா அம்மாவை நமஸ்கரித்து ஆசி பெறாமல் புறப்பட முடியாது என்று பிடிவாதமாகக் கூறி விட்டாள். பலன்? அம்மாவிடமிருந்து நல்ல ஆசிர்வாதம்தான் கிடைத்தது அவளுக்கு! சொல்லம்புகளால் அவள் மனத்தை எப்படிச் சின்னாபின்னப்படுத்தி விட்டாள் அம்மா!

ஆனால் அம்மாவை நோவதற்கு என்ன இருந்தது? அவளுக்கு என்ன தெரியும், பாவம்! உண்மை என்னவென்று விளக்கிக் கூறத்தான் முடிந்ததா? அவ்வளவு கடுமையான வசைமாரிக்கு எதிரில் ராதாவோ, அவளே வாயைத் திறக்க முடிந்ததா? அவ்வளவையும் தாங்கிக் கொண்டு மௌனமாக அங்கிருந்து புறப்படுவதைத் தவிர வேறு என்ன செய்ய முடிந்தது?

ராதா சட்டென்று கண்களைக் கசக்கியவாறு எழுந்து உட்கார்ந்து ''நீங்கள் தூங்கவில்லையா?'' என்று கேட்டாள்.

''தூக்கத்தை வரவழைக்கத்தான் முயற்சி செய்து கொண்டிருக்கிறேன். ஆனால் ஏதேதோ எண்ணங்கள் என் மனத்தை அலைக்கழித்துத் தூக்கத்தை நெருங்கவொட்டாமல் செய்து கொண்டிருக்கின்றன!''

''எதற்காக நீங்கள் அப்படி மனத்தை வாட்டிக் கொள்ள வேண்டும்? நானே எதையும் பாராட்டாமல் இருக்கிறேனே! உங்களுக்கு என்ன வந்தது?''

''எனக்கு ஒன்றும் வரவில்லைதான் ராதா. ஆனால் இந்த மனசு என்று ஒன்று இருக்கிறதே....''

''அது எவ்வளவு நல்ல மனசு என்று எனக்குத்தான் தெரியும். அதுதானே என்னை வாழ வைத்திருக்கிறது!'' — இவ்வாறு கூறிய ராதா சட்டென்று விம்மி விம்மி அழ ஆரம்பித்தாள்.

''என்ன ராதா?'' என்று பதைப்புடன் கேட்டான் கேதாரி, அவளை ஆதரவாக அணைத்துக் கொண்டு.

''நீங்கள் அன்று வராமல் இருந்தால்... வராமல் இருந்தால்....''

''சொல் ராதா. என்ன நடந்திருக்கும்?''

''இந்த ராதாவின் வாழ்வு அன்றே முடிந்திருக்கும். மணமேடை பிணமேடையாக மாறியிருக்கும்!''

தவிப்புடன் அவள் வாயைப் பொத்தினான் கேதாரி. ''அந்த விபரீதமான கற்பனை எல்லாம் இப்போது எதற்கு? நீ இப்போது நிம்மதியாகத் தூங்க வேண்டும், தெரிகிறதா?'' என்று கூறிய அவன், தன் மடியில் அவளைப் படுக்க வைத்துக் கொண்டு ஒரு குழந்தையைத் தூங்கப்பண்ணுவதற்குத் தட்டிக் கொடுப்பது போல் தட்டினான். அதே சமயம் வண்டியும் அரை மனத்துடன் ஒரு முறை கூவிவிட்டு ஒரு பெருமூச்சு விட்டுக் கொண்டு நகர ஆரம்பித்தது.

ரயிலின் தாளக்கட்டுப் பிசகாத சத்தத்துடன் இணைந்து கேதாரியின் சிந்தனை ஓட்டமும் தொடர்ந்தது. அன்று ஒரு நாளில் என்னென்ன நிகழ்ச்சிகள் எல்லாம் நிகழ்ந்துவிட்டன! திருச்சியிலிருந்து விமானத்தை விட்டு இறங்கியதும் ஒரு விநாடிகூடத் தாமதிக்காமல், டாக்ஸிக்காரன்கேட்ட அநியாயவாடகையையும் பொருட்படுத்தாமல் வாசுவின் ஜானவாச ஊர்வலம் ஆரம்பிப்பதற்குச் சில நிமிஷங்களே இருந்தபோது அவன் அங்கு போய்ச் சேர்ந்திருந்தான். அலங்காரக் காரில் அமர்ந்திருந்த வாசுவிடம் ஓடிச் சென்று, ''அண்ணா! எப்படிக் கணக்காக வந்து விட்டேன் பார்த்தாயா!'' என்று மகிழ்ச்சியுடன் கூறியவாறு அவனுடைய கையைப் பிடித்துக் குலுக்கினான். வாசுவின் முகமும் மலர்ந்தது. ''எனக்குத் தெரியும் கேதாரி, உன்னால் எப்படி வராமலிருக்க முடியும்! பறந்தாவது வந்துவிட மாட்டாயா என்றுதான் ஆவலுடன் எதிர்பார்த்திருந்தேன்!'' என்றான் அவன் தோளில் கையை வைத்து அணைத்தவாறு.

''பறந்துதான் வந்தேன் அண்ணா!'' என்றான் கேதாரி.

அம்மாவுக்குச் சந்தோஷம் பிடிபடவில்லை. ''எப்படியோ சரியான சமயத்துக்கு வந்து சேர்ந்தாயே அப்பா. இனிமேல் எனக்குக் கவலை யில்லை. எல்லாப் பொறுப்பையும் நீயே கவனித்துக் கொள்வாய்!'' என்று பூரிப்புடன் கூறினாள்.

குதூகலமே உருவாகக் கேதாரி ஊர்வலத்தில் பங்கெடுத்துக் கொண்டான். வாசுவின் சங்கோசத்தைப் போக்குவதற்காக வழிநெடுக அவனுடன் தமாஷாக ஏதேதோ பேசிச் சிரித்துக்கொண்டான். அதே சமயம் தனக்கு வரப்



mcm/app/10 tam


சந்திரிகாவுடன் மட்டுமே
அழகு நிறைவு பெறுகிறது
சந்திரிகா
ஆயுர்வேதிக் டாய்லட் சோப்
CHANDRIKA
AYURVEDIC
SOAP
சந்திரிகா பிராடக்ட்ஸ் கோயம்புத்தூர்-2 சென்னை-10

போகும் அண்ணி எப்படி இருப்பாள் என்று கற்பனை செய்து பார்க்கவும் அவன் மனம் விழைந்தது.

'எப்படி இருப்பாள்? ஏழைப் பெண்ணாகத் தான் இருக்க வேண்டும். இல்லாவிட்டால் அண்ணாவுக்கு அம்மாதிரி ஊனம் இருப்பது தெரிந்தும் இந்தத் திருமணத்துக்குச் சம்மதித்திருப்பாளா? அல்லது அவளுக்கே ஏதாவது ஊனம் இருந்தாலும் இருக்கலாம். குரூபியாயிருந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. எப்படி இருந்தால் என்ன? அண்ணாவின் ஊனத்துக்கு ஊன்றுகோலாக ஒரு வாழ்க்கைத் துணைவி அவனுக்குக் கிடைத்திருக்கிறாளே, அதுவே போதும்...'

கல்யாண மண்டபத்துக்குப் போய்ச் சேர்ந்ததும் சம்பிரதாயமான சடங்குகள் தொடங்கின. மேடையை நெருங்கி வந்து கொண்டிருந்த மணப் பெண்ணைப் பார்த்ததும் கேதாரியின் மனத்தில் ஒரு பூகம்பமே நிகழ்ந்து விட்டது.

அவன் நினைத்தது போல் அவள் குரூபியாகவோ, ஊனம் உடையவளாகவோ இல்லை. அழகுச் சிலையாக ஒயில் ததும்ப நடந்து வந்தாள். கேதாரியைத் திகைப்பில் ஆழ்த்திய விஷயம் அதுமட்டுமல்ல; அவள்....அவள்...

ஆம், அவளேதான்! குனிந்த தலை நிமிராமல், மேடைக்கு வந்து உட்கார்ந்த அவள் நிச்சயதார்த்தப் புடவையை வாங்கிக்கொள்ளும்போது சற்றுத் தலை நிமிர்ந்தாள். அப்போது அவள் முகத்தை இன்னும் நன்றாகப் பார்த்தான் கேதாரி. அவன் உள்ளத்தில் ஆயிரம் இடிகள் இடிப்பது போன்ற அதிர்ச்சி! இவளா அவனுடைய அண்ணியாக வரப் போகிறவள்!

புடவையை வாங்கிக் கொண்டதும் அவள் எழுந்துபோய் விட்டாள். அடுத்து மறுபடியும் மேடைக்கு வந்ததும் வேறு சில வைதிகக் காரியங்கள் தொடர இருந்தன. ஆனால் அது வரைக்கும் கேதாரி அங்கே உட்கார்ந்திருக்கவில்லை. ஏதோ அவசர வேலையை நினைத்துக் கொண்டவன் போல் அங்கிருந்து எழுந்து தனிமையை நாடிச் சென்று விட்டான்.

அப்போது அவனுக்குத் தனிமை தேவையாயிருந்தது. அவன் மனத்தில் வீச ஆரம்பித்திருந்த புயலின் ஓலம் மற்றவர் மனத்திலும் எதிரொலி எழுப்பிவிடக் கூடாதே என்ற அச்சத்தினால் மட்டுமல்ல; அலைஅலையாய் எழுந்த எண்ணங்களை ஒருமுகப்படுத்தி ஒரு முடிவுக்கு வரவும்தான் அவனுக்குத் தனிமை அவசியமாகத் தேவைப்பட்டது. சிறிது நேரத்துக்குள்ளேயே அவன் ஒரு முடிவுக்கு வந்தும் விட்டான். இந்தக் கல்யாணத்தை நடக்கவிடக் கூடாது! அவள் அவனுக்கு அண்ணியாக வரும் கொடிய சோதனையைத் தவிர்த்தேயாக வேண்டும்! அதற்கு ஒரே வழி! ஒரே வழி....ஆம்! அதைத் தவிர வேறு வழியே இல்லை!

அவளுடைய பெயர்கூட அவனுக்குத் தெரியாதுதான்! ஆனால் அவள் அவனுடைய அணைப்பிலே துவண்டு கிடந்தவள் என்பதை அவன் எப்படி மறக்க முடியும்? நான்கு மாதங்களுக்கு முன்பு நாகபுரியில் அவனுடைய நண்பன் ஒருவனின் கல்யாணத்துக்கு அவன் சென்றிருந்த போது அது நிகழ்ந்தது. அன்று அவன் எவ்வளவு பொறுப்பில்லாமல் நடந்து கொண்டு விட்டான்! - அந்தப் பெண் யார், எந்த ஊர், என்ன பெயர் என்பதைக்கூடத் தெரிந்து கொள்ளாமல்.

அந்தக் கல்யாணத்துக்கு அவளும் வந்திருந்தாள். மணப் பெண்ணுக்கு ஏதாவது உறவாக இருக்க வேண்டும். அந்தக் கோஷ்டியில் தான் அவன் அவளைப் பார்த்திருந்தான். அவளுடைய எடுப்பான தோற்றம் அவனுடைய கவனத்தைக் கவர்ந்திருந்தபோதிலும் வேறு விதமான எண்ணம் எதுவும் அவன் மனத்தில் தோன்றியதில்லைதான். ஆனால் சந்தர்ப்பங்கள் சதி செய்துவிட்டன. ஏதோ வேலையாகக் கல்யாணக் கூடத்தின் மாடிப் பகுதிக்குச் சென்றவன் ஒரு பெண்ணின், ''ஆ!'' என்ற அச்சக் குரல் கேட்டுக் குரல் வந்த திசையில் பாய்ந்தான். தட்டிக்கு மறு பக்கம் அவன் கண்ட காட்சி! காலையில் அவன் கவனத்தைக் கவர்ந்த அதே பெண், சட்டென்று எதையோ கண்டு பயந்தவள் போல், தான் கட்டிக் கொள்ள ஆரம்பித்திருந்த புதுப் புடவையை எதிரே வீசியெறிந்துவிட்டு அதையே வெறித்துப் பார்த்தவாறு நின்றிருந்தாள். ''ஏன்? என்ன நடந்தது? ஏன் இப்படி?'' என்று கேட்டவாறு அவளை நெருங்கினான் கேதாரி.

''தேள்! தேள்!'' என்று விசித்தவாறு எதிரே சுட்டிக் காட்டினாள் அவள். எதிரே குவியலாகக் கிடந்த புதுப் புடவையிலிருந்து ஒரு பெரிய கருந் தேள் அப்போதுதான் வெளி வந்து சுவரின் மேல் ஏற ஆரம்பித்தது. ''பயப்பட வேண்டாம். தேள் போய் விட்

அஹிம்ஸா மீன்

பர்மாவில் உள்ள பௌத்தர்களுக்கு 'அஹிம்ஸை'யில் ஈடுபாடு அதிகம். அதனால் மீனைக் கொல்வதற்கு மிகச் சுவையானதொரு வழியைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். வலைக்குக் கீழே ஒரு மரத்துண்டை மிகவும் வெண்மையாக வர்ணம் தீட்டிக் கட்டி விடுகிறார்கள். அது வெளிச்சத்தில் பளபளக்கிறது. மீன்கள் அதைக் கண்டதும் பயந்து போய் உயர



எழும்பித் துள்ளிக் குதிக்கின்றன. தங்களைக் காத்துக் கொள்ளும் முயற்சியில் வலையில் விழுந்து விடுகின்றன. வலைஞர்கள் அவற்றைப் பிடித்து விடுகிறார்கள்.

இப்படிச் செய்வது ஹிம்ஸை ஆகாது என்பது அந்தப் பௌத்தர்களின் நம்பிக்கை. 'மீன்கள் தாமாக வந்து வலையில் விழுகின்றன. அதற்கு நாங்கள் எப்படிப் பிணை?' என்று கூறுகிறார்கள்.

- 'நவநீத'திலிருந்து எடுத்தது

வாழ்வில் இன்பம்

புகழ்பெற்ற ஆங்கில நகைச்சுவை எழுத்தாளர் ஜி.கே. செஸ்டர்டனிடம் ஒருவர் கேட்டார்: "சட்டைப் பைக்குள் கையைப் போட்டுக் கொண்டே ஒருவர் வாழ்நாள் முழுவதும் இன்பமாகக் கழிக்க முடியுமா?"

"ஏன் முடியாது?" செஸ்டர்டன் முறுவலுடன் கேட்டார். தொடர்ந்து, "அது தன் சட்டைப் பையாக இருக்கக் கூடாது. பிறருடைய சட்டைப் பையாக இருக்க வேண்டும்!" என்று முடித்தார்.



..து" என்று மீண்டும் அவளுக்கு ஆறுதல் அளிக்கும் முறையில் அவள் தோளைத் தட்டிக் கொடுத்தவாறு அவளை அணைத்துக் கொண்டான் கேதாரி.

அதே சமயம் தன் நிலையைப் பற்றிய உணர்வு வரப் பெற்ற அவள் அவனுடைய அணைப்பிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டாள். அதன் பிறகு ஒரு கணமும் அங்கே நிற்கத் துணிவு இல்லாமல் அவன் மீண்டும் முகூர்த்த மண்டபத்துக்கு விரைந்து சென்று விட்டான்.

முகூர்த்தம் முடியும் வரைகூட அங்கே தங்கியிருப்பதற்கு அவனுடைய குற்ற உணர்வு இடம் கொடுக்கவில்லை. டாக்ஸியைப் பிடித்து, விமானத்தைப் பிடித்துத் தில்லிக்குப் பறந்தவன், அதோடு அந்த நிகழ்ச்சியை மறந்து விடவும் முனைந்தான்.

இப்போது... அவனுடைய கட்டுப்பாடில்லாத காமுக வெறிக்குத் தண்டனை போல் அவள் அவனுடைய அண்ணன் மனைவியாக... இந்தப் பயங்கரம் நிகழவே கூடாது ! இதைத் தவிர்த்தே ஆக வேண்டும் !

இந்த வேகமும் வெறியும் எப்படியெல்லாம் அவனை இயங்க வைத்தன என்று அவனுக்கே நினைவில்லை. எந்த வகையிலோ அவளைத் தனிமையில் சந்திக்கும் வாய்ப்பைத் தேடிக் கொண்டு அவளைத் தன் திட்டத்துக்கு இணங்க வைத்துவிட்டான். மனத்தில் பாவக் கறையுடன் கட்டாயக் கல்யாணம் செய்து கொண்டு அங்கத்தால் ஊனமான ஒருவரை ஏமாற்றும் துரோகத்தைவிட உயிரையே மாய்த்துக் கொள்வதுதான் சிறந்தது என்ற முடிவுக்கு வந்திருந்த ராதா, கேதாரியே வலுவில் வந்து அவளை மணம் புரிந்து கொள்ளத் தயாராக இருப்பதாகக் கூறிய போது மறு பேச்சில்லாமல் அதற்கு ஒப்புக் கொண்டு விட்டாள். இரவோடு இரவாக அங்கிருந்து புறப்பட்டுச் சென்ற அவர்கள் நேரே சுவாமி மலைக்குச் சென்று தெய்வ சாட்சியாகத் திருமணம் செய்து கொண்ட பின்னரே ஊருக்குத் திரும்பினர். அங்கு அவர்கள் எதிர்த்துச் சமாளிக்க வேண்டியிருந்த சூறாவளி! தற்காப்புக்காக வாயைத் திறந்து எதுவும் சொல்ல முடியாமல் வசை மாரியைத் தாங்கிக் கொள்ள வேண்டியிருந்த கொடுமை.....

பலபலவென்று விடியும் நேரமாகி விட்டது. வண்டி ஒரு பெரிய ஸ்டேஷனில் நின்றிருந்தது. சிந்தனைச் சுழலிலிருந்து விடுபட்டு வெளியே எட்டிப் பார்த்தான் கேதாரி. ஆக்ராதான் ! மூடு பனி நிறைந்த அந்த மங்கலான வெளிச்சத்தில் சிற்றுண்டிகளும் தேநீரும் விற்கும் ஆட்கள் தங்கள் விற்பனைப் பண்டங்களைப் பற்றி உரக்க அறிவித்தவாறு குறுக்கும் நெடுக்கும் விரைந்து செல்ல ஆரம்பித்தனர். அவர்கள் போட்ட சத்தத்தில் ராதா கண் விழித்து எழுந்து உட்கார்ந்தாள்.

"டெல்லி வந்துவிட்டதா ?"

"இல்லை. இது ஆக்ராதான். அடுத்து மதுரா. அப்புறம் டெல்லி. இன்னும் மூன்று மணி நேரத்தில் டெல்லிக்குப் போய்ச் சேர்ந்து விடுவோம்!"

"அப்படியானால் இப்போதே படுக்கையெல்லாம் சுருட்டி வைத்துவிட்டுத் தயாராகிவிட வேண்டியதுதான்!" என்று கூறிய ராதா, படுக்கையைச் சுற்றி வைத்துவிட்டுக் குளியலறைக்குள் சென்றாள். அவள் திரும்பி வருவதற்குள் ஓர் ஆளிடம் சொல்லிச் சிற்றுண்டியும் காப்பியும் கொண்டு வர ஏற்பாடு செய்தான் கேதாரி. இருவரும் அவற்றை அருந்தி முடிப்பதற்கும் வண்டி ஆக்ரா ஸ்டேஷனிலிருந்து புறப்படுவதற்கும் சரியாக இருந்தது.

மதுராவைக் கடக்கும் வரையில் இருவரும் ஒன்றும் பேசவில்லை. தத்தம் எண்ணங்களில் மூழ்கியவாறு பெட்டி படுக்கைகளை ஒழுங்கு செய்வதில் ஈடுபட்டிருந்தனர். வண்டி மதுரா ஸ்டேஷனில் சில நிமிஷங்கள் நின்றுவிட்டுப் புறப்பட்டதும் கேதாரியின் எதிரே உட்கார்ந்த ராதா, கனிவு நிறைந்த விழிகளால் அவனையே பார்த்தவாறு சற்று நேரம் இருந்தாள். சட்டென்று அவள் எழுந்து அவனருகே வந்து அமர்ந்து அவனுடைய கன்னத்தோடு தன் இதழ்களை இழையவிட்டவாறு கூறினாள்: "நான் எவ்வளவு பாக்கியசாலி! என்னைக் கரையேற்றுவதற்காக எல்லோரிடமும் துரோகி என்ற பழிச்சொல்லை ஏற்றுக் கொண்டீர்களே!"

கேதாரி பெருமூச்செறிந்தான். "உண்மையிலேயே நான் எவ்வளவு பெரிய துரோகி என்று எனக்குத்தான் தெரியும் ராதா !" என்றான் கம்மிய குரலில்.

அந்தப் பெருமூச்சு, அந்த வார்த்தைகள்— இவற்றின் அர்த்தத்தை ராதா அப்போது புரிந்து கொள்ளவில்லை. புதுதில்லி ஸ்டேஷனில் இறங்கியபிறகுதான் அவளுக்குப் புரிந்தது.

கையில் ஒரு வயதுக் குழந்தையுடன் அவர்களை நோக்கி வந்த ஒரு வடநாட்டு யுவதி, முகத்தில் திகைப்பும் கலவரமும் தோன்ற அவர்கள் அருகே வந்து நின்றபோது...

கேதாரி அவர்களை ஒருவருக்கொருவர் அறிமுகம் செய்து வைத்தான். "புஷ்பா! இது என் புது மனைவி ராதா. ராதா, இவள் புஷ்பா. என் முதல் மனைவி! ஆம் ராதா, நான் முன்பே மணமானவன் !"

ஒன்று முடிச்சுக்கள்

கே. பாலசந்தர்



எண்ணங்கள் களங்கப்படுகிற போது இதயத்துக்குப் பேய் பிடித்துவிடுகிறது போலும்! இல்லையென்றால் இப்படித் துடிப்பானேன்?

இடக் கரத்தால் மார்பைப் பிசைந்த வண்ணம் வாசற்படியை நோக்கினான் மோகனசுந்தரம். பைரவிதான் வருகிறாளா? இதற்குள் எப்படி வரமுடியும்? அப்படி வந்து விட்டால் மாடியறைக்குள் வீசி எறிந்த மோதிரம் செய்யப் போகிற துப்பறிவு வேலை தடைப்பட்டு விடுமே! அந்த மோதிரம் அவளுடைய கண்ணில் பட்டுவிடுமே! அவ்வாறு பட்டுவிட்டால் என்ன நினைப்பாள்? எப்படியெல்லாம் கேள்வி கேட்பாள்! என்ன பதிலைச் சொல்லித் தப்பிப்பது? இதைவிடப் பெரிய தர்மசங்கடமான நிலை என்ன இருக்க முடியும்?

அப்பாடா! —

பெரிதான நெடிய மூச்சொன்று பிரிந்தது: நல்ல வேளை....

வேலைக்காரி அஞ்சலை சாப்பாட்டுக் 'காரியரு'டன் உள்ளே நுழைந்து கொண்டிருந்தாள். மோகனசுந்தரத்துக்கே என்னமோபோல் ஆய்விட்டது! இந்தச் சில விநாடிகளுள் என்னவெல்லாம் நினைத்து விட்டோம்! ஒரு கணம் வேலைக்காரி வெளியில் சென்றிருக்கிறாள். அவள் ஏன் திரும்பக் கூடாது என்பது பற்றிச் சிந்திக்காமல் போய் விட்டோமே! எல்லாம் மாசு தழுவிய மனம்தான் காரணமோ?

சாப்பாட்டு 'காரியரை'க் கொண்டு வந்து மேடையின் மீது வைத்தாள் அஞ்சலை. அவளுடைய வாய் நிறைய வெற்றிலை புகையிலை. அந்தக் குதப்பலைத் துப்பி விட்டு வாயைக் கழுவிக் கொண்டு வரப் புறக்கடைப் பக்கமாகச் சென்றாள்.

அவன் செய்யப் போகிற துப்பறியும் வேலைக்குச் சூத்ரதாரியாக அஞ்சலையைத் தானே மனத்தில் கொண்டிருக்கிறான். ஆனால் அவளிடம் எப்படிக் கேட்பது? எவ்வாறு பேச்சைத் தொடங்குவது என்பது பற்றிய தீவிர நினைவுடன் சக்கர வண்டியிலிருந்த வண்ணம் நோக்கிக் கொண்டிருந்தான் மோகனசுந்தரம்.

ஏதோ ஒரு பயங்கரத் தொழிலைச் செய்வது போன்ற துடிப்பு; பரபரப்பு! கொலைகாரர்களையும் குற்றவாளிகளையுமே பிடித்துப் பெருமிதப்பட்ட அவன் இப்போதும் அப்படி ஒரு குற்றவாளியைப் பிடிக்கப் போகிறோம் என்கிற நினைவுக்கு உட்படாமல், கொலை செய்யப் போகிறவனைப் போல் மருளுவானேன்?

யாரை ஏமாற்றினாலும் மனத்தை ஏமாற்ற முடியாதே? அந்த மனத்துக்கே இன்னும் யார் குற்றவாளி என்பது புரியவில்லையே! புரிந்தால்தானே பெருமிதத்துடன் அணுகுவதற்கு? அந்த மனம் மருண்டு தவிப்பதில் ஆச்சரியப்பட என்ன இருக்கிறது?

வாயைத் துப்புரவாகக் கழுவிக் கொண்டு கொஞ்சம் காலார அமர்ந்தாள் அஞ்சலை. பசி எடுத்தால் அவள் எசமான் கூப்பிடுவாரல்லவா?

"அஞ்சலை...."

மோகனசுந்தரத்தின் அழைப்புக் குரல் கேட்டது. அஞ்சலை அலறியடித்துக் கொண்டு ஓடி வந்தாள். "என்னங்க எசமான்! சாப்பாடு பரிமாறட்டுங்களா?"

அஞ்சலையைக் கூர்ந்து கவனித்த மோகனசுந்தரம் வெறுமை நிறைந்த ஒரு சிரிப்புடன், "பசிக்கலே; அப்புறம் சாப்பிடுகிறேன். உன்னைப் பத்தி அம்மா சொன்னாள்...." என்று இழுத்தான்.

"என்னங்க சொன்னாங்க?" — அரண்டு போனாள் அஞ்சலை.

மீண்டும் அதே வெறுமைச் சிரிப்புடன், "ஒண்ணுமில்லே; சம்பளம் கொஞ்சம் ஜாஸ்தி கேட்டியாமே!" என்றான்.

"ஆமாங்க எசமான்! கட்டுப்படியாகலே; விலைவாசி யெல்லாம் ஏறிப் போச்சு; மேலும் முப்போது நாழியும் இங்கேயே இருக்கிறேன். வேறு வேலை பார்த்து நாலு காசு சம்பாதிக்கிறதுக்கும் முடியலே. காலையிலே வந்தா ராத்திரிக்கு. அதனாலத்தான்....!"

இதுதான் சமயம் என்று அஞ்சலை முழங்கித் தள்ளினாள். கொஞ்ச நேரத்துக்கு முன் வாயிலிருந்த புகையிலைக் குதப்பலை உமிழ்ந்து விட்டு வந்தது எவ்

வளவோ நல்லதாகத் தெரிந்தது. இல்லையென்றால் இவ்வளவு தெளிவாகச் சொற்களை வேகமாகச் சொல்ல முடியாமல் தவித்துப் போயிருப்பாள்; தவித்தும் இருக்கிறாள்! பல முறைகள் இப்படிப் பேச முடியாமல் போனதுண்டு.

''இதை ஏன் நீ முன்கூட்டியே என்னிடம் சொல்லியிருக்கக் கூடாது?''

''ஒரு மாசத்துக்கு முன்னேயே அம்மாகிட்டே நான் இது பற்றிச் சொல்லியிருக்கேனுங்க, எசமான்!''

எங்கேனும் ஒரு பிடி கிடைக்காதா?

மோகனசுந்தரம் இதை எதிர்பார்த்தே பேச்சில் புழுவைச் செருகித் தூண்டில் போட்டு வந்தான். மீன் வசமாய்ப் பற்றிக் கொண்டது. ''ஆமாம்; இப்பல்லாம் பைரவிக்கு ஞாபகமறதி அதிகமாகி விட்டது. அடிக்கடி மறந்து விடுகிறாள். ரெண்டு நாளைக்கு முன்னாலே கூட மோதிரத்தைக் கழற்றி மேசையின் மேலேயே வைச்சாளாம்; அதைக் காணலியாம்! எப்படிக் காணாமப் போச்சுன்னு கேட்டா, மறந்து எங்கேயோ வைச்சிருக்கேன்னு சொல்றா... அவளுக்கும் வேலை அதிகம். ஞாபக மறதி ஏற்படுகிறது. ஆமாம்... நீ பார்த்தியா?''

சுற்றி வளைத்துத் தன் மடியில் வந்து விழ வேண்டுமா? — அஞ்சலை அதிர்ச்சி கண்டாள்!

''ஐயோ, எசமான்! எத்தனை காலமாக இந்த வீட்டிலே வேலை செஞ்சிக்கிட்டு வர்றேன். ஒரு தப்புத் தண்டா செஞ்சிருப்பேனா? அதிகமாப் பணம் கேட்டிருப்பேனா! இப்பகூட எம் மவ... ஊரிலேருந்து வயிறும் புள்ளையுமா வந்திருக்கு. நூறு ரூவா பணம் தேவை. கைமாத்தா நூறு ரூபாய் கேட்கலாமா, வேண்டாமான்னு நினைச்சுக்கிட்டே இருக்கேனே தவிர இன்ன வரை கேட்டவ இல்லை எசமான்.''

சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு புத்தி சாதுர்யத்துடன் கேட்க வேண்டியதைக் கேட்டு விட்டாள் அஞ்சலை!

''அஞ்சலை! உன்னைப் பத்தி எனக்குத் தெரியாதா? பைரவிதான் ஞாபகப் பிசகா எங்கேயாவது மாடியிலே தொலைச்சுட்டு இருப்பா! ஒருவேளை எங்கேயாவது உன் கண்ணிலே தற்செயலாகப் பட்டுச்சான்னுதான் கேட்டேன்!'' என்றான் மோகனசுந்தரம்.

''அய்யோ! இல்லீங்களே எசமான்! கண்ணிலே பட்டா விட்டு வைப்பேனா?''

மோகனசுந்தரம் சட்டென்று திரும்பிப் பார்த்தான்.

''....உடனே எடுத்துக்கிட்டு வந்து அம்மா கிட்டயோ, உங்க கிட்டயோ கொடுத்திருக்க மாட்டேனா?''

''கல்யாணத்தும்போது பைரவியோட தகப்பனார் எனக்குப் போட்ட மோதிரம்! அதுதான் மனசுக்குக் கஷ்டமா யிருக்கு!''

''இங்கேதாங்க இருக்கும்! எங்கயேும் போயிடாதுங்க! நீங்க முதல்லே சாப்பிடுங்க!''

''அஞ்சலை! சாப்பாடு இருக்கட்டும்; நீ ஒண்ணு செய்யேன்!''

''சொல்லுங்க எசமான்!''

''மாடியிலே எங்காவது மூலை முடுக்கிலே விழுந்து கிடக்கலாம்! முறத்தை எடுத்துக்கிட்டுப் போயி மாடி முழுதும் குப்பை கூளங்களைக் கூட்டிப் பாரு. காகிதத்தோட காகிதமா எங்காவது கிடக்குதான்னு பாரேன்! ஒரு பவுன் மோதிரம்...இருநூறு ரூபா இருக்கும்; ரூபாய் கூடப் பெரிசில்லே! ...அது...கல்யாண மோதிரம்...''

அஞ்சலை நகர்ந்தாள்.

சமையல் அறையிலிருந்த முறத்தை எடுத்துக் கொண்டு மாடிக்குச் சென்றாள். அப்போது ''அஞ்சலை!'' என்ற குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தாள். மோகனசுந்தரம்தான் அழைத்தான்.

''அஞ்சலை! அடுத்த மாசத்திலிருந்து உனக்கு அஞ்சு ரூபாய் சம்பளம் கூட்டியிருக்கேன். சந்தோஷந்தானே!''

காவி கண்ட பற்களைக் காட்டித் தலையசைத்த வண்ணம் சின்னப் பெண் போல் மாடி ஏறி ஓடினாள் அஞ்சலை.


ஏதோ பெரிய ராஜதந்திரத்தைச் சாதித்து விட்டது போலத் தலையசைத்துக் கொண்டான் மோகனசுந்தரம். உண்மையிலும் வெகு நாசூக்காக அவன் நடந்து கொண்டான்.

மனைவி பைரவி பற்றி, கேவலம் வேலைக்காரி நெஞ்சில் கரும் புள்ளி விழக் கூடாதல்லவா? தன் நெஞ்சில் விழுந்த புள்ளியே கரும் புள்ளியா, செம்புள்ளியா என்பது புரியவில்லையே! தன் நெஞ்சு அறிவது பொய்யற்க; பொய்த்த பின் தன் நெஞ்சே தன்னைச் சுட்டுவிட்டால்?

—வள்ளுவன் சொற்கள் நவமணிக் கற்களாயிற்றே!

மோகனசுந்தரம் உணர்ந்தே தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு வந்தான். இல்லையென்றால் என்றோ, எப்போதோ உணர்ச்சி வயப்பட்டிருப்பானே!

மாடிக்குச் சென்ற அஞ்சலை முதலில் ஐந்து ரூபாய் சம்பள உயர்வை எண்ணி மகிழ்ந்து கொண்டவளாய் ஒரு பக்கமாக அமர்ந்தாள். அவள் மாடிக்கு



அடிக்கடி வருவது கிடை யாது. வர வேண் டிய வேலையும் இல்லை. அவளுடைய சேவகமெல்லாம் அநேக மாகக் கீழ்ப் பகுதியில்தான். இப்படி மோகனசுந்தரம் எப்போதாவது அனுப் பினால் சென்று வருவாள். வாரத்துக்கு ஒரு முறை மாடியில் தரையைத் துடைப் பாள்! தரையைத் துடைத்துக்கூட ஒரு வாரம் ஆயிற்றே!

ஐந்து ரூபாய் 'இன்க்ரீமெண்ட்' மகிழ்ச்சியில் பங்கு கொண்ட புத்துணர் வுடன், இடுப்பில் செருகி யிருந்த வெற்றிலைப் பையை எடுத்தாள். ஓர் ஆவர்த்தனம் வெற்றிலை யைப் போட்டுப் புகையிலையைக் குதப் பினால் என்னவென்று தோன்றியது. உணர்ச்சி பூர்வமான பழக்கங்களுக்கு அடிமைப்பட்ட யாருமே ஒரு புதிய தெம்பு ஏற்படுகிறபோது, இப்படியான பழக்கங்களுக்குஅடிமையாவதுஇயற்கை!

அஞ்சலை வெற்றிலையைக் குதப்பிக் கொண்டு துடைப்பத்தை எடுத்துக்

கொண்டு பைரவியின் அறையைக் கூட்டத் தொடங்கினுள். சின்ன அறைதான்; எனவே விரைவில் கூட்டி முடித்துவிட்டாள். குப்பை கூளங்களை முறத்தில் அள்ளி விட்டாள். அங்கே மோதிரத்தைக் காணவில்லை. மேலிருந்தவாறே, ''எசமான்! அம்மா அறையில் மோதிரமில்லிங்க!'' என்று மாடியிலிருந்தே கூச்சலிட்டாள்!

கூச்சலைக் கேட்டு அண்ணாந்து கவனித்த மோகனசுந்தரம், ''அடுத்த அறையும் கூட்டிப் பாரு, என்ன அவசரம்?'' என்று எரிச்சலுடன் கூவினுன்.

''இதோ பார்க்கிறேன் எசமான்!'' என்றவளாய் அடுத்த அறைக்குள் சென்றுள் அஞ்சலை!

மோகனசுந்தரத்தின் நெஞ்சம் அலை பாய்ந்தது! அதற்கு அறிகுறியாகச் சக்கர நாற்காலியின் சக்கரங்கள் முன்னும் பின்னும் நகர்ந்து கொண்டு அவனுடைய மனநிலையை அப்பட்டமாக அறிவித்துக் கொண்டிருந்தன.

''நான் எழுதும் பரீட்சையில் தோல்வியடைய வேண்டும்...! நான் பாஸ் பண்ணவே கூடாது....'' அவன் இதயம் ஓலமிட்டது!

மாடியில் அடுத்த அறைக்குள் நுழைந்து தரையைக் கூட்டிக்கொண்டிருந்த அஞ்சலையின் கண்களில் பளிச்சென்று ஓர் ஒளி தென்பட்டது... ஆம். அதுவேதான்! ஒரு பவுன் மோதிரம்! ஓர் ஓரமாகக் கேட்பாரற்றுக் கிடந்தது. அந்த ஓரத்தில்தான் 'டிரஸ்ஸிங் மேசை' இருந்தது. தரையோடு தரையாக உட்கார்ந்து கீழே நோக்கினுல்தான் மேசையின் கீழ் இருக்கும் அந்த மோதிரம் கண்களுக்குப் படும். அதனுல்தான் அது எசமானியின் கண்களில் படவில்லை. மோதிரத்தைக் கையில் எடுத்தவள், ''எசமான்...!'' என்று ஓலமிட நினைத்தவள் அப்படியே தனது குரல்வளையை நெரித்துக் கொண்டவள் போல் வார்த்தையைக் கண்டத்திலேயே அடக்கிக் கொண்டாள்! கையில் எடுத்த மோதிரத்தையே வெறித்துப் பார்த்தாள்!

பெண்ணும் பவுனும் மனசை எப்படி ஆட்டிப் படைக்கின்றன! அதிலும் ஒரு பெண்ணின் மனசைப் பவுன் எப்படியெல்லாம் மருள வைக்கிறது!

வயிறும் பிள்ளையுமாக வீட்டுக்கு வந்திருக்கும் தனது மகளின் நினைவு கொஞ்ச நாட்களில் ஏற்படப் போகும் பிரசவம்... அதையொட்டி வரவிருக்கும் செலவினங்கள், 'பெத்துப் பிழைத்தால்' தன் மகளுக்குச் செய்து அனுப்ப வேண்டிய மரியாதைகள்...

எல்லாம் அவளது மனத் திரையில் வேகமாக உருண்டோடின...

பாவம், எல்லாமே இல்லாமைதான் காரணம்!

மோகனசுந்தரம் அண்ணாந்து பார்த்தான். கையில் முறம் சகிதமாக மாடிப் படியில் அஞ்சலை இறங்கி வந்துகொண்டிருந்தாள்.

''என்ன அஞ்சலை! மோதிரம் கிடைத்ததா?'' என்று மிகுந்த பரபரப்புடன் கேட்டான்.

அஞ்சலை நிதானமாகச் சொன்னுள்:

''இல்லீங்க எசமான்!''

''இல்லியா? எல்லா இடத்தையும் கூட்டிப் பார்த்தாயா?''

''பார்த்துட்டேன். இல்லீங்க!'' என்று அழாக் குறையாகச் சொன்னுள் அஞ்சலை.

''உண்மையைச் சொல்லு! உன் கண்ணிலே அந்த மோதிரம் படவேயில்லையா?'' — போலீஸ் அதிகாரிக்கே உரித்தான மிடுக்குடன் அவளை மிரட்டினுன் மோகனசுந்தரம்.

''கூட்டியள்ளின குப்பை கூளமெல்லாம் மொறத்துலே இருக்குது. நல்லாப் பார்த்துக்குங்க... நீங்களே பார்த்துக்குங்க!'' என்று முறத்தை அருகே எடுத்து நீட்டினுள் அஞ்சலை. இங்குதான் அவனுடைய திட்டத்தின் வெற்றியே இருந்தது!

முறத்தைப் பார்க்க விரும்பாதவன் போல் கண்களை இறுக மூடிக்கொண்டான்.... சிறிது நேரம் மௌனம்.

முறத்தை டீப்பாய்மீது வைத்து விட்டுத் தடுமாற்றத்துடன் அவனது பதிலுக்காகக் காத்திருந்தாள் அஞ்சலை.

''சரி! நீ வீட்டுக்குப் போகலாம்.'' கண்களை மூடியபடியே சொன்னுன் மோகனசுந்தரம்.

இவ்வளவு சீக்கிரமாக இப்படி ஒரு விடுதலையா? அஞ்சலை குழம்பிவிட்டாள். முறத்தை எடுக்க நினைத்தாள்.

''அது இங்கேயே இருக்கட்டும்... நீ போகலாம்.''

''எசமான்! சாப்பாடு!...''

''சாப்பாடும் வேண்டாம் ஒரு மண்ணும் வேண்டாம்.... நீ போ....''

கூச்சலிட்டான் மோகனசுந்தரம். நீண்டு வரும் பெருமூச்சை வெளிக் காட்டாமல் அதையும் தொண்டையினுள்ளேயே அடக்கிக் கொண்ட அஞ்சலை மெல்ல அங்கிருந்து நகர்ந்தாள். இன்னும் இரண்டு மூன்று காலடிகள் தான். வாசலைக் கடந்து விடலாம்...

''அஞ்சலை!''

மருண்டு போய் நின்று திரும்பினுள். மோகனசுந்தரம் கூர்ந்து அவளைக் கவனித்தான்.



குடும்பங்களின் பேராதரவு பெற்றது
லிப்டன் ஹிமாலயன் கோல்டன் டஸ்ட் டீ
நல்லதோர் தேயிலையிடம் நீங்கள் கோரும் அனைத்தையும் அளிக்கிறது
LIPTON'S
GOLDEN DUST TEA
பாக்கிங் செய்த தேயிலை மட்டுமே
புதிதாகவும், மணத்துடனும் திகழ்கிறது
LHGC-12-72 TAM

''மோதிரத்தை உண்மையா நீ எடுக்கலையா?''

''இல்லீங்க!''

''வாயிலே குதப்பறியே புகையிலே! அதையும் இந்த முறத்திலே துப்பேன், பார்க்கலாம்!''

''எசமான்!''

''நான் யார் தெரியுமா? போலீஸ்காரராக இருந்தவன்.''

அஞ்சலை நடுங்கி விட்டாள்.

''மன்னிச்சுடுங்க எசமான்! தப்புப் பண்ணிட்டேன்....''

வாயில் இருக்கும் புகையிலையைக் கையில் துப்பிக் கொண்டாள்.

''இம்மா நாளு இல்லாத திருட்டுப் புத்தி இன்னிக்கு வந்துடுச்சு அந்தப் பாவிக்கு... இதோ இருக்கு மோதிரம்!'' இரண்டு அடி முன்னால் நகர்ந்தாள்.

''பரவாயில்லே! அதை நீயே வைத்துக் கொள்! மோதிரத்தைத்தான் சொல்றேன்!''

''எசமான்!''

''ஆமாம்! அது எச்சில் பட்டுப் போச்சு! இனிமே அதை நான் தொட மாட்டேன்!''

இடிவிழுந்தவள் போல் நின்றாள் அஞ்சலை. மோகனசுந்தரம் தொடர்ந்தான்.

''அம்மாவைப் பார்த்து இது விஷயமா நீ பேச வேண்டிய தேவையும் இல்லே! அவளைப் பொறுத்தவரைக்கும் மோதிரம் தொலைந்து போனதாகவே இருக்கட்டும்! அவளுக்குத் தெரிஞ்சா உன்னைப் பற்றிப் போலீஸிலே ரிப்போர்ட் கொடுத்தாலும் கொடுத்து விடுவாள்! அதனாலே மூச்சு விடக் கூடாது!''

நடந்துபோன இந்தத் துப்பறியும் சம்பவம் தனது மனைவியின் காதுகளுக்கு எட்டிவிடக் கூடாது என்கின்ற கவலையில் எத்தனை அழகாக வார்த்தைகளை ஜோடித்து அவளைப் பயமுறுத்தி விட்டான் மோகன சுந்தரம்.

''எசமான்!'' என்ற வார்த்தையைத் தவிர அஞ்சலையினால் வேறு எதுவும் சொல்ல முடியவில்லை! கண்களில் நீர் பெருக்கெடுத்தோடியது.

''ஏன் இன்னமும் நின்னுக்கிட்டிருக்கிறே! நீ போகலாம்!''

அஞ்சலை வீட்டை ஒருமுறை சுற்றிப் பார்த்துக் கொண்டாள்!

தான் செய்த தவற்றுக்குப் பாவ மன்னிப்பு! இனி இந்த எசமானுக்கு நாம் லாயக்கில்லை என்று சொல்வது போல் இருந்தது அந்தப் பார்வை!

தலையைக் குனிந்தபடியே நடந்தாள்.

திருமணத்தின்போது மனைவியால் போடப்பெற்ற மோதிரம் அது. அதையே மோகனசுந்தரம் இழக்கச் சம்மதித்து விட்டானே!

எல்லாவற்றுக்கும் மூல காரணம்...

அந்தக் குப்பை முறத்தில் ஏதோ ஒன்று அவனுடைய கண்களை உறுத்தி விட்டது. அதை அஞ்சலை எதிரே காட்டிக் கொள்ளாமல் சகித்துக் கொண்டான். இப்போது முறத்தைக் குனிந்து எடுத்தான். கிளறினான். அவன் கண்களை உறுத்திய அந்தப் பொருள் —

முக்கால் பாகம் எரிந்து முடிந்த சிகரெட் துண்டு!

புகைத்து முடித்ததும் தரையில் வைத்துத் திருகி எறிந்தது போலக் காணப்பட்ட சிகரெட்டுத் துண்டு...

நெஞ்சை யாரோ கோடரி கொண்டு பிளக்கிற மாதிரி ஓர் உணர்வு கொந்தளிக்கிறது...

சிகரெட்டுத் துண்டைக் கையில் எடுத்து விறைத்து விறைத்து நோக்குகிறான் மோகனசுந்தரம்!

காலையில் 'ஆஷ்டிரே' மாடியிலிருந்தது! இப்பொழுது ஒரு சிகரெட்டுத் துண்டு மாடியில் கிடக்கிறது.

அது அவனே பற்றவைத்த சிகரெட்டுத் துண்டாக இருக்க முடியுமா?

போகும்பொழுது வெற்று முறத்தைத்தானே மாடிக்கு எடுத்துச் சென்றாள் அஞ்சலை!

மேஜை ஆஷ்டிரேயிலிருந்து தரையில் விழுந்து அது மாடிக்குத் தாவிவிட்டது என்று வைத்துக் கொண்டாலும்...

அந்தச் சிகரெட்டு அவன் வழக்கமாகப் பிடிக்கிற 'பிராண்டு'ம் அல்ல! 'கார்க்' முனையோடு காணப்பட்ட ஏதோ ஒரு வெளிநாட்டுப் பிராண்டு! (தொடரும்)



''பக்கத்து ஆபீஸ் பத்மாவுடன் இரண்டு வார்த்தை பேசிவிட்டு, அப்படியே எதிர் ஆபீஸ் ஹேமாவுடன் நாலு வார்த்தை பேசிவிட்டு, முடிந்தால் மாடி ஆபீஸ் மாலாவுடன் அரட்டை யடிக்கலாமென்றால் எங்கே முடிகிறது?''

''ஏண்டியம்மா! ஆபீசில் வேலை அதிகமோ?''

''உம்...அரட்டை அடிக்க, அவர்களே என் இடத்துக்குத் தேடி வந்து விடுகிறார்கள்!''

"குட்மார்னிங் சார்!" என்ற குரல் கேட்டுத் தலை நிமிர்ந்தேன். எனது மேசையின் விளிம்பை உராய்ந்தவாறு ஒரு பெண் நின்றிருந்தாள். கறுப்புமில்லை, வெளுப்புமில்லை என்று சொல்லத்தக்க கோதுமை நிறம். நடுத்தர உயரம். மிதமான பருமன். அந்த உயரத்துக்கும் பருமனுக்கும் ஒத்துப் போகிறாற்போல் கச்சிதமான உடல் அமைப்பு. பெரிய நெற்றி. அகன்ற கண்கள். அவற்றிலிருந்து சிந்திய வெளிச்சம் கண்களைப் பறிப்பதாக இருந்தது. ஆணினுடையவை போன்ற அடர்த்தியான புருவங்கள். அவ்வளவு பெரிய கண்களுக்குப் புருவங்கள் அடர்த்தியாக இராவிட்டால் ஆந்தைக் கண்கள் மாதிரி இருக்கும் என்று தோன்றியது. கழுத்தில் ஒரு மெல்லிய சங்கிலி. திருமணமானவளா இல்லையா என்று ஊகிக்க முடியவில்லை. தாலியைத்தான் இப்போதெல்லாம் சங்கிலியில் கோத்துத் தொங்கவிட்டுக் கொள்கிறார்களே. யார் மஞ்சள் கயிற்றைக் கட்டிக் கொள்கிறார்கள் ? வலக்கையில் கடிகாரம்; சதுரமானது. இடக் கையில் பட்டையாக ஒரே ஒரு தங்க வளையல். வாயில் புடவை உடுத்தியிருந்தாள். ஆரஞ்சு நிறப் பின்னணியில் கறுப்புப் பூக்கள் போட்ட அந்தப் புடவைக்கு ஏற்ப அவள் ஆரஞ்சு நிறத்தில் இரவிக்கை அணிந்திருந்தாள். இதனால் அவள் அடக்கமாகத் தெரிந்தாள். வேறு நிறத்தில் இரவிக்கை அணிந்திருந்தால் அவள் சற்றே அடக்கம் குறைந்தவளாகத் தெரிந்திருப்பாள் என்று பெண்களை அவர்கள் அறியாத முறையில் கோணலாகப் பார்க்கும் வழக்கமுள்ள நான் எனக்குள் நினைத்துக் கொண்டேன். அழகை வெளிப்படுத்தும் முறையில் சில பெண்கள் வேண்டுமென்றே அவ்வாறு உடையணிவதும் எனக்குப் புரிவதுண்டு. ஆனால் இவள் அந்த ரகம் இல்லை என்று தோன்றிற்று. எடுப்பான மூக்கு. மூக்கின் முனை கூராக இல்லாமல் 'மொண்ணை'யாக இருந்தது. மூக்குக் கண்ணாடி அணிந்தால் இவள் முகத்தின் எடுப்பும் அழகும் இன்னும் அதிகமாகும் என்றும் தோன்றியது. தடித்த உதடுகள் பெண்மைக்கு உரியன அல்லவாயினும், அவற்றின் முழுமை அவள் முகத்துக்கு ஏற்றவையாகத்தான் இருந்தன. கன்னத்தில் தென்பட்ட பருக்கள் காய்ந்த சிறு புள்ளிகளால் எவ்வகையிலும் அவளது முகக் கவர்ச்சி குறைந்ததாகத் தெரியவில்லை.

இவ்வளவு கணிப்பும் எனக்கே புரிய — அதாவது நாற்பத்தைந்துக்கு மேற்பட்டவர்களுக்கே உரிய — சுறுசுறுப்புடன் மிகச் சில கணங்களில் நடந்து முடிந்தது.

''குட்மார்னிங்!'' என்ற நான், ''உட்காருங்கள்'' என்றேன்.

அவள் நாற்காலியை இழுத்து ஓசைப்படுத்தாமல் அதைச் சற்றே தூக்கி நகர்த்திவிட்டு உட்கார்ந்த அமரிக்கையை மனசுக்குள் பாராட்டினேன்.



''நான்தான் உங்கள் ஸ்டெனோ.....''

''ஐ ஸீ..... என்ன பேரம்மா?''

''சுமதி......''

நான், 'மிஸ் ஆர் மிஸஸ்?' என்று கேட்க நினைத்து, 'ஒரு நாள் தானாய்த் தெரிகிறது. கேட்பானேன்?' என்று அடக்கிக் கொண்டதைப் புரிந்து கொண்டவள் போன்று, ''மிஸ் சுமதி....'' என்று தானே மறுபடியும் கூறினாள். எனது மனத்துள் ஊடுருவியதால் அவள் அப்படிச் சொன்னாளா, இன்றேல் அது தற்செயலாக நேர்ந்ததா என்பதை என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை. அவள் அவ்வாறு சொன்னபோது அவள் முகத்தில் அசட்டுச் சிரிப்போ அல்லது வேறு எவ்வகையான மாறுதலோ ஏற்படவில்லை என்பதில் அவளது இயல்பு முழுதுமே வெளிப்பட்டதாக அவருக்குத் தோன்றியது.



''உங்களுடைய இன்னோர் அதிகாரி யார் அம்மா ?'' என்று கேட்டேன்.

''டிரெக்டர் அவ் பெர்சனெல்...'' — 'பெர்ஸான்ல்' என்று பலரைப் போல் தப்பாக உச்சரிக்காமல் அவள் சரியாக அந்தச் சொல்லை உச்சரித்தது என் கவனத்துக்குத் தப்பவில்லை.

''அவர் என்ன அடிக்கடி உங்களைக் கூப்பிடுவாரா?''

''அப்படியொன்றுமில்லை. சில நாட்களில் அடிக்கடி கூப்பிடுவார். சில நாட்களில் அவர் கூப்பிடவே மாட்டார்....''

'' ஐ ஸீ.....''

''இதற்கு முன்னால் நீங்கள் இருந்த இடத்தில் இருந்தவரும் அப்படித்தான். ஆனால், இரண்டு அதிகாரிகளுக்கு ஸ்டெனோவாக இருப்பதில் ஒரு சங்கடம் என்னவென்றால், இரண்டு பேருமே சில நாட்களிலே அடிக்கடி கூப்பிடுவார்கள். இரண்டு பேருடைய வேலையுமே அவசரமானதாக இருக்கும். அந்த மாதிரி நேரங்களில் நான் பம்பரமாய்ச் சுற்ற வேண்டியிருக்கும்.....''

''அப்படியா? அவர் நிறைய வேலை கொடுக்கிற நாட்களில் எனக்குச் சொல்லி விட்டீர்களானால் ? நான் உங்களை அந்த நாட்களில் அதிகம் தொந்தரவு பண்ணாமல் 'அட்ஜெஸ்ட்' செய்து கொள்கிறேன்...'' என்றேன் — என்ன பேசினேன் என்பதை அதைப் பேசும்போது உணராதவனாக. மற்ற அதிகாரிகளைப் போலன்றிக் கொஞ்சம் கெடுபிடிக்காரன் என்று பேர் வாங்கியுள்ள நான் எனது இயல்பு மழுங்கியவனாய்க் 'கெக்கெ பிக்கெ' என்றது எதனால் என்பது புரியவில்லை. இந்த முப்பதாண்டு அலுவலக வாழ்க்கையில் நான்

யாருக்குமே விட்டுக் கொடுக்காதவன்; யாருக்காகவும், 'அட்ஜெஸ்ட்' செய்து கொள்ளாதவன். விட்டுக் கொடுத்தால் — அதிலும் பெண்களுக்கு விட்டுக் கொடுத்தால் — அவர்கள் தலைக்குமேல் ஏறி உட்கார்ந்து கொள்வார்கள் என்பது எனது கருத்தாகும். இந்த எனது கருத்து இந்தப் பெண்ணின் முன்னால் தடம் புரண்டதை உணர்ந்து வியந்தேன்.

''தாங்க்யூ சார்!'' என்றாள் சுமதி. நான் அவள் கண்களைப் பார்த்தவாறு புன்னகை செய்தேன். அவற்றின் ஒளியில் மறுபடியும் கூசினேன்.

சுமதி திடீரென்று நினைத்துக் கொண்டவள் போல் சொன்னாள். ''ஆனால் அதற்காக நீங்கள் ஒன்றும் கூப்பிடாமல் கொள்ளாமல் இருக்க வேண்டாம். ஸ்டெனோ என்றால் அப்படித்தான் இருக்கும். நீங்கள் கேட்டதனால் தான் சொன்னேன். நீங்கள் பாட்டுக்கு உங்களுக்குத் தேவைப்பட்டபோது கூப்பிடுங்கள், சார்.... எனக்காக நீங்கள் 'அட்ஜெஸ்ட்' பண்ணிக் கொள்ள வேண்டாம்.''

நான் பதில் சொல்லுமுன் அவள் எழுந்து கொண்டாள். அவள் முகத்தில் திடீரென்று ஓர் இறுக்கம் படர்ந்ததாக எனக்குத் தோன்றிற்று. நான் எனக்குள் சிறுமைப்பட்டேன். எனது வலிமைக் குறைவை நான் வெளிப்படுத்தியிருக்க வேண்டாமோ என்று வருந்தினேன். வருகிற ஐப்பசியில் எனக்கு நாற்பத்தேழு வயது முடியப் போகிறது. இதுகாறும் இப்படி அசட்டுப் பிசட்டென்று பிடி இழந்து நடந்து கொண்டதில்லை.

எனது 'அதிகாரிதனத்துக்குரிய' மதிப்பைக் குறைத்துக் கொள்ளும் வகையில் எதையும் சொல்லாமல் நான் எனது நாவை உள் இழுத்தவண்ணம் மேசையின் மீதிருந்த தாள்களில் கண்களைப் பதித்தேன்.

சுமதி, ''தாங்க்யூ, சார்....'' என்று சொன்னதும், நான் தலைநிமிர்ந்து அவளைப் பாராமலேயே, ''பரவாயில்லை'' என்றேன். அவள் எழுந்து நாற்காலியை உரிய இடத்தில் வைத்துவிட்டு வெளியேறினாள்.

அவள் போன பிறகு நான் அவளைப் பற்றிச் சிந்திக்கலானேன். காலஞ்சென்ற என் மனைவியைத் தவிர வேறு எவளைப் பற்றியும் நான் இதுவரையில் சிந்தித்தவன் இல்லை. இந்த எனது நிலை எனக்கே விந்தையாக இருந்தது. சுமதி ஒரு சக்தி வாய்ந்த பெண் என்று உணர்ந்தேன். அவளுக்கு என்ன வயசு இருக்கும் என்ற கேள்வி என்னுள் எழுந்தபோது, என்னால் அதைச் சரியாகக் கணிக்க முடியவில்லை. இருபத்தைந்திலிருந்து முப்பத்தைந்து வரையில் எந்த வயசாகவும் அவளைக் கணிக்கத் தோன்றியது. அப்படி ஒரு தனிப்பட்ட முக அமைப்பு. அவள் வயசைத் தெரிந்து கொள்ளும் ஆவலும் ஏற்பட்டது. அன்று முழுதும் நான் அவளைக் கூப்பிடவில்லை.

மறு நாள் காலை பத்தரை மணிக்கு அவள் தானாகவே வந்தாள். ''இன்று அந்த டிரெக்டர் வரவில்லை. அதனால் நீங்கள் எத்தனை தடவைகள் வேண்டுமானாலும் என்னைக் கூப்பிடலாம்'' என்று கூறிப் புன்னகைசெய்தாள்.

''அவசியம் இருந்தால் மட்டுமே நான் ஸ்டெனோவைக் கூப்பிடுவேன். பிறரைப் போல் பெண்களை அடிக்கடி கூப்பிட்டுத் தொந்தரவு கொடுக்க மாட்டேன்....''

'' அப்படியொன்றும் நீங்கள் இரக்கம் காட்ட வேண்டாம், சார்! நான் பிரயாணம் போகிறதில்லையே தவிர, மற்றப்படி எந்த ஆண் ஸ்டெனோவுக்கும் குறைந்தவள் இல்லை'' என்றாள் சுமதி.

''நோ, நோ. நான் அப்படிச் சொல்லவில்லை. நான் ஒன்றும் உங்களைக் குறைத்து மதிப்பிடவில்லை. பொதுவாகப் பெண்களிடம் அதிக வேலை வாங்குவது பிடிக்காது......''

'' வேலை செய்வதற்குத்தானே, சார், ஆபீசுக்கு வருகிறோம்? அப்புறம் ஆண் — பெண் பேதமென்ன வந்தது?''

மேற்கொண்டு என்ன பேசினாலும் தப்பாகவே படும் என்பதால் நிறுத்திக் கொண்டேன். ஆண்களின் பலவீனத்தைப் பயன்படுத்திக் கொண்டு ஆதாயமடையப் பார்க்கும் சராசரிப் பெண் இல்லை இவள் என்றும் உணர்ந்தேன். மாறாக அதை வெறுப்பவள் என்று கண்டேன். ஆணுக்குத் தான் எவ்வகையிலும் இளைத்தவள் இல்லை என்று அவள் சொல்லிக் கொண்டதில் ஒலித்த செருக்கும் என் கவனத்துக்குத் தப்பவில்லை. 'இனி இவளிடம் கவனமாகப் பேச வேண்டும்' என்று உடனே முடிவு செய்து கொண்டேன்.

அதற்குப் பிறகு நான் அவளிடம் எந்தப் பேச்சும் வைத்துக் கொள்ளவில்லை. சுருக்கெழுத்து நோட்டுப் புத்தகத்தில் பார்வையைப் பதித்தவாறு நான் சொல்லுவதை அவள் எழுதிக் கொண்டிருக்கும்போது, அவள் அறியாமல் அவளைத் திருட்டுத்தனமாகப் பார்த்துக் கொள்வதோடு சரி.

அவளுக்கு முப்பத்துமூன்று வயசு என்பதைச் சில நாட்களுக்குப் பின்னர் நான் அலுவலகக் குறிப்பேட்டிலிருந்து அறிய நேர்ந்தது. 'இவளுக்கு ஏன் இன்னும் மணமாகவில்லை?' என்று வியப்புற்றேன். அவளைப் பற்றிய விவரங்களை அறியும் அவா என்னுள் கிளர்ந்தது.

ஒரு நாள் — அவள் என்ன நினைத்துக் கொண்டாலும் சரி — அவளிடமே அதைப் பற்றிக் கேட்க வேண்டும் என்று தோன்றிற்று. மறு நாளே கேட்டுவிட்டேன்.

டிக்டேஷனை முடித்ததும், ''மிஸ் சுமதி! நான் உன்னிடம் கொஞ்சம் பேச வேண்டும். உட்கார்'' என்றேன். அதுகாறும் நான் அவளை ஒருமையில் அழைத்தது இல்லை.

''என்ன?'' என்றாள் சுமதி. அவள் கண்களின் கூர்மை அவளை நான் ஒருமையில் அழைத்தது அவளுக்குப் பிடிக்கவில்லை என்பதை அறிவித்தது. எனவே, மேற்கொண்டு அவளை ஒருமையில் விளிக்கும் துணிவு என்னிடமிருந்து ஓட்டம் பிடித்தது.

'' என்னை நீங்கள் தப்பாக எடுத்துக் கொள்ளவில்லை என்றால் மட்டுமே நான் அதைப் பற்றி உங்களிடம் பேசலாம் என்று இருக்கிறேன்......'' என்றேன்.

''சொல்லுங்கள்.'' — என்னிடம் அசட்டுத்தனம் தோன்றும்போதெல்லாம் பின்தொடரும் இறுக்கம் இப்போது அவள் முகத்தில் தென்பட்டது.

'' அது உங்கள் சொந்த விஷயம்....''

மூல நோயை
முற்றவிடாமல்
நம்பிக்கையான
ஹெடன்ஸா
களிம்பு
உபயோகித்து
நிவாரணம்
அடையுங்கள்;
—ரண
சிகிச்சையையும்
தடுங்கள்

Bensons-2141 TAM

நெஞ்சிருக்கும் வரை உன் நினைவிருக்கும்



எஸ், சம்பந்தம் பிள்ளை
புதுப்பத்தூர்

தோற்றம்: 15-7-1920 மறைவு: 26-2-1972

உங்கள் நினைவால் வாடும்
மனைவி: செல்லம்மாள்

குமாரர்கள்:
எஸ். பாலசுந்தரம், எஸ். சீனுவாசன்
எஸ். ஜெயசேகரன், எஸ். ராமசுந்தரம்

குமாரத்திகள்:
A. லீலா அருணாசலம், S. ஜெயலெட்சுமி



தலைவலி • ஃப்ளு • பல்வலி
• உடல்வலி முதலியவற்றை
உடனடியாகக் குணப்படுத்த
ஸலோஃபென்
வலி நிவாரண மாத்திரை
அமிர்தாஞ்சன் லிமிடெட் தயாரிப்பு

ஏனெனில் ஸலோஃபென் மாத்திரைகள்
டாக்டர்கள் சிபாரிசு செய்யும் மருத்துவ
முறைப்படித் தயாரிக்கப்பட்டவை.

ஸலோஃபென்
இருக்குமிடத்தில்
வலி இருக்காது!



FDSAS-1808 TM

''சும்மா கேளுங்கள் சார். எத்தனையோ பேர்களைக் குடைந்து கொண்டிருக்கிற கேள்வியைத்தானே நீங்கள் இப்போது கேட்கப் போகிறீர்கள்?'' — இப்படிச் சொல்லிவிட்டு அவள் வாய்விட்டுச் சிரித்தாள்.

''உங்களுக்கு அப்பா — அம்மா இருக்கிறார்களா ?''

''இல்லை. இரண்டு பேரும் சின்ன வயசிலேயே காலமாகிவிட்டார்கள். நான்தான் மூத்தவள். நாங்கள் எல்லோரும் மாமாவின் வீட்டில் வளர்ந்தோம். இப்போது தனியாக இருக்கிறோம்....''

''உங்கள் தம்பி, தங்கைகள் எல்லாரும் என்ன பண்ணிக் கொண்டிருக்கிறார்கள்?''

''இரண்டு தம்பிகளும் ஒரு தங்கையும் வேலையாக இருக்கிறார்கள். என் கடைசித் தங்கை படித்துக் கொண்டிருக்கிறாள்.....''

''நீங்கள் ஏன் இன்னும் கல்யாணமே செய்து கொள்ளவில்லை?''

சுமதியின் இதழ்களில் புன்சிரிப்பு படர்ந்தது. பொருள் கண்டுபிடிக்க முடியாத 'மோனலிசா'ச் சிரிப்பு அது.

''அவசியம் பண்ணிக் கொள்வேன். ஆனால் அது நிச்சயமாக நீங்களாயிருக்க முடியாது. கல்யாண வயசிலே உங்களுக்கு இருக்கிறது மாதிரி பெண்ணோ பிள்ளையோ இல்லாத மனைவியை இழந்த ஒருவரோ அல்லது பிரம்மச்சாரியோதான். தாங்க்ஸ்.....'' — சுமதி சட்டென்று எழுந்து நின்று கைகூப்பினாள். நான் வாயடைத்துப் போனேன். அமைதியாக நடந்து சென்ற அவளது முதுகுப்புறத்தைப் பார்த்தவாறு நான் கைகால்கள் இற்றுப் போய் நாற்காலியின் முதுகில் சாய்ந்தேன்.







விருது பெற்ற வித்தகர்கள்

குடியரசு தினத்தன்று பாரத அரசாங்கத்தின் விருதுகளைப் பெற்ற பெரியோர்களில் நமக்கு மிகவும் பரிச்சயமான சிலரது புகைப் படங்களை வெளியிட்டு நமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.





பத்மவிபூஷண்: 1. யு. என். தேபர்.

பத்மபூஷண்: 2. வித்வான் செம்பை ஸ்ரீ வைத்தியநாத பாகவதர் 3. ராஜா சர் எம். ஏ. முத்தையா செட்டியார். 4. போத்தன் ஜோசப். 5. ஸ்ரீ வினு மன்காட். 6. ஸ்ரீ ஹரீந்திரநாத் சட்டோபாத்யாய.



பத்மஸ்ரீ: 1. ஸ்ரீ வி. கிருஷ்ணமூர்த்தி, சேர்மன், பாரத் ஹெவி எலெக்ட்ரிகல்ஸ். 2. ஸ்ரீ பி. ராமதுரை, நிர்வாக டைரக்டர் 'ஆசியா 72'. 3. ஸ்ரீமதி சரோஜினி வரதப்பன், சமூக சேவகி. 4. டாக்டர் எம். கே. கிருஷ்ண மேனன். 5. வயலின் வித்வான் டி. என். கிருஷ்ணன். 6. திக்குரிசி சுகுமாரன் நாயர். 7. டாக்டர் வேங்கடசாமி. 8. மிருதங்க வித்வான் வி. எஸ். முருக பூபதி. 9. எப். எம். இன்ஜினியர். 10. ஸ்ரீ வி. ஆர். சுப்பிரமணியம், மானேஜிங் டைரக்டர், பாரத் எலெக்ட்ரானிக்ஸ்.






















இன்று!
தொடுவதற்கு மென்மையான மழமழப்புக்கு
வில்லியம்ஸ்
ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பிளேடு

வெட்டி வதைத்து, உங்கள் தன்மானம் புண்பட 'முகத்திலடிக்கும்' முரட்டு பிளேடுகளோடு மல்லுக்கு நின்றது போதும். இதோ, க்ஷவர சோதனைக்கு ஒரு விடிவு: புதிய வில்லியம்ஸ் ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பிளேடு...கரடுமுரடாகிக் 'கருநிழல்' படர்ந்த கடின வளர்ச்சிக்குக் கடைகட்டுகிறது! கீறலுக்கும் தழும்புக்கும் விடைகொடுப்பீர். தீர்ந்தது சரும வேதனை. மீண்டது நம் சரும மென்மை.





Creative Unit-542-Tam.

சத்திய வெள்ளம்

நா. பார்த்தசாரதி

முப்பத்துமூன்றாவது அத்தியாயம்

இரவு மணி ஒன்பதேகால் ஆகியிருந்தது. மகாநாட்டுப் பந்தலில் நாடகம் தொடங்கியிருந்தது. கண்ணுக்கினியாளைத் தவிரப் பாண்டியன், பொன்னையா, மோகன்தாஸ் முதலிய ஒவ்வொருவருக்கும் அந்த நாடகத்தில் பங்கிருந்ததால் அவர்கள் எல்லோருமே உள்ளே இருந்தார்கள். பந்தல் நிறைந்துவிட்டது. பக்கத்தில் மற்றொரு பந்தலில் கடைசிப் பந்தியாகச் சாப்பிட உட்கார்ந்திருந்த ஊழியர்களையும், மகாநாட்டுக்கு உதவி புரிந்த சாரணர்களையும் கவனித்துப் பரிமாறி உபசரித்துக் கொண்டிருந்தார்கள் அண்ணாச்சி முதலியவர்கள். பந்தலுக்கு வெளியே ஏறக்குறைய ஆள் நடமாட்டமே இல்லை. குளிர் அதிகமாகியிருந்ததனால் எல்லாக் கூட்டமும் மாணவர் மகாநாட்டுப் பந்தலுக்குள் இருந்தது. நாடகத்தில் முதல் காட்சி தொடங்கி முடிவதற்குள் மேடைக்குப் பின்புறம் இருந்து, ''ஐயோ தீ! தீ!... எந்தப் பாவியோ பந்தலுக்கு நெருப்பு வைத்து விட்டானே!'' என்ற கூக்குரலும் அதையடுத்துக் கனன்று மேற் பாயும் தீ நாக்குகளும் எழுந்தன. பந்தலில் உடனே கூப்பாடும் குழப்பமும் பரவிக் கூட்டம் தறி கெட்டுக் கலைந்து ஓடத் தொடங்கியது. உடனே மாநாட்டுப் பந்தலிலிருந்து பின்புறமாக விரைந்த மாணவர்கள் மேடையின் பக்கவாட்டில் தீப்பிடித்த இடத்திலிருந்து அவசரமாகத் திரும்பும் ஒரு ஜீப்பைப் பார்த்தனர். தீ வைக்க வந்தவர்கள் அந்த ஜீப்பில்தான் வந்திருக்க வேண்டும் என்று புரிந்தது. சிரமப்பட்டு மோட்டார் சைக்கிளில் துரத்தி அந்த ஜீப் நம்பரைக் கூடக் குறித்துக் கொண்டு வந்து விட்டான் ஒரு மாணவன். அது மல்லை இராவணசாமியின் ஜீப் என்பதும் புரிந்தது. தீயணைக்கும் அலுவலகத்துக்குத் தகவல் தெரிந்து அவர்கள் வருவதற்கு நேரமாகி விட்டது. தீ பரவுவதற்குள் கண்ணுக்கினியாள் முதலிய பெண்களையும் நாடகத்துக்காக இசைக் கருவிகளோடு வந்திருந்த பல்கலைக் கழக இசைக் கல்லூரி மாணவிகளையும் பத்திரமாக வெளியே கொண்டு வந்து சேர்த்தார்கள் மாணவர்கள். மகாநாட்டு உபயோகத்துக்காக டிரம்களில் நிரப்பியிருந்த தண்ணீரைக் கொண்டு அண்ணாச்சியும், பிறரும் தீயை அணைக்க முயன்றது பலிக்கவில்லை. பந்தலிலிருந்த மைக், ஒலிபெருக்கிகள், நாற்காலிகள் முதலியவற்றை முடிந்த மட்டும் வெளியேற்றி மின்சார இணைப்பைத் துண்டிப்பதற்கே படாத பாடு படவேண்டியிருந்தது.

''பாவிக... நல்லா யிருக்க மாட்டாங்க... இப்பிடிப் போயிடுவாங்க...'' என்று கோபம் பொறுக்க முடியாமல் கையைச் சொடுக்கினார் அண்ணாச்சி.

''எப்பிடியாவது நடக்க விடாமே மகாநாட்டை நிறுத்திப்பிடணும்னு ஒரு வாரமாகவே கருக்கட்டிக்கிட்டிருந்தாங்க... மகாநாடு பிரமாதமா நடந்திடிச்சு... வயிற்றெரிச்சல்காரங்க இருட்டினதும் இதைப் பண்ணிட்டாங்க...'' என்று மனம் நொந்து போய்ச் சொன்னார் மணவாளன்.

கையில் வீணையோடு பேராசிரியர் பூதலிங்கத்தின் மகள் கோமதியும், மேக்-அப் கலைக்காத கோலத்தில் கண்ணுக்கினியாளும், பாண்டியனும், அண்ணாச்சியும் விலகி நின்று தீப்பற்றி எரியும் பந்தலைக் கண் கலங்கிப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்; தீ அணைக்கும் படை வந்து நீண்ட நீண்ட குழாய்கள் மூலம் தண்ணீரைப் பீச்சியடித்துப் போராடியது. சிறிது நேரத்துக்கெல்லாம் போலீஸ் 'வேன்' வந்தது. அந்த வேனில் வந்த எஸ். ஐ. யிடம் தீவைத்தவர்கள் தப்பிய ஜீப் எண்ணைக் கூறிப் பாண்டியன் முதலியவர்கள் புகார் சொல்லியபோது, ''நீங்கள் கூறுவது சாத்தியமே இல்லை! போலீஸ் கிளப் லானில் அதே ஜீப்பிலே வந்து மாலையிலிருந்து இராவணசாமி சர்க்கிள் இன்ஸ்பெக்டருடன் அங்கே ஏதோ முக்கிய விஷயமாகப் பேசிக் கொண்டிருக்கிறார். ஒரே ஜீப் எப்படி இரண்டு இடங்களில் இருக்க முடியும்?'' என்று மறுத்தார் அவர்.

''போலீஸ் கிளப் லானில் இந்த ஜீப் நிற்பதோ நிற்காததோ எங்களுக்குத் தெரியாது சார்! ஆனால் இங்கே அந்த ஜீப் வந்ததும் அவசரமாகத் திரும்பியதும் உண்மை'' என்றான் பாண்டியன்.

''அது வீண் பிரமை! அப்படி நடந்திருக்கவே முடியாது'' என்றார் எஸ். ஐ. அதைக் கேட்டு ஏற்கனவே ஆத்திரமாக


இருந்த மாணவர்களுக்கு மேலும் கோபம் வந்து விட்டது. மணவாளனும் அண்ணாச்சியும்தான் மாணவர்களை அமைதியடையச் செய்தனர்.

''கருத்து மாறுபாடு கொள்கிறவர்களையும், விமரிசிப்பவர்களையும் சகித்துக் கொள்ள முடியாதவர்கள் அதிகாரத்தில் இருந்தால் அந்த அதிகாரத்தில் ஜனநாயகத்துக்கு இப்படிப்பட்ட அவமரியாதைகள்தான் நடக்கும். சகிப்புத் தன்மையை ஒரு விரதமாகவும் நோன்பாகவும் கடைப்பிடித்த காந்திஜியின் சிறப்பு சகிப்புத்தன்மையே இல்லாத ஓர் ஆட்சி நடக்கிற இப்போதுதான் மிக நன்றாகப் புரிகிறது. ஆனால் இவர்களும் கூட காந்தியை வாய்க்கு வாய் போற்றுகிறார்கள்; விழாக் கொண்டாடுகிறார்கள். காந்தியத்தைக் கொன்றுகொண்டே காந்திக்கும் விழா எடுப்பது எத்தனை சாதுரியம்!'' என்று அண்ணாச்சியை நோக்கி வினவினார் மணவாளன். அண்ணாச்சி இதற்கு மறுமொழி ஒன்றும் கூறவில்லை.

''இந்தக் கொடுமை பொறுக்க முடியாமல்தான் கதிரேசன் போன்றவர்கள் வன்முறையில் நம்பிக்கை வைத்து அந்த வழிக்குப் போனார்கள். கெஞ்சிப் பல்லைக் காட்டி வேண்டுகிறவர்களைக் கயவர்கள் சிறிதும் மதிப்பதில்லை. அவர்கள் பல்லை உடைப்பவர்களிடம்தான் பயந்து வழிக்கு வருகிறார்கள்'' என்று உணர்ச்சி வசப்பட்டுச் சொன்னான் பாண்டியனின் அறை நண்பன் பொன்னையா. அவன் வெறி கொண்டு கூப்பாடு போட்டான்.

இரவு ஒன்பது மணி வரையில் ஜெகஜ்ஜோதியாக இருந்த மகாநாட்டுப் பந்தல் புகையுடனும், தீ நெடியுடனும், பத்தரை மணிக்குத் தரை மட்டமாகியிருந்தது. மாணவர் கூட்டம் கட்டுக்கடங்காத கோபத்தோடு எரிந்த பந்தலுக்கு வெளியே வெறியேறி நின்றது. ஏதோ பெரிய கலவரத்தை எதிர்பார்ப்பது போல் போலீஸ் லாரிகள் நான்கு பக்கமும் வந்து வளைத்துக் கொண்டு நின்றிருந்தன.' மகாநாட்டுத் தினத்தன்று அதைத் தவிர்க்க விரும்பியவர் போல் துணைவேந்தர் வெளியூருக்கு நழுவியிருந்தார். ஆர். டி. ஓ.வும் பக்கத்து ஊரில் முகாம் செய்திருந்தார்.

நடந்ததை உள்ளது உள்ளபடியே பத்திரிகைகளுக்குத் தந்தி மூலமும், தொலைபேசி மூலமும் தெரிவித்தார்கள் மாணவர்கள். எவ்வளவோ முயன்றும் மகாநாட்டு வசூல் பணத்தில் ஒரு பகுதியும், வாடகைக்கு வாங்கிப் போட்டிருந்த நாற்காலிகள், ஜமுக்காளங்களும் மின்சாரச் சாதனங்கள் சிலவும் தீயில் போய் விட்டன. உடனே பழிக்குப் பழி வாங்கும் சினத்தோடு இருந்த மாணவர்களை அமைதி அடையச் செய்து கலைத்து அவரவர்கள் தங்கியிருந்த இடங்களுக்கு அனுப்பி வைப்பதற்குப் பாண்டியனும், மணவாளனும், அண்ணாச்சியும் பெருமுயற்சி எடுத்துக்கொண்டனர். முதலில் மாணவிகளை விடுதிக்கு அனுப்பி வைத்தார்கள். பின்பு மாணவர்களை அனுப்பி மற்ற வேலைகளை யெல்லாம் முடித்து விட்டுப் பாண்டியன் அண்ணாச்சி முதலியவர்கள் படுக்கச் செல்லும்போது பின்னிரவில் நான்கு மணி ஆகிவிட்டது. தீப்பிடித்த கொடுமையால் பாதிச்



சாப்பாட்டில் எழுந்து வந்த சாரணர்களும், ஊழியர்களும் மேலே சாப்பிடாததால் அரை வயிற்றுப் பட்டினியோடு போய்ப் படுக்க நேர்ந்தது. மறுநாள் விடிந்ததும் முதல் வேலையாக மகாநாட்டுக்கென்று அகில இந்தியாவிலுமிருந்து வந்திருந்த வெளியூர்ப் பிரதிநிதிகளை வழியனுப்பி வைக்கும் வேலையில் ஈடுபட்டார்கள். விருந்தினர்களுக்குமுன் தங்கள் மனத்தாங்கல்களைப் பெரிதுபடுத்த விரும்பாமல் அடக்கமாகவும், அமைதியாகவும் நடந்து கொண்டார்கள் அவர்கள். எரிகிற தீயில் எண்ணெயை வார்ப்பது போல் மறுநாள் காலை வெளியான ஆளும் கட்சிப் பத்திரிகைகளில் எல்லாம், 'மகாநாட்டுப் பந்தலுக்குத் தாங்களே தீ வைத்துவிட்டுப் பிறர் தலையில் பழி போட முயற்சி. நக்ஸலைட்டுகளின் நாச வேலை' என்பது போல் திரித்து வெளியிடப்பட்ட செய்திகள் பிரசுரமாகி மாணவர்களைக் கோபமூட்டின. தேசியப் பத்திரிகைகளிலும், மற்ற நடுநிலைத் தினசரிகளிலுமே உண்மைச் செய்திகள் வெளிவந்திருந்தன. பொய்ச் செய்தியை ஒட்டி, ''கொலை, கொள்ளை, தீவைப்பு போன்ற செயல்களில் மல்லிகைப்பந்தல் பல்கலைக் கழக மாணவர்கள் தொடர்ந்து ஈடுபடுவதை இனியும் நாங்கள் சும்மா பார்த்துக் கொண்டிருக்க முடியாது'' என்பது போல் அமைச்சர் கரிய மாணிக்கம் ஓர் அறிக்கை வேறு விட்டிருந்தார். தமக்கு டாக்டர் பட்டம் அளிக்கப் போகிற விழாவுக்கு முன் எதையாவது சொல்லி மிரட்டி முக்கியமான மாணவர் இயக்க இளைஞர்களைப் பிடித்து உள்ளே தள்ளிவிட இந்த அறிக்கையின் மூலம் அமைச்சர் முயல்வது தெரிந்தது. சில பத்திரிகைகளில் 'மல்லை இராவணசாமியின் ஜீப்பில் வந்த ஆட்களே நெருப்பு வைத்துவிட்டு ஓடினர்' என்ற மாணவர்கள் அறிக்கையையும் பிரசுரித்துவிட்டு, அடுத்த பத்தியிலேயே அதை மறுக்கும் போலீஸ் தரப்பு அறிக்கையையும் முதலமைச்சர் அறிக்கையையும் சேர்த்தே பிரசுரித்திருந்தார்கள். மகாநாடு முடிந்ததுமே பொங்கலுக்கு ஊர் திரும்பலாம் என்று எண்ணியிருந்த பாண்டியன், மணவாளன், கண்ணுக்கினியாள் முதலிய எல்லோருடைய பயணமும் தடைப்பட்டன. மூங்கில் தட்டி,



பந்தல் சாதனங்கள் முதலிய எல்லாமே எரிந்து சாம்பலாகி இருந்ததனால் பந்தல் காண்ட்ராக்ட் எடுத்திருந்தவருக்கு நிறைய நஷ்டஈடு தரவேண்டியதாகிவிட்டது. வயரிங் டியூப் லைட்டுகள், ஒளிவிளக்கு, அலங்காரம் எல்லாம் அழிந்துபோன நிலையில் எலெக்ட்ரீஷியனின் சேதமும் அதிகமாகிவிட்டது. மகாநாட்டு வசூல் பணத்திலும் பெரும் பகுதி தீயில் போய்விட்டதனால் வெற்றிகரமான ஒரு மகாநாட்டு முடிவில் மாபெரும் பொருளாதாரப் பிரச்னை அவர்கள் முன் பூதாகாரமாக உருவெடுத்து நின்றது. மணவாளன் மலைத்தார். பிரதிநிதிகள், பேச வந்த பிரமுகர்கள் தங்கிய ஹோட்டல் பில் எல்லாம் பாக்கி நின்றது. மாணவர்களிடம் தலைக்கு ஒரு ரூபாயோ, இரண்டு ரூபாயோ வசூலித்தால்கூட அது போதாது. விடுமுறை தொடங்கியதுமே ஒரு பகுதி மாணவர்களும், மகாநாடு முடிந்தவுடன் எஞ்சியவர்களும் ஊர் திரும்பி விட்டதால் அப்போது நகரில் உள்ளூர் மாணவர்கள் மட்டுமே இருந்தார்கள். இப்படிப்பட்ட நிலைகளில் மணவாளனின் இயல்பு தனியானது. நழுவி ஓடவோ, தப்பித்துக் கொள்ளவோ, பொறுப்பைத் தட்டிக் கழிக்கவோ அவருக்குத் தெரியாது. மதுரையில் வீட்டுக்குத் தந்தி கொடுத்தார் அவர். மணவாளனின் தந்தை மறுநாளே மகன் பெயருக்கு மூவாயிரம் ரூபாய்க்கு ஒரு பேங்க் டிராஃப்ட் அனுப்பி வைத்தார். மகாநாட்டுச் செயற்குழு அன்று மாலையிலேயே அவசரமாகக் கூட்டப்பட்டது. அண்ணாச்சி கடையின் பின்புறம் செயற்குழு சந்தித்தது. · மணவாளன் நிலைமையை விவரித்தவுடன் தயாராகக் காத்திருந்தவர் போல் மடியிலிருந்து இரண்டாயிரம் ரூபாயை நோட்டுக் கற்றைகளாக எடுத்துக் கொடுத்தார் அண்ணாச்சி. ''நீங்களே தொடர்ந்து சிரமப்படறீங்க.....? இதெப்படி நீங்க? எதை விற்றீங்க? என்ன பண்ணினீங்க? உங்க உழைப்புக்கு நாங்க எவ்வளவோ கடமைப்பட்டிருக்கோம். நீங்க பணம் எதுவும் தரணும்கிறது இல்லே அண்ணாச்சி!'' என்றார் மணவாளன். அண்ணாச்சி சிரித்தார்.

''சும்மா எடுத்து வையுங்க..... நிலைமை என்னென்னு உங்களைவிட எனக்கு நல்லாத் தெரியும்.... உபசாரமெல்லாம் நமக்குள்ளே எதுக்கு? பாக்கி எல்லாம் சீக்கிரமாக் கொடுத்து முடிக்கலியின்னு ஒவ்வொருத்தனும் மகாநாட்டுக் கமிட்டிக்கு வக்கீல் நோட்டீஸ் அனுப்புவான்......''

''எப்பிடி இது?.... உங்களாலே இவ்வளவு பெரிய தொகை....?''

''நீங்க கோபப்படலையின்னு நான் சொல்றேன்.....''

'' சொல்லுங்க.... கோபம் என்ன இதிலே ?''

''கடை உபயோகத்துக்குப் பேப்பர் போடக் கொள்ள ரெண்டே ரெண்டு சைக்கிள் மட்டும் மீதம் வைச்சுக்கிட்டு மத்ததையெல்லாம் வித்துப்புட்டேன். அந்தப் பணம்தான் இது....''

''ஏன் அப்பிடிச் செஞ்சீங்க?... நீங்க செஞ்சது கொஞ்சங்கூட நல்லாயில்லே, அண்ணாச்சி.''

'' இந்தச் சைக்கிள் எல்லாமே நீங்களும் மத்த மாணவர்களும் வசூல் பண்ணி வாங்கிக் கொடுத்ததுதானே ? உங்களுக்கு இல்லாமே எனக்கு எதுக்குங்க? நான் என்ன இதையெல்லாம் தலையிலியா கட்டிக்கிட்டுப் போகப் போறேன் ?''

''கடை நடக்கணுமே....? அதுக்கு இனிமே என்ன செய்வீங்க....?''

''பேப்பர் ஏஜன்ஸி, பெட்டிக்கடை வியாபாரம் போதுங்க.... சைக்கிள் வாடகைக்கு விட்டுக் காசு வாங்கறது ரொம்பத் தொல்லையாயிருக்கு. அதை இதோட நிறுத்திடலாம்னே முடிவுபண்ணிட்டேன்......''

''மாணவர்களுக்காக நீங்க எவ்வளவோ செய்யறீங்க.... உங்களுக்கு நாங்க என்ன நன்றி சொல்றதுன்னே தெரியலே அண்ணாச்சி !.....''

''போதும்! மேலே நடக்க வேண்டியதைக் கவனியுங்க.... நன்றி, கைம்மாறுன்னெல்லாம் உபசார வார்த்தைகளைச் சொல்லி என்னைப் போல ஒரு தொண்டனை அவமானப் படுத்தாதீங்க.... நான் அதை எல்லாம் எதிர்பார்க்கிறவன் இல்லே.''

நன்றியின் முழுக் கனிவும் தெரிய அங்கே கூடியிருந்த மாணவர்களும் மணவாளனும் அண்ணாச்சியை ஏறிட்டுப் பார்த்தார்கள். வாசலில் 'சார் தந்தி!' என்று தந்திச் சேவகனின் குரல் கேட்டது. அண்ணாச்சி முன் பக்கம் போய்த் தந்தியை வாங்கிக் கொண்டு வந்து பாண்டியனிடம் கொடுத்தார். தேசிய மனப்பான்மையுள்ள நடிகர் திலகம் ஒருவர் சென்னையிலிருந்து மாணவர் மகாநாட்டுச் செலவுகளுக்காகவும் தீப் பற்றி நேர்ந்த இழப்புக்களுக்காகவும் வருந்தித் தம்முடைய நன்கொடையாக ஐயாயிரம் ரூபாய்க்குச் செக் அனுப்பியிருப்பதாகத் தந்தி மூலம் குறிப்பிட்டிருந்தார். அந்த நடிகருடைய பெயரில் இயங்கி வந்த மல்லிகைப் பந்தல் இரசிகர் மன்றம்


அம்மா ஏன் அவங்க பாத்ரூம் நாற்றமடிக்குது, நம்முடையது ஜம்முனு வாசனை-யாயிருக்கு?

மகாநாட்டு ஏற்பாடுகளில் பெரிதும் ஒத்துழைத்திருந்தது. அந்த இரசிகர் மன்றத்தைச் சேர்ந்த யாரோ ஒருவர் ஃபோன் செய்து தகவல் தெரிவித்திருந்ததால் இந்த நன்கொடையை நடிகர் திலகம் அனுப்பியிருக்க வேண்டும் என்று புரிந்தது. என்ன நன்கொடைகள் வந்தாலும் அவர்கள் சேர்த்தாக வேண்டிய தொகை இன்னும் எட்டாத உயரத்திலேயே இருந்தது.

இப்படி மாணவர்களின் செயற்குழுக் கூட்டம் நடந்து கொண்டிருந்தபோதே, யாரும் எதிர்பாராத விதமாகப் பொருளாதாரப் பேராசிரியர் பூதலிங்கம் திடீரென்று அண்ணாச்சி கடையைத் தேடிக் கொண்டு வந்தார். மாணவர்கள் வியப்புடன் எழுந்து நின்று அவரை மிகவும் மரியாதையாக வரவேற்றார்கள்.

அங்கே சிறிது நேரம் அமைதியாக உடனமர்ந்து அவர்கள் செயற்குழு நடவடிக்கைகளைக் கவனித்த பூதலிங்கம், இருந்தாற் போலிருந்து, ''பாண்டியன்! ஐ நோ யுவர் டிஃபிகல்டீஸ். பிளீஸ் அக்ஸெப்ட் மை ஹம்பிள் டொனேஷன்'' என்று மிகவும் அடக்கமாய்ப் பையில் தயாராக எழுதி எடுத்து வந்திருந்த ஐந்நூறு ரூபாய்க்கான 'செக்' ஒன்றை எடுத்து நீட்டினார். பாண்டியன் அதை வாங்கத் தயங்கினான். அவன் கையில் அதை வற்புறுத்தித் திணித்தார் பேராசிரியர். மணவாளன் உடனே அவரைக் கேட்டார்: ''புரொபசர் சார்! இது எங்கள் கஷ்டம்! இதில் நீங்களும் கலந்து கொண்டு சிரமப்படுவது அவசியம்தானா?''

''உங்கள் கஷ்டத்தில் எனக்கும் பங்கு உண்டென்று நான் நினைப்பது தவறில்லையே மிஸ்டர் மணவாளன்?''

''நீங்கள் எல்லாம் மாணவர்கள்மேல் இப்படி உயிரையே வைத்திருக்கிறீர்கள் சார்! உங்களைப் பார்க்கும் போதெல்லாம் எங்களுக்குப் பெருமையாக இருக்கிறது. ஆனால் நம்ம வி.ஸி. மாணவர்களை எல்லாமே தம் எதிரிகளாக நினைக்கிறார்.....''


''விட்டுத் தள்ளுங்கள்! இந்த நல்ல வேளையில் அவரைப் பற்றிப் பேசாதீர்கள். என்னைப் பொறுத்த வரையில் அவரை நான் மதிப்பதே இல்லை. அவரைவிட இந்த அண்ணாச்சியை நான் அதிகம் மதிக்கிறேன். டு பீ வெரி பிராங் வித்யூ... இங்கே படிக்கும் மாணவர்களின் நலன்களை அதற்காக மூவாயிரம் ரூபாய் மாதச் சம்பளம் வாங்கும் வி.சி.யைவிட எந்தச் சம்பளமும் வாங்காமல் இந்த அண்ணாச்சி நெடுநாட்களாகக் கவனித்து உதவுகிறார். இவரைப் போல் சுயநலமில்லாத தொண்டர்களின் முன் நான் வி.சி.யை என் கால் தூசுக்குக்கூட மதிக்கவில்லை. இங்கே வந்து இந்தக் கடையை வைத்த நாளிலிருந்து மாணவர்களுக்கு இவர் பிரதிபலன் எதிர்பாராமல் செய்திருக்கும் உதவிகளை யாரையும்விட நான் மிக நன்றாக அறிவேன். வலது கை கொடுப்பது இடது கைக்குத் தெரியாமல் உதவிகள் செய்யும் இவர் அன்றிலிருந்து இன்று வரை கிழிந்த நாலு முழம் கதர் வேட்டியும், அரைக் கைக் கதர்ச் சட்டையுமாக ஒரே மாதிரி எளிமையாக இருக்கிறார். வியாபாரத்தில் சம்பாதித்த லாபத்தில் வீடு கட்டிக் கொண்டு வாழ இவருக்குத் தெரியவில்லை. இவருடைய கட்சி பதவியில் இருந்த போது தம் தியாகங்களை எடுத்துச் சொல்லி இரண்டு பஸ் ரூட்டுக்குப் பெர்மிட் வாங்கிக் கொள்ள இவர் ஆசைப்பட்டுப் பறந்ததில்லை. இவரைப் பார்க்கும்போதெல்லாம் என் சொந்த ஊரான சுசீந்திரம் கோயிலில் இருக்கும் அனுமார் சிலை எனக்கு ஞாபகம் வருவதுண்டு. இவரை அருகில் வைத்துக் கொண்டே இப்படிப் புகழ்வதற்கு எனக்குக் கூச்சமாக இருக்கிறது மிஸ்டர் மணவாளன்! உபதேசம் செய்கிறவர்களைவிடத் தொண்டு செய்கிறவர்களே உயர்ந்தவர்கள். உபதேசம் செய்கிறவர்கள் வெறும் ஞானங்களைச் சுமக்கிறார்கள். தொண்டு செய்கிறவர்களோ அந்த ஞானங்களைக் கடைப்பிடித்து விடுகிறார்கள்! உபதேசிப்பவர்களைவிடக் கடைப்பிடிப்பவர்கள் மேலானவர்கள் என்பதற்கு இவர் ஓர் அடையாளம்..''

''சார்! சார்! போதும்... இந்த ஏழையை ரொம்பப் புகழாதீங்க...இந்தத் தேசத்தின் முதல் பெரும் தொண்ட

சத்திய வெள்ளம்



உபதேசம் செய்கிறவர்களைவிடத் தொண்டு செய்கிறவர்களே உயர்ந்தவர்கள். உபதேசம் செய்கிறவர்கள் வெறும் ஞானங்களைச் சுமக்கிறார்கள். தொண்டு செய்கிறவர்களோ அந்த ஞானங்களைக் கடைப்பிடித்து விடுகிறார்கள்.



வர்த்தகமில்லா வர்த்தக ஒலிபரப்பு!

ரேடியோ வர்த்தக ஒலிபரப்பில் ஒலிபரப்பாகும் விளம்பரங்களை விட்டுவிட்டுப் பாட்டுகளை மட்டும் கேட்க வசதியாக பம்பாய் மாணவர் ஒருவர் (சையத் ஷாபி) ஒரு சாதனத்தைக் கண்டுபிடித்திருக்கிறார். விளம்பரம் வந்ததும் ரேடியோ நின்றுவிடுகிறது. பாட்டு ஆரம்பமானதும் பாட ஆரம்பிக்கிறது. இந்தக் கண்டுபிடிப்புக்கு அவர் 'கமர்ஷியல் கில்லர்' என்று பெயர் வைத்திருக்கிறார்.

டைம்ஸ் ஆப் இந்தியா — பாலி

ரும் கடைசிப் பெரும் தொண்டருமான காந்தி மகான் எனக்கு இட்ட பிச்சை இது. இதில் எதுவுமே என் சொந்தப் பெருமை இல்லீங்க..... எல்லாமே அந்த மகான் எனக்கு அளித்தபெருமை'' என்று பொருளாதாரப் பேராசிரியரை நோக்கி அடக்கமாகக் கைகூப்பினார் அண்ணாச்சி. புகழுக்குக் கூசுகிற—புகழிலிருந்து விலகி நிற்கிற இந்தப் பண்பை மணவாளனும், பாண்டியனும் அண்ணாச்சியிடம் நெடுநாட்களாகக் கவனித்து வைத்திருந்தார்கள். இருபதாம் நூற்றாண்டு மனிதர்களில் பேதைகளைப் போல் தோன்றும் இப்படிப்பட்ட மேதைகளைக் காண்பது மிக மிக அதிசயமாயிருந்தது. மகாநாட்டுப் பந்தல் தீப்பற்றியதால் வந்த புதிய நஷ்டங்களும், பழைய செலவுகளில் கொடுபட வேண்டிய பாக்கிகளும் நிறைய இருந்தன. அண்ணாச்சி, மணவாளன், பூதலிங்கம் ஆகியோர் அளித்தவை; சென்னையிலிருந்து நடிகர் திலகம் அனுப்ப விருக்கும் தொகை முதலிய எல்லாவற்றையும் கூட்டினாலும் போதாது போலிருந்தது. ஹாஸ்டல் ஃபீஸுக்காகவும், இதர செலவுகளுக்காகவும் ஒரு வாரத்துக்குமுன் தன் தந்தை கிராம விவசாயக் கூட்டுறவு பாங்கில் எடுத்து அனுப்பியிருந்த டிராஃப்ட்டை மாற்றி, மகாநாட்டுச் செலவுகளில் கரைய விட்டிருந்தான் பாண்டியன். கண்ணுக்கினியாள் 'பாக்கெட் மணி'யாகத் தந்தை அனுப்பிய தொகைகளிலிருந்து மீதம் பிடித்து இருநூறு ரூபாய் நன்கொடை கொடுத்திருந்தான். வேறு சில மாணவ மாணவிகளும் இப்படி உதவியிருந்தார்கள்.

கெடுக்க வேண்டும் என்றே சதி செய்து மாணவர் மகாநாட்டுப் பந்தலுக்குத் தீ வைத்த மல்லை இராவணசாமியின் வீட்டுக்கோ, அவரது கட்சி அலுவலகத்துக்கோ கண்டன ஊர்வலம் போய்ப் பெருந் திரளாகக் கூடி மறியல் செய்ய வேண்டும் என்று செயற்குழுவில் சில மாணவர்கள் கூறிய யோசனையை மணவாளன் ஏற்கவில்லை.

''மகாநாட்டுக்குத் தங்கள் கட்சி மந்திரிகள் யாரையும் கூப்பிடவில்லை என்ற கோபத்திலும் தங்கள் எதிர் முகாமைச் சேர்ந்தவரும் பதவியில் இல்லாவிட்டாலும் கோடிக்கணக்கான மக்களால் தொழப்படுகிறவருமாகிய பெருந் தலைவர் ராமராஜ் அவர்களைத் தொடக்க உரை ஆற்றக் கூப்பிட்டுவிட்டோமே என்ற பொறாமையினாலும் அவர்கள் இதைச் செய்துவிட்டார்கள். அவர்கள் எவ்வளவு கெட்ட எண்ணம் உள்ளவர்கள் என்பதை இதன் மூலம் நாட்டுக்கு நிரூபித்து விட்டார்கள். அது போதும். நாம் வேறு இதை எதிர்த்து வன்முறைகளில் இறங்க வேண்டாம். ஜீப்பில் சௌகரியமாக ஏறி வந்து அடுத்தவர்கள் . நடத்தும் மகாநாட்டுப் பந்தலுக்கு நெருப்பு வைக்கிற அளவுக்கும், லாரிகளில் குண்டர்களை ஏற்றி வந்து மற்றவர்களைத் துன்புறுத்தும் அளவுக்கும் வசதிகள் உள்ளவர்களால் நாம் ஆளப்பட்டுக் கொண்டிருக்கிறோம் என்பது மக்களுக்குப் புரிந்திருக்கிறது. அவர்களை எதிர்ப்பதைவிட ஆக்க பூர்வமான வேறு வேலைகள் நமக்கு இருக்கின்றன. இந்த அகில இந்திய மாணவர் மகாநாடு நம்மைப் பெரும் கடனாளி ஆக்கிவிட்டது. அந்தக் கடன்களைத் தீர்க்கும் வேலையே நமக்கு இன்னும் சில வாரங்கள் வரையில் இருக்கும்...''

செயற்குழுக் கூட்டம் முடிந்து எல்லோரும் கலையும் போது, பாண்டியன் கண்ணுக்கினியாளிடம் பேசத் தனிமை வாய்க்காததால் ஒரு துண்டுத் தாளில், 'நாளை வெள்ளிக்கிழமை அதிகாலையில் ஐந்தரை மணியிலிருந்து ஆறு மணிக்குள் ஹாஸ்டல் மைதானத்தில் இருக்கும் பிள்ளையார் கோயிலில் காத்திருப்பேன். சந்திக்கவும். உன்னிடம் ஒரு முக்கியமான காரியம் இருக்கிறது' என்று எழுதி மடித்துக் கொடுத்தான். அதைப் படித்துவிட்டு அங்கிருந்து போவதற்கு முன் 'வருவதாக' சைகை மூலம் தெரிவித்து விட்டுப் போனாள் அவள். இன்னும் இரண்டு மூன்று நாட்களில் பொங்கல் பண்டிகைக்காக அவள் பாண்டியன், மணவாளன், எல்லோருமே ஊர் திரும்ப இருந்தார்கள். அதற்குள் மகாநாட்டுப் பாக்கிகளையும், கடன்களையும் கொடுத்துவிட்டுப் போக வேண்டும் என்று முடிவு செய்திருந்தார்கள் அவர்கள்.

(தொடரும்)

சிமெண்ட் பயன்படுத்துவோர் கவனத்துக்கு...

மின்சார வெட்டு சிமெண்ட் தயாரிப்பையும் விநியோகத்தையும் மிகவும் பாதித்துள்ளது. இதன் விளைவாக அங்கீகரிக்கப்பட்ட விற்பனையாளர்கள் முன்புள்ளதைப்போல் தேவையை நிறைவேற்றி வைக்க முடிவதில்லை. ஆகவே உங்களில் சிலர் அங்கீகரிக்கப்படாத விற்பனையாளர்களிடம் வாங்கலாம். இப்படிச் செய்வதால் நீங்கள் இரட்டைத் தொந்தரவை விலைக்கு வாங்குகிறீர்கள். ஒன்று அதிக விலை கொடுத்தல் — இரண்டாவது கலப்படமுள்ள சிமெண்ட் பெறுவது.

உங்கள் சொந்த நலனைக் கருதி அங்கீகரிக்கப்பட்ட விற்பனையாளர்களிடமிருந்தே நீங்கள் சிமெண்ட் வாங்கிக் கொள்ளக் கோருகிறோம். அத்தகைய விற்பனையாளர்கள் விற்பனையாளர் சர்ட்டிபிகேட்டும் வாடிக்கையாளர் விற்பனை ஜாபிதாவும் தயாரிப்பாளர்களிடமிருந்து பெற்றுக் காட்சிக்கு வைத்திருப்பார்கள், அங்கீகரிக்கப்பட்ட விற்பனையாளர்கள் கேஷ் மெமோ அல்லது பில்,வில் விற்கப்பட்ட அளவு, அதன் கிரயம் பெற்றுக் கொண்டது ஆகியவற்றை ஒவ்வொரு வாடிக்கையாளர்களுக்கும் வழங்குவார்கள்.

அங்கீகரிக்கப்பட்ட விற்பனையாளர்கள் உடனே உங்களுக்கு சிமெண்ட் விநியோகிக்க முடியாவிட்டாலும் தயவுசெய்து உங்கள் தேவைகளைப் பதிவு செய்து கொண்டு விடுங்கள். நீங்கள் பதிவு செய்து கொண்டால் விற்பனையாளர்கள் பட்டியல் வரிசைப்படி கவனித்து வழங்க உதவியாக இருக்கும்.

அங்கீகரிக்கப்பட்ட விற்பனையாளரிடம் தரமான சிமெண்டை வாங்குங்கள்

SANKAR
I C
CEMENT

இந்தியா சிமெண்ட்ஸ் லிமிடெட்

175/1, மவுண்ட் ரோட், சென்னை - 600002

மக்கள் நலனையொட்டி வெளியிடப்பட்டது



இலக்கிய மலர்கள்

மீ. ப. சோமு

14. அன்ன தானம்

காளமேகப் புலவருடைய இரண்டு பாடல்கள் நமக்கு இரண்டு வகையான அன்ன தானத்தை அறிமுகப்படுத்துகின்றன. ஒன்று நையாண்டி, மற்றொன்று உருக்கம்.

நாகப்பட்டினத்தில் ஒரு சத்திரம். காளமேகப் புலவர் காலத்தில் காத்தான் சத்திரம் என்று அதற்குப் பெயர். அங்கே நிர்வாகம் எப்படி நடக்கிறதாம்? புலவர் நிந்தையை விளையாட்டாகச் செய்கிறார்.

கத்துகடல் சூழ்நாகைக்
காத்தான்தன் சத்திரத்தில்

(கத்துகடல் — கூப்பாடு போடுகிற சமுத்திரம்.)

பசியால் கூப்பாடு போட்டுக் கதறியழுகிற குழந்தையைப் போல் அடைமொழி தொடங்குகிறது! "ஓ" என்று கத்துகிறது கடல். அந்தக் கடல் சூழ்ந்த நாகை என்னும் நாகப்பட்டினத்துக் காத்தானுடைய சத்திரத்திலே,

அத்தமிக்கும் போதில்
அரிசி வரும்

(அத்தமிக்கும் - அஸ்தமிக்கும்.)

சூரியன் மேற்கில் அடையும் தருணமான அத்தமனத்தில் அரிசி வந்து சேரும் — அதாவது பசியே அத்தமித்த பிறகு!

— குத்தி

உலையில் இட ஊர் அடங்கும்

அரிசியை உரலிலே போட்டுக் குத்திப் பிறகு உலைப் பானையில் இடும்போது, இரவு ஊரெல்லாம் அடங்குகிற நேரம் ஆகிவிடும்!

ஓர் அகப்பை அன்னம்
இலையில் இட வெள்ளி எழும்!

ஓர் அகப்பைச் சோறு இலையிலே கொண்டு இடுவதற்கு முனையும்போது, அதிகாலைக் கிழக்கிலே வெள்ளி — சுக்கிரன் (விடிவெள்ளி) எழுந்துவிடும்!

கத்துகடல் சூழ்நாகைக்
காத்தான்தன் சத்திரத்தில்
அத்தமிக்கும் போதில்
அரிசிவரும் — குத்தி



உலையிலிட ஊரடங்கும்
ஓர் அகப்பை அன்னம்
இலையிலிட வெள்ளி
எழும்!

இந்த நிந்தையைக் கேட்டுவிட்டுக் காத்தானே வந்து புலவரை வேண்டிக்கொண்டதாகவும், உடனே காளமேகப் புலவர் இதே பாடலை மறுமுறை சொல்லி அதற்குப் புகழ்ச்சியாகப் பொருள் வரும்படி கூறினதாகவும் கதை.

புகழ்ச்சியான பொருள் எப்படி வருகிறது என்றால்,

அத்தமிக்கும்போதில் — உலகமே பஞ்சத்தினால் ஆழ்ந்துவிடுகிற காலத்தில்! அப்போதும் இந்தச் சத்திரத்திலே அரிசி வருமாம்! ஊர் அடங்கும் என்றால், ஊராருடைய பசி அடங்கும் என்று மறுபொருள்! அது போலவே இலையில் இடும்போது வெள்ளி எழும் என்றால் சோற்றை இலையிலே கொட்டும்போது அதன் வெண்மை நிறத்தைப் பார்த்துச் சுக்கிரனே நாணி எழுந்து போவான் என்று ஒரு சாதுரியப் பொருள்!

எது எப்படியானாலும் சத்திரத்து அன்னதானத்தை அம்மானை ஆடிவிட்டார் புலவர், சொற்களை வைத்துக் கொண்டு! ஆனால் இதே புலவர் காளமேகம் மனம் உருகிப் போய் இன்னொரு அன்னதானத்தை எப்படி மனம் விட்டு உருகிப் பாடுகிறார் என்று பார்ப்போம்.

திருப்பனந்தாளிலே நடக்கும் அன்னதானத்தைப் பாடுகிறார் காளமேகம்.

கொடும் பஞ்சம் வந்து, வானத்தில் மேகமெல்லாம் வறண்டு, மண்ணிலே நீர்நிலைகள் எல்லாம் வற்றிப் போய், புலவர்களுடைய கண்ணிலே அழுவதற்குக் கூட ஈரம் சுரக்காத அத்தகைய வற்கடத்திலும், உண்ணீர் உண்ணீர் என்று அன்போடு உபசாரம் செய்து தண்ணீரும் சோறும் தருவானும் திருப்பனந்தாள் பட்டன்.


**விண்ணீரும் வற்றிப் புவிநீரும் வற்றி
வெதும்பி அழக்
கண்ணீரும் வற்றிப் புலவோர் தவிக்கின்ற
காலத்திலே
உண்ணீர் உண்ணீர் என்றுபசாரம் சொல்லி
உபசரித்துத்
தண்ணீரும் சோறும் தருவான்
திருப்பனந்தாள் பட்டனே!**

(விண்ணீர் — மழைநீர். புவிநீர் — ஊற்று நீர், கடல் நீர் ஆகிய எல்லா நீர் நிலைகளும். வெதும்பி அழக் கண்ணீர் என்பது ரசிகமணி டி.கே.சி. பாடம்.)

இரண்டு வெவ்வேறு நிலையங்களிலே இரு வேறு நிலைகளிலே நின்று அன்னதானத்தைப் பாடுகிறார் புலவர். நிந்தையான வேடிக்கை காரணமாக அமைந்த அதே கவித்துவம், இரண்டாவது பாடலில் உருகி ஓடும்படியாகவும் எப்படி இயங்குகிறது பாருங்கள்!

திடுக்கிட ஒரு தகவல்!

ரேடியோ, எலெக்ட்ரானிக்ஸ் துறையின் ஐந்தாவது அகில இந்திய மகாநாடு சென்னையில் நடந்தது. எலெக்டிரானிக்ஸ் துறையில் தன்னிறைவு பற்றி அறிஞர்கள் கருத்துப் பரிமாறிக் கொண்டனர். மக்களுக்கான கண்காட்சியில் டெலிவிஷன் எல்லார் கவனத்தையும் ஈர்த்தது. நாட்டில் பரவலாக அது வந்தால் ஆட்சியிலுள்ளவர்களுக்கு விளம்பரச் சாதனமாகிவிடாமல் தேசிய எழுச்சிக்கும் கல்வி வளர்ச்சிக்கும் பயன்படும் சாதனமாகும் என நம்புவோம்! நம்பிக்கையில்தானே உலகமே இயங்குகிறது!



ரேடியோக்களின் விற்பனை நாட்டில் குறைந்துகொண்டே வருவதற்குக் காரணத்தை ஒரு நிருபர் அறிய முயன்ற போது, ஆண்டுதோறும் சுமார் ஐம்பதினாயிரம் அயல் நாட்டு ரேடியோக்கள் கள்ளக்கடத்தலில் வந்து விலை போகின்றன என்ற திடுக்கிட வைக்கும் ஒரு தகவல் கிடைத்தது. ரேடியோக்கள்மீதான உற்பத்தி, விற்பனை வரிகளும் லைசென்ஸ் கட்டணமும் குறைந்தால் கள்ளக்கடத்தலும் குறையும். நடக்கப் போகிறதா என்ன?

படம்: மகாநாட்டின் முக்கிய விருந்தினர்
பேராசிரியர் எம். ஜி.கே. மேனன்,
எலெக்ட்ரானிக் கமிட்டியின்
சேர்மன்


ஒரே ஒரு காசு செலவில் 1 சேலை அல்லது 3 சட்டைகள் பனிபோல் வெண்மை பெற...

மாக்ஸிம்*

எல்லா துணிகளுக்கும்
உகந்த ஏற்றமிகு ஒயிட்னர்

எவ்வளவோ சிக்கனமானது!

எந்த ஆடையாக இருந்தாலும் சரி, அதற்குப் புத்தம் புதிய வெண்மை ஒளியேற்ற சராசரி ஒரு துளி மாக்ஸிம் போதும். ஒவ்வொரு மாக்ஸிம் பாட்டிலும் சுமார் 1200 துளிகள் கொண்டது என்பது உங்களுக்குத் தெரியுமோ என்னவோ! எனவேதான் மாக்ஸிம் மிகவும் சிக்கனமான, வீரியமுள்ள நீலநிற திரவ வடிவ ஒயிட்னராக விளங்குகிறது. மேலும் விசேஷ ட்ராப்பர் மூடிகொண்ட பிளாஸ்டிக் பாட்டிலாக இருப்பதால், இன்னும் லாபம். ஏனெனில் தேவைக்கு மேல் ஒரு துளி கூட சிந்தாது. எனவே துளியும் வீணாவதில்லை, துணியும் நீலம் படிவதில்லை.




எல்லா துணிகளுக்கும் ஏற்றது

எல்லாவித துணிகளுக்கும் நீங்கள் மாக்ஸிம் உபயோகிக்கலாம். 'டெரீன் 'டெரீன்'/காட்டன், நைலான், உல்லன் சில்க் மற்றும் காட்டன் போன்ற எல்லா துணிகளுக்கும் மாக்ஸிம் வெண்மையூட்டி புதிய மெருகேற்றுகிறது. தவிர, மாக்ஸிம் துணியில் கறை ஏற்படுத்துவதுமில்லை.

உபயோக முறை மிகமிக எளிது

மாக்ஸிம் உபயோக முறை மிகமிக் எளிதானது. துணிகளை முதலில் சோப் அல்லது பிற சலவைச் சாதனங்கள் மூலம் சுத்தமாக துவைத்து நன்கு அலசி எடுக்கவும். பிறகு வாளியிலுள்ள (5 லிட்டர்) நல்ல தண்ணீரில் 10-15 துளிகள் மாக்ஸிம் விட்டுக் கலக்கவும். (பழுப்பேறிய துணிகளென்றால் கொஞ்சம் கூடுதல் துளிகள் மாக்ஸிம் சேர்க்கவும்) பின்பு துணிகளை 10—15 நிமிடங்களுக்கு அதில் ஊறவைக்கவும். மீண்டும் அலச வேண்டாம். அப்படியே உலரவிடவும்.





ஒவ்வொரு காசுக்கும் உரிய பலனைத் தருகிறது மாக்ஸிம்

GHM-23 TAH

*Regd. T.M. Geoffrey Manners & Co., Ltd.

ஆசை ஓர் அனாதை

பூவை ஆறுமுகம்

கல்லாவில் கறுகறுப்பு சூடு பிடித்த வேளை.

சரமாரியாக மோதி வந்து கொண்டிருந்த 'பில்'களின் புள்ளிகளைப் பார்த்துப் பணம் காசுகளைக் கல்லாவில் போடுவதிலும், உண்டான மீதச் சில்லறைகளைக் குறிப்பு உணர்ந்தும் குறிப்பு உணர்த்தியும் மேஜையின்மீது இருந்த கண்ணாடித் தகட்டின்மீது சரிபார்த்து வைப்பதிலும் முனைந்திருந்தார் சேர்வைக்காரர்.

இந்த அஷ்டாவதானத்திலும் அவரது உள் மனம், 'மகமாயி! எல்லாமே நீ இடுகிற பிச்சைதான். நீ அளக்கிற படிதான். ஆனால், எனக்கு இருக்கக்கூடிய அந்தக் குறையைப் போக்கி நிவர்த்தி பண்ண எப்பத்தான் நாள் பார்த்திருக்கியோ? அந்தத் துப்புத்தான் இந்தச் சின்னப் புத்திக்கு இன்னமும் மட்டுப்பட மாட்டேங்குது! எம் பேர் விளங்க வேண்டாமா? உன்னையே சதம்னு அடிச்சு விழுந்து ஏங்கித் தவிச்சுக்கிட்டு இருக்கிற எங்களுக்கும் ஒரு விடி பொழுது உண்டாக வேண்டியது தர்மம் இல்லியா? ஆத்தா மூத்தவளே!' என்று உருகி வழிந்தது.

அதே சமயம் அவரது கண்கள் அடுத்த 'பில்'லையும் அதனடியில் இருந்த நோட்டையும் துருவின. ஏறிட்டு நிமிர்ந்தார். ''அண்ணாச்சி! இந்த நோட்டு செல்லாது. வேறே கொடுங்க'' என்றார். இதமான பேச்சுத்தான். அட்டியில்லே.

வாடிக்கைக்காரர், ''இந்த நோட்டுக்கு என்னாங்க? ரெண்டு ரூபாய்க்குத் தாராளமா செல்லுமுங்களே ?'' என்று மறுமொழி கொடுத்தார். குரலில் 'நைச்சியம்' கலந்த கடுகடுப்பு.

சேர்வைக்காரரின் முகம் பின்னமடைந்து சிறுத்தது. ''ரெண்டு ரூபாய் நோட்டு ரெண்டு ரூபாய்க்குச் செல்லுபடியானால் போதாதுங்களா? நீங்க கொடுத்த இந்தக் கிழிசல் ரெண்டு ரூபாய் நோட்டு என் கடையிலே ஓடாது. ஆனதினாலே, வேறே கொடுங்க. இல்லாட்டி, தொண்ணூறு பைசாவாகச் சில்லறை கொடுத்திடுங்க. வியாபார நேரத்திலே வீணா வாயாட நேரம் இல்லே!'' என்று பட்டுக் கத்திரித்த மாதிரி பேச்சைக் கத்திரித்துவிட்டு, அடுத்த 'பில்'லைக் கவனிக்கலானார்.

முழுப் பெயர், முத்தையாச் சேர்வை. என்றாலும் அவரைச் சேர்வைக்காரர் என்றுதான் ஆவணத்தான் கோட்டைச் சாலை வட்டாரத்தில் அழைப்பார்கள். 'சேர்வை தேநீர் விடுதி' என்றால், சுற்று வட்டத்தில் ஒரு நல்ல பெயர். அங்கே போட்டுக் கொடுக்கும் சாயா மட்டுமல்ல, தோசை, குருமா, சூப், அதிரசம் எல்லாமே சூடும் சுவையும் கொண்டிருக்கும். 'மகமாயிக்குப் பயந்து சத்தியத்தோடவும் தருமத்தோடவும் நடக்க வேணும் என்கிறது தான் என் கொள்கை. அப்பாலே ஆத்தா விட்ட வழி!....' என்பார் அவர் அடிக்கடி.


மணி ஒன்று அடித்தது.

அதாவது, மணி எட்டு முப்பது.

சந்தடி பையப் பைய முடங்கிக் கொண்டிருந்தது.

பசிக்கும் நேரம் காலம் உண்டு அல்லவா?

முத்தையாச் சேர்வை முன் நெற்றியில் அழும்பு பண்ணிக் கொண்டிருந்த முடி இழைகளைக் கோதிவிட்டுக் கொண்டார். கறுப்பும் வெள்ளையும் வர்ண பேதம் காட்டின. திருநீற்றுப் பட்டைகள் வேர்வையில் கரைந்திருக்க வேண்டும். ஏக்கத்தில் கரைந்து உருகும் அவரது உள்ளத்தைப் போலவோ? கல்லாவை இழுத்தார்; மகிழ்ச்சி தளும்பியது. நெஞ்சில் நின்ற மகமாயி நினைவிலும் நின்றாள்.



அதோ, ஆடி வரும் தேராக; குழந்தை ஒன்று தத்தித் தத்தி நடை பயின்றது. பக்கத்துப் பெட்டிக்கடைக்காரரின் மழலை அது.

அந்தக் குழந்தையையே தொடுத்த விழி எடுக்காமல், பதித்த நெஞ்சம் விலக்காமல் பார்த்தார் சேர்வை. நெஞ்சில் கொப்புளித்த ஏக்கம், இனம் கண்டுணராத பாசத்தின் கலங்கலோடு, கலக்கத்தோடு கண்களை எட்டிப் பார்த்தது. கடுமை மிக்க மீசைக்கு அடியில் கனிவு பூக்க, ''ஏ, பாப்பா !'' என்று விளித்தார். சுவாமிக்குப் படைத்த பூவன் பழம் கையில் இருந்தது.

சித்தம் போக்கு சிவன் போக்கு என்பார்கள்.

குழந்தையும் அப்படித்தானே ? அது தன் பாட்டில் தன் அப்பாவைத் தேடிச் சென்றது.

ஏமாற்றம் பிடரி பற்றியது.

ஏக்கம் உந்தியில் கழித்தது.

'மகமாயி ! எங்கனு பலிக்காதாங்காட்டி!' சேர்வைக்கு இருக்கை கொள்ளவில்லை. நாற்காலித் திண்டு முள்ளாயிற்று. 'ஊர் நாட்டைப்போலே எங்களுக்கும் ஒரு குஞ்சைக் காட்டினால், ஆத்தாளுக்குக் குறைஞ்சாபோயிடும்?..... எங்க பொசிப்பு அம்புட்டுத்தானே? பாவம், வள்ளிப் பொண்ணு !'

'' முத்தையா !''

சேர்வை ஏறிட்டுத் திரும்பினார், கல்லாவை மூடிக் கொண்டே. கனவுகள் கோலமிட்ட மனத்தை மூட வகை புரியவில்லைதான். ''ஓ, அண்ணுச்சிங்களா? வாங்க, வாங்க, அப்படிக் குந்துங்க!'' என்று உபசரித்தார். தங்கப் பல் மின்னிற்று.

''சொகந்தானே?''

'' ஒங்க புண்ணியத்திலே சொகந்தானுங்க.''

''வள்ளியம்மை?''

''அதுவும்தானுங்க!''

தெய்வத்துக்குச் சேர வேண்டிய புண்ணியத்தைத் தட்டிக் கொண்டதில் ஒரு பெருமிதம். ''வேறே விசேஷம் எதுனுச்சும்....?'' என்று பரோட்டாவுக்குப் பிசைந்து வைத்த மைதா மாவாக இழுத்தார் பனங்குளம் அண்ணுச்சி. மீசை நரை கண்டாலும், ஆசை நரை காணாத—காண இயலாத புள்ளி அது. இல்லாவிட்டால், வீட்டிலே சந்தைக் கடையாக மனைவியும் மக்களும் நிரம்பி வழிய, இரண்டாம் தாரமாக ஓர் ஏழைப் பூஞ்சிட்டைக் கண்ணி வைத்துப் பிடித்துக் கொண்டிருப்பாரா? ஜரிகைத் துப்பட்டா மினுக்கியதே!

அண்ணுச்சியின் வினா — விதியின் சவாலாகத் தொனித்திட்ட வினாவுக்கு முத்தையாச் சேர்வை என்ன பதில் மொழிவார்? எப்படி விடை பகர்வார் ? பாவம் !

பாவ புண்ணியத்தின் ஐந்தொகைக் கணக்கு கேவலம் மனித ஜடங்களுக்குப் புரிந்து விடுமா? புரிந்துவிடலாமா?

''மற்றப்படி விசேஷம் ஏதாச்சும் உண்டா முத்தையா?''

'' விசேஷம் என்னங்க மாயமாய்க் குதிச்சிடப் போவுது ? நான்தான் கொடுத்து வைக்



காத பாவி ஆகிப் பூட்டேனுங்களே, அண்ணாச்சி ?''

விதியை ஒத்துச் சிரிக்க ஆரம்பித்தார் அண்ணாச்சி. ''முத்தையா, நீ பாவியா ? ஊகூம், நான் ஒப்ப மாட்டேன். நீயும் புண்ணியவான் ஆகலாம். ஆனால், நீதான் எம் பேச்சை ரோசிக்கப் பார்க்கமாட்டேங்கிறியே? வள்ளியம்மைகிட்டே பயப்படாமல் ஒரு வார்த்தை சொல்லிப்புட வேண்டியது தானே ? உன்னோட சொத்துச் சுகத்தைக் கட்டி ஆளவும் உங்களுக்கு என்னும் தண்ணியும் இறைக்கவும் உனக்கின்னு — உங்களுக்கின்னு ஒரு வாரிசு வேணுமாக்கும்? தைக் கெடு தப்புறதுக்குள்ளாற நீ துருக காட்டித் தலையை அசைச்சிட்டா, நான் சொன்ன பூவத்தக்குடி குட்டியைத் திகைச்சிட வைச்சிடுவேன்!'' என்று உபதேசம் பண்ணினார்.

சேர்வை வழக்கத்தை மாற்றாமல் நெடுமூச்செறிந்தார். ''ரோசனை பண்ணிச் செப்புறேனுங்க, அண்ணாச்சி !'' என்றார். முன்றானை விரித்த ஆசை வள்ளியம்மையின் பவித்திரமான அந்த வெள்ளைச் சிரிப்பை அவர் எப்போதுதான் மறந்தார்? விதிப் பேச்சை—விதியின் பேச்சை மடை மாற்ற வேண்டும். '' தாகத்துக்கு ஏதாவது சாப்பிடுங்க, அண்ணாச்சி!'' என்றார்.

அண்ணாச்சியின் முறுக்கு மீசை விழித்தது.

'' இன்னிக்குப் பொங்கல். இன்னிக்கு நீங்க காசு பணம் தர வேண்டாமுங்க!''

''ஓ, அப்பிடியா ?.....ம்....!''

டீ மாஸ்டரைத் தேடினார் சேர்வை.

அப்போது:

பலகாரம் பரிமாறும் கோவிந்தன் யாரோ ஒரு பொடியனைத் தலை முடியை மூர்த்தண்யமாகப் பற்றிப் பிடித்தபடி வந்து கொண்டிருந்தான்.

''கோவிந்தா! என்ன சங்கதி?''

''இந்தத் திருட்டுப் பொடிப் பயல் வள்ளிசா ஒரு ரூபாய்க்குத் தின்னுட்டுக் கொல்லையாலே ஓடப் பார்த்தான். கையும் களவுமாய் லாந்திப் பிடிச்சிட்டேன். காசு இல்லையாம். 'சரிடா, மேல் சொக்காயைக் கழற்றுடா' அப்படின்னு சொன்னக்க, 'முடியாது' அப்படின்னு சவடால் பேசுறானுங்க, முதலாளி!''

சேர்வை ஏனோ அந்தச் சிறுவனை இமை கொட்டாமல் பார்த்த வண்ணம் இருந்தார். கண்கள் இரண்டும் ஏன் அப்படித் 'தொளி உழுத' வயலாகிவிட்டதாம்?

கோவிந்தன், ''டேய், சட்டையைக் கழற்றுடா!'' என்று ஆணை பரப்பினான் மறுபடியும்.

''முடியாதின்னா முடியாதுதான்!'' சின்னப் பயலுக்கு இப்படியொரு நிர்த்தாட்சிண்யமான வாய் வீச்சா?

முத்தையா சேர்வை முன்கோபி. என்றாலும், அப்போது அவர் மனத்தில் அந்தத் திருட்டுப் பயலின் திமிர் வாதம் பதியவில்லை; அந்தச் சிறுவனின் பால்வழியும் வதனம்தான் பதிந்தது.

பனங்குளம் அண்ணாச்சிக்கு மீசை துடித்தது. மீசை நரைத்தால் என்னவாம்? அது துடிக்காதா? இல்லை, துடிக்கத் தெரியமாட்டாதா? ''முத்தையா! என்னத்துக்கு அப்பிடி மலைச்சிட்டே? அந்தக் களவாணிப் பொடிசை உக்கிராணத்திலே போட்டு அடைச்சிடு'' என்று அடுத்த உபதேசத்தை முன்மொழிந்தார். அண்ணாச்சியா, கொக்கா?

சேர்வை பனங்குளம்காரரையும் பொடியனையும் மாறி மாறி — மாற்றி மாற்றிப் பார்வையிட்டார். 'மகமாயி! எங்க எழுத்தும் நல்லதனமாய் விதிச்சிருந்தாக்க, வள்ளியம்மை வயிற்றிலேயும் ஒரு பூச்சி பொட்டு உண்டாகியிருந்தாக்க, இந்தப் பயல் கணக்கிலே வளர்ந்திருப்பானில்லே!' தொண்டையைக் கனைத்துக் கொண்டார்; மீசையை நீவிவிட்டார். வேஷ்டியை எடுத்து முக விலாசத்தை லாகவமாகத் துடைத்துக் கொள்ளவும் தெரிந்திருந்தது. அவர் பார்வை தடம் புரண்டது; திசை மறுகியது. ''யனப்பா, நீ யாரு?'' என்று அடங்கிய குரலெடுத்து விசாரித்தார் முத்தையா சேர்வை.

''பார்த்தால் தெரியலிங்களாக்கும்? நான் சின்னப் பையன்!''

சேர்வை வினயமாகச் சிரித்தார். ''வாஸ்தவம்தான். அது தெரியாதாப்பா. நீ எந்த ஊர்?... உன் அப்பன் யார்? ஆத்தா யார்?'' என்று அடுத்த விசாரணையைத் தொடங்கினார் அவர்.

சட்டைக் காலரை வெகு அமர்த்தலாகத் தூக்கி விட்டவனாக, சேர்வையை ஏகத்தாளமாக முறைத்தான் சிறுவன்.

''அந்தக் கேள்விக்கெல்லாம் விடை தர இது சமயம் இல்லே!... பசியைத் தாள முடியல்லே எனக்கு. அதாலே மூச்சுப் பிடிக்கச் சாப்பிட்டிட்டேன். மடியிலே காசு இல்லாமல் சாப்பிட்டது நியாயம் இல்லேங்கிறது தெரியும்தான். நான் என்ன செய்யட்டும்? பசிக்கு எந்நிலைமை புரியாமல் பூட்டுதே?... சரி, விஷயத்துக்கு வாரேன். உங்களுக்குச் சேரவேண்டிய காசு பணத்துக்கு வேணும்னா அரை நாள் நான் உங்க அடுப்படியிலே கூலி வேலை பார்த்துக் கொடுத்துப்பிடுறேன். ஆனால், என்னோட சொக்காயைக் கழற்றச் சொல்ல உங்களுக்கு யாருக்கும் அதிகாரம் கிடையாதாக்கும்!'' என்று சட்டம் பேசினான் பொடியன்.

அண்ணாச்சி எழுந்தார். அவரது காய்ப்புக் கண்டிருந்த கைகள் துருதுருத்தன.

அண்ணாச்சியை நோக்கிக் கை அமர்த்தலானார் சேர்வை. ''ஏ தம்பி! நீ செஞ்ச தப்பு உனக்குப் புரிஞ்சிருக்கு. அதுபோதும். நீ சாப்பிட்ட காசுக்கு வேலை வெட்டி ஒண்ணும் செய்ய வேணாம். மூச்சு விடாமல் நடையைக் கட்டு!'' என்றார் முத்தையாச் சேர்வை.

அதே அமர்த்தலோடு — அதே ஆணவத்தோடு அந்தச் சின்னப் பயல் முறைப்பாகவும் விரைப்பாகவும் தயங்கித் தயங்கி நடந்தான், வெளியே!

''நீ சுத்த மோசம், முத்தையா!''

முத்தையாவுக்கு அப்போதும் சிரிக்க மட்டுமே தெரிந்தது!

சீல்லாகச் சமைந்திருந்த வள்ளியம்மை, இட்டி வாசலில் நடையன் சத்தம் கேட்டதுமே எச்சரிக்கை அடைந்தாள். மஞ்சள் பூச்சும் குங்குமத் திலகமும் பிசகாமல் வேர்வை முத்துக்களை ஒற்றியெடுத்தாள். கொண்டைப் பூச்சரத்தைச் சரிசெய்தாள். சரிந்து விழுந்து கிடந்த பொங்கல் பட்டினைச் சீராக்கிக்கொண்

டாள். புதுக் கருக்குக் குலையாமல், ''வாங்க மச்சான்!'' என்று முகமன் மொழிந்தாள்.

தாய்ப் பசுவின் பால் மடியை நக்கி 'நப்பு'க் கொட்டிக் கொண்டிருந்தது வெள்ளைக் கன்று. வெண்மைக்கென்று ஓர் எழிற் கவர்ச்சியா?

முத்தையாச் சேர்வை அந்தக் கன்றை அன்ளக் குறையாத பாசத்தோடு — பாசப் பரிவோடு — பாசத் தவிப்போடு மெல்ல மெல்ல— மெள்ள மெள்ளத் தடவிக் கொடுத்தார். கைகள் காற்றிடை அல்லாடித் தள்ளாடும் மலர்களாக நடுங்கின.

வள்ளியம்மையின் விழி முனைகள் கசிந்தன. அவள் தன அன்புக் கணவனையும் அந்தப் பசுங் கன்றையும் மாறி மாறிப் பார்த்தாள். வெய்துயிர்ப்பு சுட்டது.

''வள்ளியம்மை!'' என்று அன்போடும் பாசத்தோடும் நேசமுற அழைத்த முத்தையாச் சேர்வைக்காரர் தம் அருமை மனைவியையும் அந்த வெள்ளைக் கன்றுக்குட்டியையும் நோக்கினார். நெஞ்சிடை நீக்கமற நிறைந்து பிரதிபலிப்புச் செய்த வண்ணம் இருந்த அந்த வெள்ளை நிறத்தில் விளைந்த அமைதியோடு அவர் வள்ளியம்மையை மறுபடியும் கண்டுருவினார். 'வள்ளிப் பொண்ணே! நம்பளோட ஆசைக் கனவை எப்பத்தான் ஆயி மகமாயி பலிதமடையச் செய்யப் போகிறாளோ, விளங்கலையே?'

''வாங்க மச்சான், பசியாறலாம்!''

''ஆகட்டும்!'' என்று தலையை உலுக்கினார் அவர். 'இந்தப் புண்ணியவதிக்கு மனசு இரங்காமல் ஆத்தா கல்லாகிப் போயிருக்காளோ? என்னோட வள்ளிக்கும் குழந்தை ஏக்கம் என்னை மாதிரி மிதமிஞ்சி இருக்கத்தான் இருக்கு. அதுக்காக.... பிள்ளை குட்டிக்காக இரண்டாந்தாரமா ஒருத்தியைக் கண்ணாலம் கட்டிக்கலாம்னு ரோசிக்கிறேன்னு எந்த முகத்தை வைச்சுக்கிட்டு என் வள்ளித் தெய்வத்துக்கு முன்னாடி நான் வாய் தூக்க ஏலுமாம்? ... சுத்தப் பைத்தியக்காரராய் இருக்காரே அந்த அண்ணாச்சி?'' நடையில் நடை தொடர்ந்தார் சேர்வை.

''என்னாங்க மச்சான் ஒரே முட்டா ரோசனையாய் நிக்கிறீங்க?''

சேர்வை விழித்தார்; விழித்தவருக்குச் சமாளிக்கத் தெரிந்தது. ''ஒண்ணுமில்லையே?... நான் ஒண்ணும் ரோசனையாய் நிற்கல்லியே? நீதான் என்னமோ ரோசிச்சுக்கிட்டு இருக்கிற தாட்டம் படுது, வள்ளிக்குட்டி!'' என்று புன்னகை செய்தார்.

அவர்களது ஆதர்சத் தாம்பத்தியச் சிரிப்பு வடமுனைச் சுவரில் விதியாய் — விளையாய் — தெய்வமாய், புதிர்ச் சிரிப்பை அறக் கருணையோடும் மறக் கருணையோடும் வெளிப்படுத் தியவண்ணம் நின்ற அந்தப் பால முருகனின் அந்த அழகுச் சிரிப்பில் பிரதிபலித்தது.

''நம்ப ரெண்டு பேர் ரோசனையும் நமக்குப் புரிஞ்ச கதைதான்; தெரிஞ்ச காரணந்தான். ஆனால், ஆத்தாளுக்கில்லா அது புரிய வேணுமுங்க, மச்சான்!''

வெள்ளித் தட்டில் பொங்கல், வடை, இட்டிலி எல்லாம் காட்சி கொடுத்தன.

சட்டையைக் கழற்றிக் கட்டிலில் வீசிவிட்டு விரிப்பில் குந்தினார் முத்தையா. கழற்றிப்

போட்ட சட்டையின் பின்புலத்தில் கழற்றாத சட்டையோடு காட்சி தந்து மறைந்து விட்ட அந்த அழகுச் சிறுவன் நிழலாடியிருக்க வேண்டும். அன்பின் ஈரம் விழிகளுக்குத் தாவியதோ?

''ம்.... சாப்பிடுங்க!''

''ஊம்!''

சேர்வைக்காரர் கருக்கரிவாள் மீசையை ஒதுக்கி விட்டுக் கொண்டு, பொங்கலைக் கிள்ளி ஒரு துணுக்கை எடுத்து வாயில் போட்டுக் கொள்ளப் போனார்.

அதற்குள்:

''ஐயா!''

அவர் நிமிர்ந்து பார்த்தார். புதையல் எடுத்த தனமாக அவரது நெஞ்சில் அந்த ரங்கத்தில் குதூகலம் பிசிறு தட்டி ஊற்றெடுத்தது.

'யாரு இந்தப் பொடிசு?' வள்ளியம்மை இனம் புரியாத் தவிப்படைந்தாள்; இனம் புரிந்த பாசத்துக்கு அடிமைப்பட்டாள்; அவனை விழுங்கி விடுபவள் மாதிரி பார்த்தாள்.

''வாப்பா, தம்பி, வா!''

தேநீர்க் கடையில் 'தரிசனம்' கொடுத்துச் சென்ற அந்தப் பொடியன் அதே பழைய அமர்த்தலோடும், ஆணவத்தோடும் அகம் பாவத்துடனும் சிரித்தான். விதியைப் போலவா? இல்லை, தெய்வத்தைப் போலத் தானோ?

''குந்து, தம்பி!'' என்றார் சேர்வை. இந்தச் சிறுவனைப் பற்றி வள்ளியம்மையிடம் சொல்ல வேளை கணித்துக் கொண்டிருந்தவர் சேர்வை. இப்போது, அவனே வந்துவிட்டானே? இவன் கதையைக் கேட்டு, எல்லாம் அனுசரணையாக வாய்த்தால் இவனையே 'சுவீகாரம்' எடுத்துக்கொண்டால் என்ன? ஆத்தா மகமாயி!....' பாசம் புதுப்புனலாயிற்று.

''தம்பி, உட்காரேன்!''

''தம்பியா? திரும்பத் திரும்பச் சொல்றீங்களே? நான் உங்க தம்பியா?''

''பின்னே?''

''நான் உங்க மகன்!'' என்று முழங்கினான் அந்தப் பையன்.

''என்ன?'' என்று அதிர்ந்தார் முத்தையாச் சேர்வைக்காரர்.

'ஆ!' என்று மலைத்தாள் வள்ளியம்மை.

''என்ன அப்பா நடிக்கிறீங்க?... உங்களுக்குச் செல்லாயியை மறந்து போயிடுச்சுதா?... ஆசை காட்டி மோசம் செய்த அந்தப் பழங் கதையை நீங்க மறந்திடலாம்; ஆனால், தெய்வம் மறந்திடுமாக்கும்? அந்தப் பாவம் பழிக்குத்தானே உங்களை மகமாயி சோதிச்சுக்கிட்டு இருக்கா; அந்தத் துப்புக்கூடவா உங்களுக்கு இன்னமும் அத்துபடியாகலே? சாட்சிக்கு என்னைப் பெற்ற புண்ணியவதியையும் கையோட இட்டுக்கிட்டு வரத்தான் நினைச்சிருந்தேன். ஆனால், என் ஆத்தா திடுதிப்னு மாரடைப்பிலே கண்ணை மூடிக்கிட்டுது. ஒரு நாள் முச்சூடும் பச்சைத் தண்ணி பல்லிலே படாமல் குந்தி யிருந்து அழுதேன். அந்தப் பசியோடதான் உங்க கடையை இனம் கண்டுக்கிட்டு புகுந்து சாப்பிட்டேன், காலம் பற. நாலு பேருக்கு முன்னே ஊருக்கு ஒசந்த உங்க மானத்தை வாங்க வேண்டாம்னு மனசு இரங்கினேன். நான் கும்பிடுற என் ஆத்தாளோட கடைசி ஆசைப்படி, நான் உங்ககிட்டே வந்திருக்கேன்! ஆயி மகமாயி கட்டளையும் என் விதியும் இப்படித்தான் இருக்க வேணும் போல!''

சிறுவனின் பேச்சில்தான் எத்தனை கம்பீரம்! எவ்வளவு சோகம்! மடை திறந்த வெள்ளமாக விழிப் புனல் உடைந்தது.

''மகனே!'' என்று வீறிட்டுக் கதறிய முத்தையாச் சேர்வை உணர்ச்சி வசப்பட்டவராக ஓடிப்போய் அந்தச் சிறுவனை அப்படியே வாரி யணைத்துக் கொண்டார்.

''அப்பா! அப்பா!''

சிறுவன் விம்மினான்; செருமினான். பாசத்தின் அரவணைப்புத் தாங்காமல்தான் அவன் அப்படித் திணறுகிறானோ? சட்டைப் பையைக் கெட்டியாகப் பற்றிக் கொண்டிருந்தன பிஞ்சுக் கரங்கள்.

சிலைக்கு உயிர் இருக்குமோ?

சேர்வை திரும்பினார். ''வள்ளிப் பொண்ணு! நம்ப மகன் சொன்னது சாடாவும் மெய்யான தாக்கல்தான். என்னைப் பெரிய மனசு வைச்சுச் சமிச்சுப்பிட மாட்டியா?'' கெஞ்சினார். தாயைக் கெஞ்சாத பிள்ளை, அப்படி!

''மகனே!'' வள்ளியம்மையின் அன்பெனும் பிடியில் அடங்கினான் அச்சிறுவன். ''ஆத்தான்னு கூப்பிடுடா, எந் தெய்வமே!... எங்க தெய்வமே!'' என்று விம்மினாள் அவள்.

''ஆத்தா!... ஆத்தா!''

ஓடிப் போய் ஓடிவந்தாள் வள்ளியம்மை. புதிய வெள்ளித் தட்டில் பொங்கல், வடை, இட்டிலி எல்லாம் இருந்தன. ''மகனே, சாப்பிடப்பா!'' என்று கெஞ்சினாள்.

''ம்.... சாப்பிடப்பா!'' என்று வேண்டினார் சேர்வைக்காரர்.

அந்தச் சிறுவன் கண்ணீரைக்கூடத் துடைத்துக் கொள்ளாமல் அவர்கள் இருவரையும் மாறி மாறி – மாற்றி மாற்றிப் பார்வை பரப்பினான். மறு கணம் நமட்டுச் சிரிப்பொன்று வெடித்துச் சிதறியது. ''ஐயா! நீங்களும் உங்க சம்சாரமும் தெய்வமேதான்! நான் பாவி! மன்னிக்கமுடியாத நாதியத்த பாவிப் பயல் நான்!... என்னைப் பெற்ற அப்பனையும் ஆத்தாளையும் யாருன்னே தெரிஞ்சுக்கவும் கொடுத்து வைக்காத பாவி ஆகிப் போன நான் அப்பனுக்காகவும் ஆத்தாளுக்காகவும் ஏங்கித் தவிச்சுத் துடிச்சுக்கிட்டு அலைஞ்சேன். சாகுறதுக்குள்ளே 'அப்பா, ஆத்தா' அப்படின்னு ஆசை தீர ஒருவாட்டி, ஒரேயொருவாட்டியாச்சும் கூப்பிட்டு நிம்மதி அடைஞ்சிடக் கனா கண்டேன். அதுக்காகத் தான் பொய்க் கூத்து ஆடினேன். அந்தக் கூத்து விஷப்பரீட்சை ஆகிடலே. மகமாயி இந்தமட்டுக்கும் என் வரையில் நல்லவள் தான்!... என்னை மன்னிச்சுடுங்க. போய் வரேன்.''


''சிக்கெனப் பிடித்தபின் நீ இனி எங்கே போவது? ஆத்தா எங்களுக்குமே நல்லவள் தான். அவளாகப் பார்த்து உன்னைப் பிள்ளையாகக் கொடுத்தபின் நாங்கள் விடுவோமா?''

அம்மன் ஆசையை அநாதையாக்குவதில்லை என்று உறுதிப்படுத்தியது அந்தப் பேச்சு.


Printed & Published by R, Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras 600031
Managing Editor: T. Sadasivam

அருமையான இனிப்புகள்!
நீ இவற்றை எப்படித்தான்
செய்கிறாயோ!

ASP/AMP-14



இரகசியம்—
அமுல் மில்க் பவுடர்!



ஹல்வா, பாயசம், மில்க் ஷேக், பர்ஃபி, ஐஸ் க்ரீம்—எது தயாரிக்க விரும்பினாலும், சுவை கொழிக்கச் செய்திடும் அமுல் மில்க் பவுடர்.

அமுல் மில்க் பவுடர் கைவசம் இருந்தால் ஆரோக்கியமான நல்ல பாலையும், கட்டியான ஆடைத் தயிரையும் தட்டில்லாமல் பெறலாம். கறியுடன் இரண்டொரு ஸ்பூன் அமுல் மில்க் பவுடர் சேர்த்தால், வளமையுடன் சுவை கொழிக்கும். மிகவும் வசதியானது; சிக்கனமானதும் கூட!

அமுல் மில்க் பவுடர்— ஆரோக்கியமான நல்ல பாலை அமோகமாகத் தருகிறது.

Registered No. M. 4392
Registered as a Newspaper in Ceylon இலங்கையில் விலை 45 சதம் (தபால் செலவு தனி)